# கொள்கை - திட்டம்

## (இறுதி வரைவு)



மக்கள் சனநாயக குடியரசு கட்சி

தோழர்களுக்கு,

கடந்த 2011 ஏப்ரலில் நமது கட்சியின் கொள்கை திட்ட வரைவு அறிக்கை தயாரிக்கப்பட்டது. இது மே 5, 2011இல் நடந்த முதல் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. அவ்வறிக்கையில் வரலாறு மற்றும் திருத்தங்கள் இறுதி வரைவு அறிக்கையில் கொண்டு வரப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அமைப்பு சிக்கல் மற்றும் இரண்டு கைதுகள் காரணமாக இறுதி வரைவு அறிக்கை தயாரிப்பு தாமதமானது.

கடந்த 28.4.2014இல் நடந்த நிலைக்குழுக் கூட்டத்தில் தோழர்கள் துரைசிங்கவேல், பழனி ஆகியோரால் தயாரிக்கப்பட்ட இறுதி வரைவு அறிக்கை விவாதிக்கப்பட்டது. இவ்வறிக்கை மையக் குழுவில் முன்வைத்து சுற்றுக்கு கொண்டு செல்வது என தீர்மானிக்கப்பட்டது.

இவ்வறிக்கை இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதல் பகுதி தமிழ்நாடு வரலாறாகும். நமது கட்சி தமிழக வரலாற்றைப் பற்றி மாறுபட்ட கண்ணோட்டங்களைக் கொண்டிருப்பதால் இக்கொள்கை அறிக்கையிலேயே வரலாற்றை இணைப்பது என்று முடிவு செய்தோம்.

இவ்வறிக்கை மீதான விமர்சனங்களை, ஆலோசனைகளை முன்வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். இந்த இறுதி வரைவு அறிக்கை மாநாட்டிலோ அல்லது பேராயத்திலோ இறுதி செய்யப்படும்.

தோழமையுடன்
நிலைக் குழு
மக்கள் சனநாயக குடியரசு கட்சி

I

# தமிழக வரலாறு

இன்றைய தமிழகம் கிழக்கில் வங்களா விரிகுடாக் கடலையும், தெற்கில் இந்தியப் பெருங்கடலையும், மேற்கில் மேற்கு தொடர்ச்சி மலை - கிழக்கு தொடர்ச்சி மலைகளையும், வடக்கில் கிழக்கு தொடர்ச்சி மலையையும் எல்லையாகக் கொண்டது. தமிழகம் கிழக்கில் கடற்கரை மற்றும் சமவெளிப் பகுதியையும் மேற்கில் மலை சார்ந்த வரட்சிப் பகுதியுமாக இரு நெடும்பகுதிகளை இருபிரிவுகளாக கொண்டிருக்கிறது.

தமிழகத்தின் வடக்கில் ஆந்திர மாநிலமும், மேற்கில் கேரளா, கர்நாடகா மாநிலங்களும், தென் கிழக்கில் இலங்கை நாடும் அண்டைய நிலப்பகுதிகளாக அல்லது அரசுகளாக உள்ளன.

இன்றைய தமிழகம் வரலாற்றில் எப்பொழுதும் ஒன்றுபட்ட பகுதியாக இருந்தது கிடையாது. 1956-ல் மொழிவாரி மாநிலங்கள் அமைந்ததை ஒட்டி மெட்ராஸ் மகாணத்தில் இருந்த தமிழகத்தின் பெரும்பகுதியும், புதுக்கோட்டை சமஸ்தானமும், திருவாங்கூர் சமஸ்தானத்தில் இருந்த கன்னியாகுமாரி மாவட்டமும் இணைந்து இன்றைய தமிழகம் உருவானது.

தமிழகம் பற்றி தெரிந்து கொள்ள சுருக்கமாக வேணும் வரலாற்றை தெரிந்துக் கொள்ள வேண்டியுள்ளது. முதலில் வரலாற்றை தொகுத்தவர்கள் அய்ரோப்பியர்கள் ஆவர். உலகம் முழுவதும் ஒடுக்கிக் கொண்டிருந்த அய்ரோப்பியர்களின் மேலாதிக்கத்தை நியாயப்படுத்தும் நோக்கிலேயே கருத்துக்கள் வெளியிடப்பட்டன. அதில் முக்கியமானது ஆரிய இனவாத மேன்மையை முன்னிறுத்தியது. நாகரீகங்களே ஆரியர்களால்தான் உலகுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. என பெருமையடித்தனர். இதனால் தங்களது ஆட்சி இந்திய துணை கண்டபகுதி மக்களுக்கு சொர்க்க வாசலை திறந்து வைக்கும் என்று கதையளந்தனர்.

இதையொட்டியே பிராமணர்கள் தங்களின் ஆரிய மேன்மையை உயர்த்தி பிடித்து வரலாற்றை கட்டமைத்தனர். இதற்கு எதிராக திராவிட மேன்மையை உயர்த்தி பிடிக்கும் வரலாறும் கட்டமைக்கப்பட்டது.

இவற்றிற்கு மாற்றாக தமிழ் இனவாதத்தை மேன்மைபடுத்தும் வரலாறுகளும் புனையப்பட்டன.

மேற்கண்ட இனவாத மற்றும் உள்நோக்கம் கொண்ட வரலாற்றாய் வுகளுக்கு மாறாக உண்மையை தேடும் நோக்கிலும் ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டன. அவைகளைத் தேடித்தான் நாம் உண்மைகளை நோக்கி செல்ல முடியும். இப்போக்கிலேயே நாமும் தமிழகத்தின் வரலாற்றை பார்க்க முற்படுவோம்.

நமது அன்பிற்குரிய தமிழகம் உலகின் மிகவும் தொன்மையான வரலாற்றைக் கொண்டது. உலகில் மக்களால் பேசப்படும் தொன்மையான மொழிகளுள் ஒன்று சீனமொழி மற்றொன்று தமிழாகும். தமிழகத்தின் வரலாறு தனக்கேயான குறித்த பண்புகளை கொண்டுதான் இருக்கிறது. அதே சமயத்தில், தமிழகமும் மற்ற சமூகங்களைப் போல மனித குல வரலாற்றின் முக்கிய கட்டங்களை கடந்தே வந்துள்ளது.

அதாவது, பழையகற்காலம், புதியகற்காலம், பெருங்கற்காலம் என்று வரலாற்றுக்கு முந்திய கட்டங்களையும் வரலாற்றுக்கு பிந்திய திட்டவட்டமான வர்க்க சமூகங்களையும் கொண்டிருக்கிறது. இவைகளை மிக சுருக்கமாக பார்ப்போம்!

## கற்காலம்

திருவள்ளூர் மாவட்டத்தில் அத்திரம்பாக்கம் என்ற ஊருக்கருகில் கொசஸ்தலை (கோர்த்தலை) ஆற்றுப்படுகையில் கல்லாயுதங்களைச் செய்த தொழில் பட்டறைகள் கிடைத்துள்ளன. இப்பகுதியில் சுமார் 15 லட்சம் ஆண்டுகளுக்கு முன் மக்கள் வாழ்ந்துள்ளனர். என்று கருதப்படுகிறது. இதைக் கணக்கில் கொண்டால் தமிழகத்தின் பழைய கற்காலங்களை 15 லட்சத்திலிருந்து கி.மு. 10,000 ஆண்டுகள் வரை உள்ளடக்கலாம்.

## நுண்கற்காலம்

சிறிய கல்லாயுதங்களை பயன்படுத்தியதால் நுண்கற்காலம் என்று பெயரிடப்படுகிறது. நுண் கற்காலக் கருவிகள் தாமிரபரணி ஆற்றின் கரைகளில் "தேரிகள்" எனப்படும் மணற் தி ட்டுகளில் கண்டெடுக்கப்பட்டன. மேலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மயிலாடும் பாறை என்ற இடத்திலும் நுண்கற்கால கருவிகள் கிடைத்துள்ளன.

நுண் கற்காலத்தின் காலம் கி.மு 10,000 லிருந்து கி.மு. 4000 வரை என்று கருதப்படுகிறது.

## புதிய கற்காலம்

வேலூர் மாவட்டத்தில் பையம்பள்ளி என்ற இடம் புதிய கற்காலத்தின் முக்கிய இடமாக கருதப்படுகிறது. இப்பகுதியை ஒட்டிய பல இடங்களில் புதிய கற்கால மக்கள் வாழ்ந்துள்ளனர்.

புதிய கற்காலம் என்பது மனிதகுல வரலாற்றில் மிக முக்கியமான புரட்சிகர காலமாகும் நாடோடிகளாக திரிந்த மக்கள் நிலையான வாழ்க்கையை மேற்கொண்டனர். குடிசை வீடுகளை அமைத்துக்

கொண்டனர். மேட்டு நில விவசாயம் செய்யத் தெரிந்திருந்தனர். கொள்ளு, பச்சைபயிறு போன்றவைகளை பயன்படுத்தி உள்ளனர். ஆடு, மாடு, பன்றி, மான், காட்டுப்பூனை போன்ற விலங்குகளை வளர்த்துள்ளனர்.

புதிய கற்காலம் கி.மு, 4000க்கும் கி.மு. 1000க்கும் இடைப்பட்டது என்று கருதப்படுகிறது.

## பெருங்கற்காலம்

இறந்தவர்களை அடக்கம் செய்யும் வழக்கம் "புதிய கற்காலத்தில்" தோன்றியது. இது பின்னர் அடுத்த கட்டத்தில் நினைவு சின்னங்களை எழுப்பும் வழக்கமாக மாறியது. பெரிய பெரிய கற்களை கொண்டு ஈமச் சின்னங்கள் எழுப்பப்படுவது உலகம் முழுவதும் உருவாகியது. தமிழகத்திலும் இது கடைபிடிக்கப்பட்டது. இக்கட்டத்தை "பெருங் கற்காலம்" என்று அழைக்கின்றனர்.

தமிழகத்தில் ஆதிச்சநல்லூர் (திருநெல்வேலி) மயிலாடும் பாறை, மல்லசமுத்திரம் (கிருஷ்ணகிரி) கொடுமணல் (நொய்யல் - ஈரோடு) பையம்பள்ளி, ஒடுக்கத்தூர் (வேலூர்) மோதூர், கெட்டு (தருமபுரி) பொருந்தலாறு, தேவனக்கரை, பெருமாள்மலை (பழனி) சித்தன்னவாசல் (புதுக்கோட்டை) குன்றத்தூர், சானூர் (காஞ்சிபுரம்) தாண்டிக்குடி (திண்டுக்கல்) கோவூர், தேவனூர், உடையார் நத்தம் (தென்னாற்காடு) தேசிபாளையம் (கோவை) ராலியாறு, ஊட்டி, மசினகுடி, கடலூர், கல்லட்டி, தெங்கு மராட்டா (நீலகிரி) தஞ்சை, திருச்சி, என்று பரவலாக பெருங்கற்கால சின்னங்கள் கிடைத்துள்ளன. முதுமக்கள் தாழி என்று சொல்லப்படுகிற தாழிகளும் இப்பெருங்கற்கால சின்னங்களாகவே கணக் கிடப்படுகின்றன.

இச்சின்னங்களில் மட்கலங்கள், இரும்பு ஆயுதங்கள், பிற உலோகப் பொருட்கள், மணிகள் போன்ற பொருட்களை படையலாக வைத்து புதைத்துள்ளனர்.

தமிழகத்தில் புதிய கற்காலத்தை அடுத்து நேரிடையாகவே பெருங் கற்காலத்தை அடைந்ததை பையம்பள்ளி அகழாய்வுகள் வெளிப்படுத்து கின்றன. அதாவது தமிழகம் வெண்கல காலத்திற்கு செல்லா மலேயே நேரிடையாகவே இரும்பு காலத்தை அடைந்தது என்பதே இதன் பொருளாகும்.

இக்கால மக்கள் நீர் நிலைகளை சார்ந்தே தங்களது வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர். வேட்டையாடுதல் மட்டுமல்லாமல்

விவசாயத்தையும் மேற்கொண்டனர். நெல், கேழ்வரகு, சோளம். கொள்ளு போன்ற தானியங்களை விளைவித்தனர். கால் நடைகளை வளர்த்தனர்.

மட்கலங்களை செய்தல், இரும்புக்கருவிகளை உருவாக்குதல், மணிகள், வளையல்கள் செய்யும் தொழில்களில் தேர்ந்தவர்களாக இருந்துள்ளனர்.

மட்கலங்களிலும், தாழிகளிலும் கீறல்களும், தமிழ் பிராமி எழுத்துக் களும் (பழந்தமிழ் எழுத்துகள்) உள்ளன. இவைகளை சிந்துவெளி எழுத்துக்களுடன் தொடர்புபடுத்தும் ஆய்வுகள் மேலோங்கிவருகின்றன.

பெருங்கற்காலம் கி.மு. 1000லிருந்து கி.பி.100 வரை மதிப்பிடப் படுகிறது. ஆனால் தொடர்ச்சியான ஆய்வுகளினால் இவை மாறுகின்ற வாய்ப்புள்ளது.

மேற்கண்ட காலகட்டங்களும், இந்த நாகரீக மாற்றங்களும் ஒரே மாதிரியாக தமிழகம் முழுவதும் நடைபெறவில்லை. அக்கம் பக்கமாக ஏற்றத் தாழ்வுடனேயே வளர்ச்சி பெற்றன.

# அ) பண்டைய தமிழகம்

## சங்ககால கட்டம் (அ) வணிககாலகட்டம்

## (அ) நிலவுடைமைக்கு முந்திய கட்டம்

சங்ககால தொடக்கத்தை கி.மு.500 லிருந்து கி.மு. 1000 வரை சிலர் நீட்டிக்கின்றனர். மேலும் ஆய்வுகள் வெளிவர வெளிவர இது மாற்றம் பெறலாம். நாம் கி.பி. 300 வரை இக்கட்டத்தைச் சுருக்கமாக பார்ப்போம்.

தமிழகத்தில் பதிவான முதல் இலக்கிய வரலாறு தொல்காப்பியத் திலிருந்தே தொடங்குகிறது. தொல்காப்பியம் தமிழகத்தின் திணை சமூக வாழ்க்கையைச் சுட்டுகிறது. மலை சார்ந்தது - குறிஞ்சி, காடு சார்ந்தது - முல்லை, வயல் சார்ந்தது - மருதம், கடல் சார்ந்தது - நெய்தல் என்று நிலப்பகுதி சார்ந்து வாழ்க்கையைப் பகுக்கிறது. மேலும் குறிஞ்சியும் முல்லையும் திரியும்பொழுது பாலை என்ற வறட்சியை அடைவது என்ற தமிழகத்தின் நீர் ஆதாரத்தின் நிலையற்ற தன்மையையும் சுட்டுகிறது.

உலக வரலாற்றில் வேட்டைச் சமூகம், மேய்ச்சல் சமூகம், வேளாண் சமூகம் என்று அடுத்தடுத்த சமூக கட்டங்களாக வளர்ச்சி பெற்ற நிலையில், தமிழத்தில் இவை அடுத்தடுதத நிலம் சார்ந்ததாகவே வளர்ச்சி பெற்றன.

அதாவது, குறிஞ்சி, முல்லை, மருதம் என்று வளர்ச்சி நிலையிலேயே மாற்றம் பெற்றன. மேலும் இவை வேறு வேறு பகுதிகளாக இருந்தன. ஒரே பகுதியின் மாற்றங்கள் கிடையாது. இதனால் ஒரு கட்டத்திற்கு மேல் நான்கு திணைகளும் ஒரே சமயத்தில் நிலவின.

வரலாற்று வளர்ச்சிப் போக்கில் குறிஞ்சி - முல்லை நிலப் பகுயில் சேர அரசும், குறுநில அரசுகளும், மருதம் பகுதிகளில் சோழ, பாண்டிய, தொண்டை அரசுகளும் உருவாயின. பருவக் காற்றின் அறிவு கண்டுபிடிப்பு கடல் வாணிகத்தில் பெரும் பாய்ச்சலை ஏற்படுத்தியது. விவசாயத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தியது. வணிகம் பெரும் பாய்ச்சலைக் கண்டது. வாசனைப் பொருட்கள், முத்து, மணிக்கற்கள், துணி, இரும்பு எஃகு பொருட்கள் போன்றவை ஏற்றுமதியாயின.

இனக்குழுக்கள் அழிந்து புதிய சமூகம் உருவாகத் தொடங்கியது. அதே சமயத்தில், விவசாய வளர்ச்சியால் புதிய நிலக்கிழார்களும் (வெள்ளாளர்கள்) வணிகர்களில் ஒரு பிரிவினர் நிலக் கிழார்களாகவும் மாறினர். இக்கட்டத்திலேயே பெண்கள் அடிமைகளாக்கப்பட்டனர். தமிழகத்தில் சுமார் 2500 ஆண்டுகளுக்கு மேலாக பெண்கள் அடிமை களாக்கப்பட்டுள்ளனர். அடுத்த கட்ட சமூக மாற்றத்திற்கான புதிய வர்க்க வேறுபாடுகள் உருவாயின.

ஆனால், மலிவான மனித உழைப்புச் சக்தி திரட்டப்பட முடிய வில்லை. பேரரசு உருவாக்கம் நடைபெற முடியவில்லை. இதே கால கட்டத்தில் வடக்கில் மகத, மௌரிய பேரரசுகள் உருவாக்கப்பட் டிருந்தன. சூத்திரர்களே அடிமைகளாக உழைப்பு சுரண்டலின் உழைப்பு சக்தியாக இருந்தார்கள். இதனால் சூத்திர - நிலவுடைமை சமூகம் உருவாக்கப் பட்டிருந்தது.

தமிழகத்தில் விதிவிலக்காக கரிகால் சோழன் இலங்கைப் போரில் பிடிக்கப்பட்டவர்களை வைத்து கல்லணையை கட்டினான் என்பதைத் தவிர வேறு குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் இல்லை.

மேலும் இக்கால கட்டத்தின் இறுதியில் இரண்டு முக்கிய வரலாற்று நிகழ்வுகள் நடைபெற்றன. ஒன்று இந்தியா, சீனா மீதான ரோமின் வணிகத்தடை வணிகத்தை வீழ்ச்சியுறச் செய்தன. இந்நெருக்கடியை உலகின் முதல் பொருளாதார நெருக்கடி என்று கூறலாம். இதனால் தமிழகம் கடுமையாக பாதிக்கப்பட்டது. கைத் தொழில்களும், நகரங்களும் வீழ்ச்சியுற்றன. எங்கும் சமூக நெருக்கடி நிலவியது. இரண்டாவது இக்குழப்ப கட்டத்தின் இறுதியில்தான் களப்பிரர்களின் ஆட்சி ஏற்பட்டது.

## களப்பிரர் காலம்

*களப்பிரர்கள் கி.பி. 3ஆம் நூற்றாண்டு முதல் 6ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி புரிந்தனர். இவர்கள் யார் என்பது இன்றும் புரியாத புதிராக உள்ளது. ஆனால் பிராமணிய - வெள்ளாளிய வரலாற்றாசிரியர்கள் இவர்களை கடுமையாக எதிர்க்கின்றனர். இக்காலத்தை இருண்ட காலம் என்கின்றனர்.*

*இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று களப்பிரர்கள் சமண, பௌத்த சமயங்களை ஆதரித்தனர். இரண்டு வேள்விக்குடி - தளவாய்புரம் செப்பேடுகளின் ஆதாரப்படி இவர்கள் பிராமணர்களுக்கு, முன்னாள் மன்னர் களால் அளித்த நிலங்களைப் பிடுங்கி உழு குடிகளுக்கே திருப்பித் தந்துள்ளனர் என்பதுதான். இதன் பொருள் பிராமணர்களுக்கு நிலங்களை அளிக்கும் பிரம்மதேய முறையை இவர்கள் ஏற்றுக் கொள்ள வில்லை என்பதாகும்.*

*கடும் நெருக்கடியான குழப்ப கட்டத்தில் ஆட்சிக்கு வந்த களப்பிரர்கள் ஒரு விரைவான சமூக மாற்றத்தை முன் நகர்த்தவில்லை. மாறாக மட்டுப்படுத்தினர். ஆனால் புதிய வர்க்கமாக வளர்ச்சியடைந்திருந்த நிலக்கிழார்கள் (வெள்ளாளர்கள்) புதிய சமூக மாற்றத்தை விரும்பினர். இதன் விளைவே பல்லவ - பாண்டிய - சாத்வாகன கூட்டின் மூலம் களப்பிரர்கள் ஆட்சி தூக்கியெறியப்பட்டது.*

# (ஆ) இடைக்காலத் தமிழகம் (அ) சாதி நிலவுடைமைச் சமூகம்

*தமிழகத்தின் இடைக்காலகட்டம் சாதி - நிலவுடைமைச் சமூகமாக உருவானது.சாதிஅடிப்படையிலான வேலைப் பிரிவினையைக் கொண்ட நிலவுடைமை உற்பத்தி முறையாகும்.*

*பரம்பரை வேலைப் பிரிவினை, அகமண முறை, தீண்டாமை என்ற மூன்று கூறுகளைக் கொண்டதாக சாதி பகுப்புகளும். நிலக்கிழார்கள், சிறு நில உடைமையாளர்கள். குடிவாரம் தாரர்கள், சாதியடிமைகள் என்ற வர்க்க பகுப்புகளுமாக சாதி நிலவுடைமை சமூகம் இருந்தது.*

***வேலையின் தன்மை, எதிர்ப்பவர்கள், அரசாதரவு குழுக்களுக்கு எதிரானவர்கள் என்று தீண்டத்தகாதார் சாதிகள் உருவாயின.***

***சாதி நிலவுடைமை, பல்லவர் காலத்தில் அடித்தளமிட்டு சோழர்கள் காலத்தில் தென்னிந்தியா முழுவதும் பரவி உச்சத்தைத் தொட்டு நாயக்கர் காலத்தில் இறுகியது.***

***இச்சமூக அமைப்பு கி.பி. 6ஆம் நூற்றாண்டு பல்லவ பேரரசில் தொடங்கி கி.பி. 1800 கிழக்கிந்திய கம்பெனியின் கட்டுப்பாட்டுக்கள் தமிழகம் செல்லும் வரை நிலவியது.***

*இது பல்லவ, சோழ (பிற்கால) நாயக்கர்களின் முக்கிய ஆட்சி காலப்பகுதிகளைக் கொண்டிருக்கிறது.*

*கடந்த கட்டத்தில் புதிய வர்க்கமாக எழுச்சியுற்ற வெள்ளாள வர்க்கமே (நிலக்கிழார்கள் -* Landlord*) இச்சமூக மாற்றத்திற்கு தலைமை வகித்தது. பல்லவ பேரரசு உருவாக்கம் இவர்களுக்கு சாதகமாக அமைந்தது. ஆனால், சங்ககால கட்டத்தில் இயல்பாக வளர்ந்த இவர்கள் இங்கு ஒரு இயல்பான நிலவுடைமை சமூக அமைப்பைக் கட்டமைக்கத் துணிய வில்லை.*

*பதிலாக, சில நூற்றாண்டுகளுக்கு முன் உருவான (குப்தர் ஆட்சியில்) மத்திய வட இந்தியாவில் நிலவிக் கொண்டிருந்த சாதி நிலவுடைமையைத் தமிழகத்தில் நிறுவத் துணிந்தனர். இதற்காக பிராமணர்கள் வெளியிலிருந்து கொண்டு வரப்பட்டனர்.* ***வெள்ளாள - பிராமண கூட்டிலேயே தமிழகத்தில் சாதி - நிலவுடைமை சமூகம் கட்டியமைக்கப்பட்டது.***

*இம்மாற்றம் இயல்பானதாக தமிழகத்தின் சமூக மாற்றத் தேவையோடு இணைந்ததாக இல்லாததால் கடும் எதிர்ப்பைச் சந்தித்தது. சமண - சைவ மோதலாக சித்தரிக்கப்படுவது உண்மையிலேயே உழவர்கள் ஆளும் வர்க்கங் களின் மோதலே ஆகும். சமணர்கள் கழுவேற்றப்பட்டனர். உழவர்களின் கலகங்கள் அடக்கப்பட்டன.*

*எனவே, மக்களிடம் பக்தி இயக்கம் கொண்டு செல்லப்பட்டது. இது சாதிபற்றி சில சமரச கருத்துகளைக் கூறினாலும், இதன் நோக்கம் சாதி - நிலவுடைமையைக் கட்டியமைப்பதே ஆகும். இந்த உத்தி மிகச் சிறப்பாக வெற்றி பெற்றது.*

***பல்லவ - பாண்டிய அரசுகள்*** *சாதி - நிலவுடைமை சமூகத்தைக் கட்டியமைப்பதில் தீவிரமாயிருந்தனர். பிராமணர்களுக்கு நிலங்களை அளித்தனர் (பிரம்மதேயம்). கோயில்களுக்கு நிலங்களை அளித்தனர் (தேவதானம்). வெள்ளாளர்களுக்கு சொந்தமான 'வேளாண் வகை' நிலங்கள் இருந்தன. இவை மட்டுமல்லாமல் அரசு அதிகாரிகள், பணியாளர்கள், இராணுவ அதிகாரிகள், இராணுவ வீரர்களுக்கு நிலங்கள் கொடையாக அளிக்கப்பட்டன.*

*இப்போக்கு* ***சோழர்கள், நாயக்கர்கள்*** *ஆட்சியிலும் தொடர்ந்தன.*

பெரும்பான்மை நிலங்கள் பிராமணர்கள் வெள்ளாளர்களுக்குச் சொந்தமாக இருந்தன. இதர இடைநிலை ஆதிக்க சாதிகள் கணிசமான அளவில் நிலம் பெற்றிருந்தனர். இவர்களில் சிறு நிலவுடைமையாளர்களும், குடிவாரம் தாரர்களுமே பெருமளவில் இருந்தனர்.

கிராம அளவில் நிலக்கிழார்களின் கூட்டு அதிகாரம் நிலவிய போதிலும் நிலத்தின் உரிமை தனி நபர்களிடமே இருந்தது. நிலம் விற்பது வாங்குவது வெளிப்படையாகவே நடந்தன. இதில் வாங்குவதில் முன்னுரிமை சார்ந்த நிபந்தனைகள் ஊரளவில் நிலவின. மற்றபடி தனி உடைமையே நிலவின. தமிழகத்தின் தனியுடைமையின் தன்மை இவ்வாறே இருந்தது. இங்கு தனி உடைமையின் தன்மை முற்றுரிமை (அ) அனுபவ பாத்தியதை என்பதாகவே நிலவியது.

மேலும் பாசனத்திற்காக கால்வாய்கள், கிணறுகள், குளம், ஏரிகள் போன்ற நீர் நிலைகளை உருவாக்கித் தந்தனர். ஒரு பல்லவ அரசன் நூறு ஆயிரம் ஏர்க் கலப்பைகளை அளித்ததாக ஹரஹரஹள்ளி செப்பேடு கூறுகிறது.

**சோழர் காலத்திலும்** விரிவாக்கம் பலமாக நடந்தது. மேட்டுப் பகுதிகளான மேற்கு மண்டலத்திலும் வடமேற்கு மூலையான தருமபுரியிலும் பிரம்மதேய, தேவதானங்கள் விரிவு படுத்தப்பட்டன.

**நாயக்கர் ஆட்சியிலும்** மேட்டு நிலங்கள் மூழு வீச்சுடன் விரிவுபடுத்தப்பட்டன.

ஒரு பக்கம் இவ்வரசுகள் விவசாய வளர்ச்சியில் கவனம் செலுத்தினாலும் மறுபக்கம் மக்களின் வாழ்க்கை துன்பகரமானதாகவே இருந்தது. வரிச்சுமை மக்களை கடுந் துன்பத்தில் எப்பொழுதும் வாட்டியது. இதனால் அடிக்கடி கலகங்கள் எழுந்தன. சோழர் காலத்தில் அதிகளவில் கலகங்கள் நடந்துள்ளன. சாதிகள் இரு பிரிவுகளாக பிரிந்து வலங்கை, இடங்கை மோதல்கள் 18ஆம் நூற்றாண்டு வரை நடந்தன. இவை வர்க்க, பண்பாட்டு மோதல்களாக இருந்தன.

மோதல்கள் ஒருபுறம் இருந்தாலும் இடைக்காலக்கட்ட அரசுகளான பல்லவ, சோழ, நாயக்கர் அரசுகள் நிர்வாகத்தில் முறையே நாடு, வளநாடு, பாளையக்கார முறைகள் மூலம் நிர்வகித்தனர். மையப்படுத்தப்பட்ட அரசுகளாக இருந்தபோதிலும் இடைத்தட்டு வர்க்கங்கள் மீதே இவ்வரசுகள் நிலை கொண்டன. அதாவது, குறுநில மன்னர்கள், பாளையக்காரர்கள், நிலக்கிழார்கள் இவர்களின் ஆதரவும் உறவும் சார்ந்தே இவ்வரசுகளின் வலிமையும் நிலைத்த தன்மையும் நிலவின. இதை ஒட்டியே பேரரசுகளின்

உருவாக்கமும் நிலைத்தலும் இருந்தன. இதனால் ஒரே தன்மையிலான சமூகமாக தமிழகம் உருவாகவே இல்லை. இதுவும் இன்றளவும் வட்டாரத் தன்மைகள் மேலோங்கி இருப்பதற்கு முக்கியக் காரணமாகும்.

மத்திய - வட இந்தியாவில் வர்ண படிநிலைச் சமூகம் நிலவியது. அதன் நீட்சியாகவே சாதி - நிலவுடைமைச் சமூகம் உருவானது. சாதி வர்ணத்தில் உள்ளடக்கப்பட்டது. இதனால் சாதியும் படிநிலை தீண்டாமையைக் கடைபிடித்தன. ஆனால், **தமிழகத்தில் வர்ண சமூகம் உருவாகவே இல்லை.**

இருந்தபோதிலும் பிராமணர்கள் ‘வர்ணாசிரமப்படி’ தங்களை உயர்ந்தவர்களாகவும் மற்ற அனைத்து சாதியினரையுமே சூத்திரர்களாகவும் கூறினர். இது வெள்ளாளர்களிடம் கடும் எதிர்ப்பை உருவாக்கியது. மேலும் இடைக்கால அரசுகள் அனைத்துமே பிராமணர்களுக்கு நெருக்கமான வர்களாக இருந்தன. பிராமணர்களுக்கு முக்கியத்துவம் அளித்தனர். எடுத்துக்காட்டாக, சோழர் காலத்தில் வேளாண் வகை நிலங்களில் இருந்து வெள்ளாளர்களும் மற்றவர்களும் வெளியேற்றப்பட்டு பிராமணர்களுக்கு தரப்பட்டன. இதனால் இக்கட்டத்திலேயே பிராமணர்கள் X வெள்ளாளர்கள் முரண்பாடு தொடங்கின எனலாம்.

இதனால் வெள்ளாளர்கள் தங்களுக்காக சைவ சித்தாந்தத்தை உருவாக்கினர். சைவ மடங்களை உருவாக்கினர். தங்களைச் சத்சூத்ரர்கள் என்று அழைத்துக்கொண்டனர். தாங்களும் மற்றவர்களை விட உயர்ந்தவர்கள் என்று கூறிக் கொண்டனர்.

பிராமணர் - வெள்ளாளர் இல்லாத இதர சாதியினரில் ஒரு பிரிவினர் மட்டுமே நிலக்கிழார்களாக இருந்தனர். கணிசமானோர் சிறு நிலவுடைமையாளர்களாக இருந்தனர். பெரும்பகுதி குடிவாரம்தாரர்களாக இருந்தனர். அதாவது, விளைச்சலில் ஒரு சிறு பகுதியை எடுத்துக் கொண்டு பெரும்பகுதியை நிலக்கிழார்களுக்குத் தருவது என்ற அய்ரோப்பிய பண்ணை யடிமையை ஒத்திருந்தனர்.

கடைத்தட்டு மக்களாக சாதி அடிமைகள், அதாவது தாழ்த்தப்பட்ட சாதியினர் இருந்தனர். பிராமணர்களுக்கு வேலை செய்யும் உரிமை இவர்களுக்கு கிடையாது. வெள்ளாளர்கள் மற்றும் இதர சாதியினர்களுக்கு மட்டும் வேலை செய்தனர். அதாவது இவர்கள் அடிமைகளாக இருந்தனர். உடைமை விற்கப்படும் பொழுது இவர்களும் சேர்ந்து விற்கப்படுவர். உயிர் வாழ்வதற்கான ‘சிறிது பருக்கைகள்’ என்பது தவிர எதுவும் இவர்களுக்கு கிடையாது. சமூகத்தில் எந்த உரிமைகளும் கிடையாது.

*இக்கட்டத்திலேயே பெண்ணடிமைத்தனம் உச்சகட்டத்தை அடைந்தது. பெண்கள் வாரிசுகளைப் பெற்றெடுக்கும் எந்திரமாக்கப் பட்டனர். கணவன் இறந்தால் மறுமணம் புரிய அனுமதி மறுக்கப்பட்டு விதவைகளாக்கப்பட்டனர். இக்கட்டத்தில்தான் பெண்களுக்குக் 'கற்புநிலை' என்பது புனிதமாக்கப்பட்டது.*

*இப்படிப்பட்ட துன்பமயமான காலகட்டம் சாதி - நிலவுடைமை காலகட்டமாகும். தமிழகத்தின் உழைக்கும் மக்களும், ஒடுக்கப்பட்ட மக்களும் மிக நீண்டகாலம் அதாவது சுமார் 12 நூற்றாண்டுகளுக்கு மேலாக துன்பம் அனுபவித்த காலகட்டம் இக்கட்டமாகும் இத்துன்பங்கள் ஒழிந்து ஒரு புதிய காலத்திற்காக வாழ்க்கைக்காக மக்கள் காத்திருந்த பொழுது நெகிழ்வுகளும், தகர்வுகளும் தொடங்கியபொழுது இந்த 'நம்பிக்கை கீற்றுகளை' அழித்து வரலாற்றை பின்னுக்குத் தள்ளியது பிரிட்டி கிழக்கிந்திய கம்பெனி.*

# (இ) நவீன கால கட்டம்

## காலனிய ஆட்சி (1800 - 1947)

*இந்திய துணைக் கண்டத்திற்கு வணிகம் செய்ய வந்த பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி படிப்படியாக அரசாட்சிகளைக் கைப்பற்றியது. முதலில் துவங்கிய பாளையக்காரர்களின் எதிர்ப்பை அடக்கியது. திப்பு சுல்தானின் வீழ்ச்சிக்குப் பின் தென்னகம் முழுமையாக கிழக்கிந்திய கம்பெனியின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. இருப்பினும் வரலாற்று சிறப்புமிக்க வேலூர் சிப்பாய்க் கலகம் (1806) இதை இறுதி செய்தது.*

*1800லிருந்து 1947 வரை சுமார் 150 ஆண்டுகள் காலனி ஆட்சியே நடைபெற்றது. 1857 வரை கம்பெனி நிர்வாகமும், பின்னர் பிரிட்டிஷ் அரசின் நேரிடையான நிர்வாகத்தின் கீழும் இருந்தது.*

*கம்பெனி தனது கட்டுப்பாட்டிற்குள் வந்த 'மெட்ராஸ் பிரசி டென்சியில்' (தமிழகம் உட்பட) முதலில் நிலச்சீர்திருத்தங்களைச் செய்ய முயற்சித்தது. இச்சீர்திருத்தங்கள் இரண்டு காரணங்களுக்காக தேவைப் பட்டது. ஒன்று கச்சாப் பொருட்களை விளைவிப்பது, இரண்டு வரி வசூல் செய்வது ஆகும்.*

*இதற்கு முதலில் **ஜமீன்தாரி முறையை** அமுல்படுத்தினர். தனக்கு ஆதரவாக இருந்த பாளையக்காரர்களுக்கும், உதவி புரிந்தவர்களுக்கும்*

ஜமீன்களை அளித்தனர். ஜமீனில் உள்ள கிராமங்கள், விளைநிலங்கள் மற்றும் தரிசு நிலங்கள் அனைத்தும் ஜமீன்தாரருக்கு உரிமையாக்கப்பட்டது.

குடிகளிடம் வரி வசூல் செய்து அதில் 2/3 பங்கு அரசுக்கு கிஸ்தி செலுத்தவேண்டும். குடிகளிடம் வசூலிப்பதற்கான வரையறைகள் நிர்ணயிக்கப்படவில்லை. இம்முறை உழவர்களுக்குக் கடும் துன்பத்தை அளித்தது. இதனால் எதிர்ப்புகள் கிளம்பியது.

இதனால் இதற்கு மாற்றாக, ஏல முறையான **மிட்டா முறை, கிராம குத்தகை முறைகள்** கொண்டு வரப்பட்டன. இவையெல்லாம் மீண்டும் ஜமீன்தாரர்களுக்கே சாதகமாக இருந்தன. இதனால் **இரயத்துவாரி முறை** கொண்டு வரப்பட்டது.

திப்பு சுல்தானின் ஆட்சியில்தான் இரயத்துவாரி முறை கொண்டு வரப்பட்டது. இது உழுபவனுக்கே நிலத்தை சொந்தமாக்கும் நோக்கத்தைக் கொண்டது. உழுபவனுக்கே சட்ட ரீதியாக பட்டா உரிமை அதாவது தனி நபர் உரிமையை அளிக்கிறது.

இதன் பாதிப்பு தமிழக பகுதிகளில் எல்லையோர மாவட்டங்களில் இருந்ததால் பாரா மகால் (தருமபுரி - கிருஷ்ணகிரி), கொடை மாவட்டங்களில் 1792ஆம் ஆண்டிலேயே கர்னல் ரீடு, தாமஸ் மன்றோ இத்திட்டத்தை அமுல்படுத்தினர். 1822இல் சென்னை ஆளுநராக தாமஸ் மன்றோ பதவியேற்றவுடன் இரயத்துவாரி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் இத்திட்டத்திற்கு ஜமீன்தாரர், மிட்டா, மிராசுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் இவர்களே பட்டா உரிமை பெற்றவர்களானார்கள். சிறுவிவசாயிகள் தவிர உழவர்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை.

முதலாளித்துவ சீர்திருத்தங்கள் அடிப்படைகளை மாற்றவில்லை. சமரசத்துடன் பழைய ஆதிக்க சாதி - நிலக்கிழார்களே மீண்டும் ஆதிக்க சக்திகளாகத் தொடர்ந்தனர். மேலும், சமவெளிப் பகுதிகளில் உணவு ஏற்றுமதியும், மேட்டுப் பகுதிகளில் பணப் பயிரும் இவர்களை மூலதன - சாதி நிலக்கிழார்களாக (Capital - Caste - Landlord) மாற்றியது.

அதாவது, ஏற்கனவே இங்கிருந்த சாதி - நிலவுடைமை ஒழிக்கப்பட்டு முதலாளிய விவசாய முறை நிலை நாட்டப்படுவதற்கு பதிலாக, சாதி - அரை நிலவுடைமை சமூகமாக மாற்றப்பட்டது. இரயத்துவாரி முறை மூலமாக நிலங்கள் சட்ட ரீதியாக தனி உடைமையாக்கப்பட்டன. ஜமீன்தார், மிராசுதாரர்களுக்கு நிலங்கள் சொந்தமாக்கப்பட்டன. நிலத்தின் மதிப்பிடிடைப்படையில் நிரந்தர நிலவரி வசூலிக்கப்பட்டது. பயிர் செய்யப்படாமல் இருந்தாலும் கட்டாய நிலவரி வசூலிக்கப்பட்டது. சாதி

- அரை நிலவுடைமையின் முக்கிய வடிவமாக கந்து வட்டி வடிவ மெடுத்தது. (கந்து வட்டி மூலதனம் வணிக மூலதனத்தை விட பல மடங்கு இருந்ததாக மதிப்பிடப்படுகிறது)

இப்படி இரட்டை கொடுமையின் கீழ் (நிலவரி, கந்து வட்டி) சிக்கிக் கொண்ட கிராமப்புற உழவர்களின் எசமானர்களாகவும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சேவகர்களாகவும் இந்த மூலதன - சாதி - நிலக்கிழார்கள் செயல்பட்டனர்.

இவர்கள் இரட்டைத் தன்மை கொண்டவர்களாக இருந்தனர். ஒரு பக்கம் பிரிட்டிசாருக்கு கச்சாப் பொருள்களை ஏற்றுமதி செய்வது, உள்ளூர் - வெளிநாடு சந்தைக்கான உற்பத்தி, மண்டிகள், போக்குவரத்து சாதனங்களின் உடைமையாளர்கள் என்பதாகவும், அடுத்தடுத்து ஏற்படும் முதலாளிய வளர்ச்சியில் வணிக முதலீடு, தொழில் முதலீடு என்பதாகவும் முதலாளித்துவ உற்பத்தியில் பங்கு பெற்றனர்.

மறுபக்கம் சாதிஅரை நிலவுடைமை சுரண்டலின் முக்கிய கூறுகளான குத்தகை, கொத்தடிமை, கூலிக்கு ஆள் வைப்பது, சாதி வெட்டி உழைப்பு சுரண்டல், கந்து வட்டி போன்றவைகளையும் மேற்கொண்டனர்.

மூலதன - சாதி நிலக்கிழார்களில் பெரும்பகுதி பிராமணர் - வெள்ளாளர்களே ஆவர். ஹைதர் அலி படையெடுப்பை ஒட்டி கணிசமாக நிலவுடைமையில் மாற்றங்கள் ஏற்பட்டன. ஏராளமானோர் நிலங்களை விட்டு ஓடினர். புதியவர்கள் நிலங்களை சொந்தமாக்கிக் கொண்டனர். இக்கட்டத்தில் உருவானவர்கள்தான் வாண்டையார், மூப்பனார் போன்ற பெரும் நிலக்கிழார்கள். இக்காலத்தில் கணிசமான அளவு இடைநிலை சாதிகளிடம் நிலங்கள் வந்தன.

இதற்கடுத்து 1841இல் 'பயிரிடப்படாத நிலங்கள் அரசுக்கு சொந்தம்' என்றும் இது குடிவாரம் தாரர்களுக்கு (பைக்காரி) பிரித்துத் தரப்பட வேண்டும் என்றும் அரசு முடிவு செய்தது. இதற்கு ஜமீன்தாரர்களும் மிராசுகளும் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தனர். 1863இல் அரசு 'தரிசு நிலங்களின் மீட்பு' என்ற விதியைக் கொண்டு வந்து தீவிரமாக நடைமுறைபடுத்தியது. இதன் விளைவாக இடைநிலை சாதிகளின் பெரும் பகுதியினர் சிறு நிலவுடைமையாளர்களாக மாறினர்.

நிலக்கிழார்களில் (பிராமண்ர் + வெள்ளாளர்) கணிசமானோர் நகரங்களை நோக்கிச் சென்றனர். அதே சமயத்தில் உடமைகளைக் கைவிடத் தயாரில்லை. இதை குத்தகை, வாரம் மூலம் சுரண்டத் தயராயினர். இதுவே

*மறைமுக நிலக்கிழாரியம் (அ) நேரில் இல்லா நிலக் கிழாரியம்* (Absenti Landlordism) *ஆகும். இதனால் கணிசமாக குத்தகை விவசாயிகள் பெருகினர்.*

*பிரிட்டிஷ் முதலாளிகளின் மூலதன பெருக்கத்தால் காபி, ஏலம், தேயிலை போன்ற மலைத் தோட்டப் பயிர்களில் ஈடுபட்டனர். இதற்கு மலிவு விலை உழைப்பு தேவைப்பட்டது. ஆனால், தமிழக கிராமங்களில் சாதி அடிமைகள் ஆதிக்க சாதி நிலக்கிழார்களிடம் அடிமைப்பட்டு இருந்தனர். எனவே, இவர்களை வெளியில் கொண்டுவர காலனிய அரசு 1843ஆம் ஆண்டு 'அடிமை ஒழிப்பு சட்டத்தை'க் கொண்டு வந்தது. இது அடிமைகளை ஒழிப்பதற்கு பதிலாக புதிய வகை அடிமைகளை உருவாக்கியது.*

*அதாவது, தான் வாங்கும் கடனுக்கு தானே அடிமையாகும் 'படியாள் முறை'* (Bonded Labour). *இது தமிழகத்தில் முக்கிய கொத்தடிமை முறையாக வளர்ந்தது. இரண்டாவது முறை, வெளி நாடுகளுக்குத் தோட்டத் தொழி லாளர்களுக்கான ஒப்பந்த முறை. இது கொடூரம் நிறைந்த வாழ்க்கை முறையாக இருந்தது. இருப்பினும் இங்கிருந்த சாதி அடிமைத்தனத்தை விட தோட்ட தொழிலாளர் வாழ்க்கை மேலானது என்று தாழ்த்தப்பட்ட மக்களில் பெரும்பாலோர் தோட்டத் தொழிலுக்கு ஒப்பந்த அடிமைகளாகச் சென்றனர்.*

*தலித்துகளில் ஒப்பந்த கூலிகளாக சென்றவர்களில் ஒருசிலர் தாயகம் திரும்பி நிலங்களைச் சொந்தமாக வாங்க முயற்சி செய்தனர். ஆனால் இதற்கு ஆதிக்க சாதி நிலக்கிழார்களிடமிருந்து கடும் எதிர்ப்பு கிளம்பியது. பெரும் துன்பங்களை விளைவித்தனர். இதன் விளைவாக 1892ஆம் ஆண்டு செப்டம்பர் 30-ந் தேதி 'பறையர்கள் நிலம் மற்றும் சொத்து வாங்குவதைத் தடை செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்' என்று அரசாணை வெளியிடப்பட்டது. இருப்பினும் மிகப் பெரிய மாற்றம் எதுவும் ஏற்படவில்லை.*

*அதே சமயத்தில், பிரிட்டிஷ் அரசு இராணுவத்தில் பணி புரிந்த தலித்துகளுக்கு பஞ்சமி நிலங்களை வழங்கிய பொழுதுதான் கணிசமாக தலித்துகள் நிலங்களைப் பெற்றனர்.*

*ஒட்டு மொத்தத்தில் பார்த்தோமானால்* ***சாதி நிலவுடைமை சமூகமாக*** *இருந்த கிராம சமூகத்தில் ஒரு பக்கம் ஆதிக்க சாதி நிலக் கிழார்கள், மறுபக்கம் சிறு நிலவுடைமையாளர்கள், குடி வாரம்தாரர்கள், சாதி அடிமைகள் (தாழ்த்தப்பட்டவர்கள்) என்று இருந்த நிலை மாறி, பிரிட்டிஷ் காலனி கட்டத்தில் ஒரு பக்கம் மூலதன -சாதி நிலக்கிழார்கள்,*

*மறுபக்கம் சிறு நிலவுடைமையாளர்கள், குத்தகைதாரர்கள், கூலி விவசாயிகள், கொத்தடிமைகள் (தாழ்த்தப் பட்டவர்கள்) என்று அடிப்படை மாறாமல்* ***சாதி அரை நிலவுடைமை சமூகமாக*** *மாறியது.*

***இந்தியாவின்*** *இதர பகுதிகளைப் போல முதலிலேயே இங்கு தொழிலில் தமிழக முதலாளிகள் இறங்கவில்லை. முதலில் பங்குதாரர்களாக இருந்தனர். பின்னர் தங்களின் மூலதனச் திரட்சிக்கான அடிப்படைகளை உருவாக்கிக் கொண்டனர்.*

*தமிழகத்திலும் படிப்படியாக தொழிற்சாலைகள் உருவாயின. திருநெல்வேலி பருத்தி தொழிற்சாலை(1892), காளிஸ்வரர் கோயம்புத்தூர் நூற்பாலை, ரெங்காமில் - கோவை (1921) மதுரை மீனாட்சி மில் (1925) இராமகிருஷ்ணன் நூற்பாலை, குப்புசாமி நாயுடு நூற்பாலை - கோவை, பருத்தி சுத்திகரிப்பு ஆலைகள்* (Ginning Factory) *1911இல் 21 ஆலைகளாக இருந்தவை 1935இல் 105 ஆலைகளாக உயர்ந்தன.*

*1860இல் இந்திய நிறுவனங்கள் சட்டம் நிறைவேற்றிய பின் வங்கித் தொழில் உருவாயிற்று. சென்னை வங்கி (1893), இந்தியன் வங்கி (1907) செட்டிநாடு வங்கி (1929) பிரிமியர் ஆயுள் காப்பீட்டு நிறுவனம் போன்றவைகள் உருவாயின.*

**இந்திய பிராந்திய பெரு முதலாளிகள் உருவாக்க கருவிலேதான் தமிழகத்தைச் சேர்ந்த முதலாளிகளும் உருவாயினர். இவர்களுக்கு தேசியத் தன்மை கிடையாது. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய சார்பு + கூட்டு என்ற அடிப்படையிலேயே வளர்ந்தனர்.**

*நவீன முதலாளித்துவம் ஒரு பக்கம் முதலாளியத்தை வளர்த்தது போலவே பல புதிய வர்க்கங்களை உருவாக்கியது. இதில் தொழிலாளி வர்க்கம், மாணவர்கள், தொழில் முறையர்கள் எனப்படும் டாக்டர்கள், வக்கீல்கள், முக்கியமான வர்க்கங்கள் ஆகும். இவ்வர்க்கங்கள் காலனிய எதிர்ப்பு போராட்டத்திலும் இதர இயக்கங்களுக்கும் அடிப்படையாக விளங்கியவர்கள் ஆவர்.*

*மேலும், ஏற்கெனவே இருந்த சாதி - வர்க்க சமூகம் எந்த அடிப்படை மாற்றமும் பெறாமலேயே அதன்மீது இந்த நவீன வர்க்கங்கள் அழுந்தியது. இதுவே இன்றைய நமது சமூகத்தின் பன்முகத் தன்மைக்குக் காரணமாகும்.*

*முதலாளிய வளர்ச்சி பல புதிய நகரங்களை உருவாக்கியது. இந்நகரங்களில் கல்வி, வேலை வாய்ப்பு முக்கிய அம்சங்களாயின. இதனால் கிராமங்களில் இருந்து ஆதிக்க சாதியினர் கணிசமானோர் நகரங்களை நோக்கி*

நகர்ந்தனர். இதில் முக்கியமானவர்கள் பிராமணர்களாவர். கிராமப்புறத்தில் ஆதிக்க சக்தியாக இருந்த இவர்கள் நகரங்களிலும் அரசு அலுவலகங்களை ஆக்ரமித்தனர். 3 விழுக்காடு மக்கள்தொகை கொண்ட இவர்கள் கல்வியில் 70 விழுக்காடு இடத்தை ஆக்ரமித்தனர். இது மற்றவர்களிடம் கடும் எதிர்ப்பைக் கிளப்பியது. இதன் எதிரொலியாக பிராமணரல்லாதவர் இயக்கம் துவங்கியது. பின்னர் நீதிக்கட்சி, திராவிடர் கழகம் என்று வளர்ச்சியுற்றது.

இதன் பின்னணியிலேயே தந்தை பெரியார் உருவானார். பிராமணர் எதிர்ப்பு, கடவுள் மறுப்பு, திராவிட நாடு கோரிக்கை (இது பின்னர் சுதந்திரத் தமிழ்நாடு கோரிக்கையாக மாறியது) பெண் விடுதலை, மூட நம்பிக்கைகள் எதிர்ப்பு என்று பரவலான செயல்பாட்டைக் கொண்டிருந்தார்.

இக்கட்டத்தில் நடந்த இந்தி எதிர்ப்பு போராட்டம் தமிழ்த் தேசிய உணர்வை வளர்த்தெடுத்தது. ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்ற முழக்கம் முன்னுக்கு வந்தது. காலனிய எதிர்ப்பு போராட்டமும் வீருகொண்டு எழுந்தது. இதில் தொழிலாளர், மாணவர்கள் சிறப்பாக பங்கு பெற்றனர். கிராமப்புறங்களில் விவசாய கலகங்கள் பல நடந்தன. பொதுவுடைமை இயக்கத்தின் உருவாக்கம் இக்கலகங்களுக்கு உதவிகரமாக இருந்தன. குறிப்பாக தஞ்சையில் நடந்த விவசாய கிளர்ச்சி அதிகார மாற்றத்திற்கு (1947) பிறகும் நீடித்தது.

**இக்கட்டத்தில்** ஏகாதிபத்தியத்தின் ஊடுருவலானது தனது கொடூரமான சுரண்டலின் தேவைக்காக நவீன உள்கட்டுமானத்தை உருவாக்கியது. இதில் குறிப்பிடத்தக்கது இரயில்வே யாகும்.

இந்திய துணைக் கண்டம் பிரிட்டிஷ் பேரரசின் கீழ் கொண்டு வரப்பட்டதும் முதலாளித்துவ வடிவிலான அரசு நிர்வாகங்கள் படிப்படியாக திட்டவட்டமாக உருவாக்கப்பட்டன. இது மட்டுமல்லாமல் தனது தேவைகளுக்கு ஏற்ப சில முதலாளிய சீர்திருத்தங்களையும் மேற் கொண்டது. முக்கியமாக தனது நிர்வாகத்துக்கு குமாஸ்தாக்களை உருவாக்கும் நோக்கோடு நடைமுறைப்படுத்தப்பட்ட கல்விமுறை இந்திய துணைக் கண்ட வரலாற்றில் மிக முக்கிய சீர்திருத்தமாகும்.

ஏனெனில், சுமார் 2000 ஆண்டுகளுக்கு மேலாக கல்வி மறுக்கப்பட்ட சமூகத்தில், இது பெண்கள், சூத்திர சாதிகள், தாழ்த்தப்பட்டோர் மத்தியில் முக்கிய மாற்றத்தை ஏற்படுத்தியது. குட்டி முதலாளிய வர்க்கத்தை கணிசமாக உருவாக்கியது. இவர்களில் ஒரு பிரிவினர் மொழி அடிப்படையில் தங்களது தேசிய இன உருவாக்கத்திற்கு முனைந்தனர். ஆனால் பெரும் பிரிவினர் ‘இந்திய தேசியத்திற்காக’ ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டங்களில் கவனம் செலுத்தினர்.

இந்த குட்டி முதலாளிய பிரிவினரே சீர்திருத்தத்தை முக்கியமாக முன் வைத்தனர். பெண்ணடிமைத்தனத்தின் உடன்கட்டை ஏறுதல், குழந்தைத் திருமணம் போன்ற கொடூரமான சிலக் கூறுகள் மீதும், தீண்டாமை மீதும் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

மேலும், சாதி - நிலவுடைமையின் அதிகார வடிவங்களுக்கு மாற்றாக முதலாளிய அதிகார வடிவங்களின் தோற்றம் நிர்வாக அலகுகளை நோக்கிய நகர்வை முதலில் ஆதிக்க சக்திகளை மேற்கொள்ள வைத்தது. இது பிற சாதி ஆதிக்க சக்திகளுக்கு கடும் நெருக்கடியை உண்டு பண்ணியது.

தற்சார்பு கிராம பொருளாதாரத்தின் சாதி - நிலவுடைமை முறையின் வேலைப் பிரிவினையிலான குழு என்ற குறுகிய வடிவத்தில் இருந்த சாதி; கல்வி - வேலை - அதிகாரப் பங்கு என்ற ஜனநாயக கோரிக்கைகளின் அடிப்படையில் சங்கம், கட்சி என்பது போன்ற முதலாளித்துவ வடிவங் களை எடுத்தது. இப்போக்கே பிராமணர் எதிர்ப்பு இயக்கம் மற்றும் இட ஒதுக்கீடு போன்ற சீர்திருத்தங்களைத் தோற்றுவித்தது.

ஒரு பக்கம் சீர்திருத்தம் மற்றும் அடக்குமுறையின் மூலம் மக்களின் எதிர்ப்பை எதிர் கொண்ட பிரிட்டிஷ் அரசு மறுபக்கம் மக்களின் எழுச்சிக்கு வடிகாலாக காங்கிரஸ் கட்சியைத் திட்டமிட்டு உருவாக்கியது.

முதலில், பெருமுதலாளிகளின் கோரிக்கைக்காக செயல்பட்டது. பின்பு மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டது. இதற்கு பொருத்தமான தலைமையாக காந்தியை முன்னிறுத்தி ஒருபக்கம் போராட்டங்களை மழுங்கடிப்பது மறுபக்கம் தனது பேரத்தைக் கூட்டிக் கொள்வது என்பதை பெரு முதலாளிவர்க்கம் செவ்வனே செய்தது. ஏனெனில், காந்தியத் தலைமையே இந்திய துணை கண்ட மக்களின் நம்பிக்கைக்குரியவையாக இருந்தன.

இதற்கு மாற்றாக, ருஷ்யப் புரட்சியின் (1917) தாக்கத்திலும், இந்திய துணைக் கண்டத்தில் புதியதாக உருவான புரட்சிகர வர்க்கமான பாட்டாளி வர்க்கத்தின் உந்துதலில் இருந்தும் கம்யூனிஸ்டு கட்சி உருவாக்கப்பட்டது. இதன் தலைமயில் தொழிலாளர் போராட்டங்களும் தெலுங்கானா, தேபகா, புன்னப்புரா, வயலார் போன்ற விவசாய கிளர்ச்சிகளும் சிறப்பாக நடைபெற்றன.

மேலும், முசுலிம் லீக், அம்பேத்கார் தலைமையிலான சாதி ஒழிப்பு இயக்கம், பெரியாரின் சுய மரியாதை இயக்கம் போன்றவையும் முக்கிய இயக்கங்களாக இருந்தன.

இவை மட்டுமல்லாமல், பகத்சிங் மற்றும் தோழர்களின் தியாகம் இந்திய துணை கண்டம் எங்கும் பேரலையை ஏற்படுத்தியது. இது போன்ற எண்ணற்ற சிறுசிறு குட்டி முதலாளியக் குழுக்களின் செயல்பாடுகள் பிரிட்டிசு ஏகாதிபத்தியதை அச்சுறுத்தின.

காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தின் துரோகம் காங்கிரசை முற்றிலுமாக அம்பலப்படுத்தியது. பாசிச எதிர்ப்பு முன்னணியில் கம்யூனிஸ்டுக் கட்சியின் எந்திரகதியான தவறான செயல் உத்தி விடுதலை போராட்டத்தின் தலைமைப் பாத்திரத்திற்கான தகுதியை இழக்கச் செய்தது. நேதாஜியின் ஜப்பான் கூட்டு தோல்வியில் முடிந்தது.

இருப்பினும், தொழிலாளர் போராட்டங்களும் விவசாய கிளர்ச்சி களும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு அச்சத்தை ஏற்படுத்தின. ஏகாதிபத்திய ஆட்சிக்கு இறுதி அஞ்சலி செலுத்தும் முகமாக கடற்படை எழுச்சி அமைந்தது. இதை ஒட்டிய இராணுவ கலகங்கள் தெளிவாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் இறுதி முடிவைக் கட்டியங்கூறின.

***சாதி - நிலக்கிழாரிய*** தலைமையிலான கிளர்ச்சி அடக்கப்பட்டதும், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய பேரரசு தனது நேரிடையான நிர்வாகத்தை இங்கு நிறுவியதும் உடனடியாக கவனம் செலுத்தியது, இங்குள்ள பண்பாடு மற்றும் வரலாற்றை தெரிந்து கொள்வதற்குத்தான்.

கம்பெனி ஆட்சியிலேயே இதற்கான முயற்சிகள் தொடங்கின. இதில் முக்கியமான பங்காற்றியது ஜெர்மன் அறிஞரான மாக்ஸ் முல்லரே ஆவார். இவரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு இலண்டனிலிருந்து (இந்து) மத நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டன.

மாக்ஸ் முல்லரின் முக்கியமாக அய்ரோப்பியரின் ஆதிக்கத்தை நியாயப்படுத்தும் நோக்கில் ஆரிய இனவாத கருத்தியலை முன்வைத்தார். இவரது கருத்துகளை மேடம் பிளாவ்ட்ஸ்கி திட்டவட்டமாக பரப்பினார். சென்னை அடையாறை தலைமையிடமாகக் (முதலில் நியூயார்க்கில் இருந்தது) கொண்ட மெய்யியல் கழகம் மூலமாக ஆரிய இனவாத கருத்தியலை பரப்பினார். ஆரியர்களே நாகரீகமானவர்கள் திராவிடர்கள் காட்டுமிராண்டிகள். ஆரியர்களே இந்தியாவில் நாகரீகத்தை ஏற்படுத்தி யவர்கள் என்ற கருத்தியலைப் பரப்பினார். இது பிராமண இந்துத்துவா கருத்தியலுக்கு உந்து சக்தியைத் தந்தது.

மேலும், ஆரிய மதங்களிலேயே சிறந்த மதம் பௌத்த மதம் என்ற கருத்தை முன்வைத்து இலங்கையில் பௌத்த - சிங்கள பேரினவாதத்தைத் தனது சீடர் அனாகரீக தர்மபாலா மூலம் கட்டமைத்தார். (இன்று

இலங்கையில் நடைபெற்று கொண்டிருக்கும் தமிழின பேரழிப்புக்கு வித்திட்டார்.) ஹிட்லர் முதல் இந்துத்துவா கும்பல் மற்றும் இன்றைய இராஜபக்ஷே வரை இனவாத பாசிச உருவாக்கத்திற்கு இவரது கருத்தியல், விதைகளாக இருந்து கொண்டு இருக்கின்றன.

பிராமணிய அடிப்படை வாதிகள் நவீன பிராமணியத்தை கட்டமைத்தனர். இதன் மூன்று உள்ளடக்க கூறுகளாக இந்து, இந்தியா, இந்தி என்பதாக முன்னிறுத்தினர். இதில் திலகரும் ஆ. எஸ். எஸ். நிறுவனர் களும் முக்கிய பங்கு வகித்தனர்.

**இந்து** என்பது பண்டைய பிராமணியக் கூறுகளான சடங்குகள் மற்றும் வர்ணக் கூறுகளும், இடைக்கால பிராமணியக் கூறுகளான (சாதி - நில வுடைமை) சாதி அடுக்கு, பெண்ணடிமைத்தனம், பிறநிலவுடைமை பிற்போக்குத்தனங்களும் உள்ளடங்கியது ஆகும். இவை இந்துமதம் என்று புதிய வடிவத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதற்கு முன்னிறுத்தினர்.

நவீன முதலாளித்துவ வடிவங்களான தேசியம் மற்றும் மொழி என்ற அடிப்படையில் **இந்திய தேசியமும்,** இந்துஸ்தானியில் உருது நீக்கப்பட்டு சமஸ்கிருதத்தால் உருவாக்கப்பட்ட **இந்தி** தேசிய மொழியவும் முன் நிறுத்தப்பட்டது.

பிரிட்டிஷ் காலனி ஆட்சிக்கு முன்பு இந்திய துணை கண்டத்தில் சமணம், புத்தகம், சைவம் வைணவம், சீக்கிய மதங்களே முக்கிய மதங் களாக இருந்தன. இந்திய துணை கண்டத்தை முழுவதுமாக இணைக்கக் கூடியதாக எந்தமதமும் இல்லை. இந்திய துணை கண்டத்தின் பெரும் பகுதியில் சாதியமும்பிராமணியமுமே நிலவின. இவை மதம் என்ற வடிவிலோ அல்லது இந்துமதம் என்ற வடிவிலோ நிலவவில்லை.

இதனால். சைவமும், வைணவமும் இந்து மதத்தின் உள்ளடக்கங் களாகவும், மற்றவைகளை துணைமதங்களாகவும் புராண வரலாற்று கதையளந்தனர்.

வணிகம் மற்றும் நிர்வாகத்திற்காக இணைப்புமொழி என்று இந்தி தேசிய மொழியாக முன்வைக்கப்பட்டது.

இந்திய துணைக்கண்டத்தின் இயல்பான வளர்ச்சி நசுக்கப்பட்டதால், தேசிய இனங்கள் வளராத சூழ்நிலையிலேயே இந்திய தேசியம் முன்வைக்கப்பட்டது.

***தேசிய இனங்களின் குறைவளர்ச்சி காரணமாகவே, மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வை இந்து தேசம், இந்திய தேசம் என்ற முழக்கங்களின் கீழ் அணி திரட்ட முடிந்தது.***

*பிராமண சக்திகளும், பெருமுதலாளி வர்க்கமும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டம் என்ற நீரோட்டத்திலேயே நவீன பிராமணிய கூறுகளை உருட்டி திரட்டி நிலைநிறுத்தினர்.*

*இந்திய துணைக்கண்டத்தில் நிலவிய பன்முக முரண் பாடுகளையும், வேறுபாடுகளையும் போலியான முழக்கங்கள் அல்லது கருத்தியலின் மூலம் திரையிட்டு மூடப்பார்ப்பதன் அடிப்படைக் காரணம் இந்தியப் பெரு வணிகர்கள் மற்றும் பெரு முதலாளிகளின் சந்தை நலன் மற்றும் அதிகார நலனே என்பதே சந்தேகமற்ற உண்மையாகும்.*

***காலத்திற்கேற்ப தன்னை தகவமைத்துக் கொண்ட நவீன பிராமணியமும், பிரிட்டீஷ் ஏகாதிபத்தியத்தால் அறிமுகப்படுத்தப் பட்ட சீர்திருத்தவாதமும் இந்திய பெரு முதலாளிவர்க்கத்தின் கருத்தியல்களாக மாறியது.*** *இதை மக்களிடையே கொண்டு செல்லும் வாகனமாகவும் எதிர்ப்புகளின் வடிகாலாகவும் காங்கிரசுக் கட்சி செயல்பட்டது. இதற்கு பொருத்தமான தலைமையாக காந்தியின் தலைமை அமைந்தது.*

*இதற்கு மாற்றாக புலேவும், பெரியாரும் ஆரிய - திராவிட கருத்தியலையே எதிர்கருத்தியிலாக முன்வைத்தனர். ஆரியர்கள் வந்தேறிகளாகவும், அழிவு சக்திகளாவும் மக்களிடம் பிரச்சாரம் செய்தனர். சமரசமின்றி இறுதிவரை போராடினர். அம்பேத்கர் பிராமணீய கருத்தியலை உறுதியாக எதிர்த்து போராடியது மட்டுமல்லாமல் மாற்றாக பௌத்தத்தை முன்வைத்தார். பொதுவுடைமைக்கட்சி மட்டுமல்லாமல் பகத்சிங், சிங்காரவேலர், போன்றோர் பொதுவுடைமை கருத்துக்களை பரப்பினர், பொதுவுடைமைக் கட்சி முதன்முறையாக முழுவிடுதலை, தேசிய சுயநிர்ணய உரிமை (பிரிந்துபோகும் உரிமை உட்பட) போன்ற முழக்கங்களினடிப்படையில் மக்களை அணிதிரட்டியது.*

***ஒட்டுமொத்தமாக பார்க்கும் பொழுது, இக்கட்டத்தில் ஆளும் வர்க்க கருத்தியலாக நவீன பிராமணீயமும், சீர்திருத்தவாதமும், மக்களிடையே செல்வாக்கு செலுத்தும் ஆளும்வர்க்க கருத்தியலாக காந்தியமும் இருந்தன.***

***இவற்றிற்கு எதிராக உழைக்கும் மக்களுக்கும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் பெரியாரியமும், அம்பேத்கரியமும், நவீன பாட்டாளி***

***வர்க்க உரு வாக்கத்தினாலும் ருஷ்ய புரட்சியாலும் இந்தியாவில் அறிமுகமாகிய பொதுவுடைமை தத்துவமும் இருந்தன.***

***இரண்டு உலகப் போரினால் கடும் பலவீனத்தை அடைந்த பிரிட்டீஷ் தான் விரட்டியடிக்கப் படுவோம் என அஞ்சியது. எனவே, தனது பொருளாதார நலன்களைக் காத்துக் கொள்ளும் விதமாக ஒரு திட்டத்தை முன் வைத்தது. அது தேசிய இனங்களின் அடிப்படையில் பிரிவினை இல்லாமல், மதங்களின் அடிப்படையில் இந்தியா, பாகிஸ் தான் என்ற தேசிய இனங்கள் மற்றும் பழங்குடிகளின் இரண்டு சிறைக் கூடங்களை உருவாக்குவது என்ற இராஜாஜி திட்டமாகும்.***

***அம்பேத்கர் தலித்துகளுக்கு தனித் தேசத்தையும், பெரியார் தனி திராவிட நாட்டையும் கோரினார். கம்யூனிஸ்டு கட்சி தேசிய சுய நிர்ணய உரிமையை (பிரிந்து போகும் உரிமையுடன்) கோரியது. நேருத் தலைமையிலான காங்கிரசும், ஜின்னாவின் முஸ்லீம் லீக்கும் இராஜாஜி திட்டத்தை ஏற்றனர்.***

***மறுபக்கம், தொழிலாளர்களின் போராட்டங்களும், விவசாய கிளர்ச்சிகளும், பழங்குடி மக்களின் வீரஞ்செறிந்த போராட்டங்களும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு அச்சத்தை ஏற்படுத்தின. ஏகாதிபத்திய கட்சிக்கு இறுதி அஞ்சலி செலுத்தும்முகமாக கடற்படை எழுச்சி அமைந்தது. இதை ஒட்டிய இராணுவ கலசங்கள் தெளிவாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் இறுதி முடிவை கட்டியங் கூறின.***

***இதனால் தான் பலாத்காரமாக தூக்கியெறியப் படுவோமோ என்று அச்சமுற்ற பிரிட்டிஷ் தனது பங்காளியான இந்திய பிராந்திய பெரு முதலாளிகளின் கையில் அரசியல் அதிகாரத்தை சமாதான பூர்வமாக மாற்றித் தந்தது.***

## சுதந்திர இந்திய அரசு

*இந்திய சுதந்திரம் தேசிய இனங்கள் மற்றும் பழங்குடிகளின் விடுதலையாகவோ அல்லது தேசிய சுயநிர்ணய உரிமையாகவோ அல்லாமல், இந்திய துணைகண்டத்தில் வளர்ச்சி அடைந்த மிகப் பெரிய தேசிய இனங்களான வங்காள மற்றும் பஞ்சாப் தேசிய இனங்களை பிளந்து இந்து முஸ்லீம் என்ற மத பிரிவினையின் அடிப்படையிலேயே (இந்தியா, பாகிஸ்தான்) இந்தியப் பெருமுதலாளி வர்க்கத்தால் அடையப்பெற்றது.*

*இந்தியப் பெரு முதலாளி வர்க்கம் இந்தியாவில் உள்ள பிற சமஸ்தானங்களில் உள்ள சாதி நிலக்கிழாரிய (அரசர்களை) அதிகாரத்தை வீழ்த்தி தம்முடன் இணைத்துக் கொண்டது.*

அரசியல் அதிகாரம் பெற்ற இந்தியப் பெருமுதலாளி வர்க்கத்தின் முன் இரண்டு வழிகள் இருந்தன.

முதலாவது, பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்தை நிறைவு செய்ய மூலதனத்தை கைப்பற்றுவது அல்லது வெளியேற்றுவது. அல்லது நிபந்தனைக்குட்பட்டு அனுமதிப்பது இதர நிதி மூலதனங்களை நிபந்தனைக் குட்பட்டு அனுமதிப்பது அல்லது வெளியேற்றுவது, அடுத்து முதலாளித்துவ ஜனநாயக கடமைகளை முழுமையாக நிறைவேற்றும் முகமாக சாதி-அரை நிலவுடைமை உற்பத்தியை ஒழித்து கிராமங்களில் முதலாளித்துவ விவசாயத்தை கட்டி அமைப்பது. நகரங்களில் கைத்தொழில், பட்டறைத் தொழிலுக்கு மாற்றாக ஆலை முதலாளியத்தை நிறுவுவது என்பதாகும்.

இரண்டாவதாக, தனது முன்னோர்களான உலக முதலாளித்துவத்தின் பாதையில் நிழக்கிழாரியத்துடன் சமரசம் செய்துக் கொண்டு, தனது தேவைக்கேற்ப, சிறுக சிறுகவோ அல்லது படிப்படியாகவோ நீண்டகால போக்கில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வது என்பதாகும்.

இந்த ஏகாதிபத்திய காலக்கட்டத்தில் முதலாவது வழியை நிறைவேற்றக் கூடிய ஆற்றலும் தகுதியும் பாட்டாளி வர்க்கத்திற்கு மட்டுமே உண்டு வேறு எந்தவகை முதலாளித்துவ வர்க்கத்திற்கும் கிடையாது. இந்தியப் பெரு முதலாளிவர்க்கமும் தனது வர்க்க பண்பிலிருந்தும், வர்க்க நலனிலிருந்தும் இரண்டாவது வழியை தேர்ந்தெடுத்தது.

அதாவது, பிரெஞ்சு தேசத்தில் முதலாளித்துவ வர்க்கம். நிலக்கிழாரிய வர்க்கம் மீண்டும் ஆட்சியை கைப்பற்றிய போதும் உறுதியாக தூக்கியறிந்தது. இதில் உடனிருந்த பாட்டாளி வர்க்கம், முதலாளித்துவ வர்க்கத்தை தூக்கியெறிந்தது. இதில் உடனிருந்து பாட்டாளி வர்க்கம், முதலாளித்துவ வர்க்கத்தை தூக்கியயெறிந்து பாரீஸ் கம்யூனை அமைத்தது. இந்நிகழ்வே முதலாளித்துவ வர்க்கத்திற்கு தெளிவாக பாடத்தை புகட்டியது.

ஜெர்மனியில் முதலாளித்துவம் நிலக்கிழாரியத்துடன் சமரசம் செய்துக் கொண்டது. நிலவுடைமைத்துவமே படிப்படியாக முதலாளித்துவமாக மாற்றியமைக்கப்பட்டது. இதற்கு பிறகு இத்தாலி, ஜப்பான் என்று இதுவே தொடர்ந்தது. காலனி நாடுகளிலும் இதுவே அரைத்தன்மையில் மாற்றப் பட்டது.

இரண்டாம் உலகப் போருக்குப்பின் ஏற்பட்ட சீன விடுதலை, கிழக்கு அய்ரோப்பா நாடுகளின் விடுதலை என்று கம்யூனிச பூதத்தின் மீதான அச்சம் மேலும் இக்கருத்தை வலுப்படுத்தியது.

*இதன்பின்னணியிலேயே இந்தியப் பெருமுதலாளி வர்க்கம் தனக்கான பாதையை தேர்ந்தெடுத்தது. இது நிர்பந்தத்திலிருந்தோ, கட்டுபாட்டி லிருந்தோ அல்ல தனது வர்க்க பண்பு, வர்க்க நலனிலிருந்தே தேர்ந் தெடுத்தது.*

*இந்தியாவில் முழுவதுமாக முதலாளியத்தை கட்டியமைப்பதன் மூலம் தனக்கு குழிதோண்ட பெரு எண்ணிக்கையிலான பாட்டாளி வர்க்கத்தை உருவாக்க தயாரில்லை.*

*மேலும் தேசிய சுயநிர்ணய அடிப்படையில் தேசங்கள் அமைவது என்பது, சுதந்திர தேசிய பொருளாதாரத்தை வளர்த்தெடுப்பது என்பது இந்திய பெரு மூலதனத்திற்கான ஆப்பு என்பதாகும். எனவேதான், தேசிய சுயநிர்ணய உரிமை என்ற வாக்குறுதி அரசியல் தலைமை தரகர் நேருவால் காற்றில் பறக்க விடப்பட்டது.*

*பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் இயல்பான முதலாளித்துவ வளர்ச்சி அழிக்கப்பட்டு பின்னர் உருவான வணிக பெரு மூலதனமும் சரி, தொழில் பெருமூலதனமும் சரி தேசியத்தன்மையிலிருந்தோ, தேசிய இனத்திலிருதோ உருவாகவில்லை மாறாக, தேசிய இன எல்லைகளை தாண்டி பிரதேச அளவில் இந்திய துணைகண்ட அளவிலான பெரு மூலதனமுமாக ஏகாதி பத்தியத்துடன் சமரசத்தில் உருவானது. மேலும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தித்தின் இதர காலனி நாடுகளிலும் தனது மூலதனத்தை விரிவுபடுத்தியது. இதன் பொருள் நிதிமூலதனத்தன்மை ஏகாதிபத்திய தன்மை கொண்டது என்பது இல்லை பிராந்திய பெருமூலதனத்திற்கான வலிமையை பெற்றிருந்தது என்பதுதான். அதாவது,* ***இந்தியப் பெரு மூலதனத்தின் உள்ளடக்க கூறு என்பது சுதந்திர தேசிய மூலதன எதிர்ப்பு, நிதி மூலதன கூட்டு (அ) சார்பு என்பதாகும். இதுவே, பிற்போக்குத்தனமான இந்தியப் பெரு மூலதனத்தின் குறிப்பானத்தன்மையாகும்.***

*எனவேதான், பிற்போக்கு உலக முதலாளித்துவமான ஏகாதி பத்தியத்தின் விசுவாசமிக்க கூட்டாளியாக தன்னை மீண்டும் உறுதிப்படுத்திக் காட்டியது. இதனால் இந்தியாவின் மிகவும் பிற்போக்கு சக்திகாளான சாதி - நிலக்கிழாரியத்துடன் சமரசம் செய்துக் கொண்டது.*

***இதன் மூலம், அரசியல் சுதந்திரத்திற்கு முன் காலனி, சாதி - அரைநிலவுடைமை, அரை தொல்குடியாக இருந்த சமூகங்களின் நிலை இப்பொழுது இந்தியப் பெருமூலதன, சாதி -அரை நில வுடைமை, அரை தொல்குடி சமூகங்களாக மாறியது.***

தான் தேர்ந்தெடுத்த பாதையின் ஆபத்தை உணர்ந்தே அதாவது, ஒரு பக்கம் நிதிமூலதன சார்பு மற்றொருபக்கம் அரசியல் சுதந்திரம் என்ற முரண்பாட்டின் பொருளை உணர்ந்தே இந்தியப் பெருமுதலாளி வர்க்கம் தனது சுரண்டல் பயணத்தை எச்சரிக்கையாக தொடங்கியது.

முதலில். பழைய நிலையே தொடர்ந்த. பின்னர் கடுமையான இறக்குமதி சட்டங்கள் அந்திய மூலதனக்கட்டுப்பாடு, வரையறுக்கப்பட்ட தொழில் முதலீடு என்று பாதுகாப்புச் சட்டங்களால் தன்னை நிதி மூலதன ஏகாதிபத்திய கழுத்து நெறிப்பிலிருந்து காத்துக் கொள்ள திட்டமிட்டது.

இரண்டாம் உலகப் போருக்குப்பின் உலகத்தில் புதிய ஏகாதி பத்தியத்திய ஒழுங்கமைப்பு உருவானது. இக்கட்டத்தில், நடைபெற்ற தேசிய விடுதலை போராட்டங்கள், கம்யூனிஸ்டுக் கட்சிகள் தலைமையில் நடைபெற்ற புரட்சிகள் ஏகாதிபத்திய முகாமிற்கு கிலியை ஏற்படுத்தி யிருந்தன. எனவே, அமெரிக்கத் தலைமையிலான ஏகாதிபத்தியங்கள் பழைய வகைப்பட்ட நேரடி சுரண்டலுக்கு மாற்றாக, புதிய வகைப்பட்ட காலனியை சுரண்டல் முறைக்கு மாற்றிக்கொண்டனர்.

அதாவது, பொம்மை அரசாங்கத்தின் மூலம் காலனிய ஆதிக்கம், ஒன்றுக்கு மேற்பட்ட ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கம் உள்ள அரைக் காலனித்துவம், அரசியல் சுதந்திரம் பெற்ற நாடுகளில் ஏகாதிபத்திய சார்பு பொருளாதார கட்டமைத்தல் என்ற புதிய வகைகளில் தங்களது ஆதிக்கத்தை தொடர்ந்தன.

இந்தியாவின் அரசியல் நிலைத்ததன்மைக்கு அமெரிக்கா காத்திருந்தது அதே சமயத்தில் பொதுத்துறை மயமாக்கலுக்கெதிராக கடுமையான நிபந்தனைகளை விதித்தது. முதன்மை அரசியல் தரகரான நேரு அறிவாளித் தனமாக சோவியத்துடன் குறைந்த வட்டி, கடுமையற்ற நிபந்தனைகளுடன் ஒப்பந்தங்கள் போட்டார் - இதனால் அமரெிக்கா, பிரான்சும் தவிர்க்க முடியாமல் அதே செயல்பாட்டை மேற்கொண்டனர்.

இரண்டு முகாம்களுக்கு இடையிலான முரண்பாட்டை இந்திய பெருமுதலாளிகள் மிக தந்திரமாக பயன்டுத்திக் கொண்டனர். மேலும் பின்னர் உருவான அமெரிக்க ஏகாதிபத்தியம், ரஷ்ய சமூக ஏகாதிபத்தியம் என்ற இரண்டு மேனிலை வல்லரசுகளுக்கு இடையிலான பணிப்போர் என்ற முரண்பாடுகள் வளர்ச்சியடைந்த காலகட்டத்தை மிக திறமையாக பயன்படுத்திக் கொண்டனர்.

இந்த செயல் போக்கில் இந்தியாவின் சிறப்புத்தன்மையாக அதிகார வர்க்க மூலதனம் பலமாக வளர்ச்சி பெற்றது அரசு ஏகபோகம் விசுவ

ரூபமெடுத்தது. நேரு, இந்திராகாந்தி ஆட்சிகாலங்களில் இப்போக்கு திடப்பட்டது. இந்த வளர்ச்சி போக்கில் இந்தியாவில் புதியவர்க்கம் உருவானது.

ஏற்கெனவே, பிரிட்டிஷ் காலனியை ஆட்சியில் பயிற்றுவிக்கப்பட்ட அரசியல் தரகர்களும், அதிகார வர்க்கத்தினருமே அதிகாரவர்க்க முதலளிகளாக உருவாயினர்.

**இந்தியாவில் உள்ள மொத்த மூலதனத்தில் முதலில் அரசு மூலதனமும், அடுத்து பெருமூலதனமும், மூன்றாவதாக நிதி மூலதனம் (ஏகாதிபத்திய) என்ற நிலை உருவானது.**

எண்பதுகளில் இந்திய பெருமுதலாளித்துவம் அரசு மூலதனம் சார்ந்து தன்னை பலமாக வளர்த்துக் கொண்டதும், தன்னை விரிவு படுத்திக்கொள்ள தயார் படுத்திக் கொண்டது. அரசியல் தரகரான இந்திராகாந்தி சோவியத்தின் பின்னடைவை முன்னுணர்ந்து அமெரிக்காவுக்கு பச்சைக் கொடி காட்டினார். இராஜிவ் காந்தி புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் தனியார்மயமாக்கல், தாராளமயமாக்கலை முன்வைத்தார்.

அமெரிக்க தலைமையிலான ஏகாதிபத்தியங்கள் புதியவகை சுரண்டலுக்காக புதிய வடிவத்திற்கு நகர்த்தின. உலகமயமாக்கல் என்ற பெயரில் உலக வர்த்தகக் கட்டுபாட்டில் உலகம் முழுவதையும் கொண்டு வரும் வேளையில் இறங்கி உள்ளனர். இந்திய பெரு முதலாளிகளும் இதில் தங்களை இணைத்துக் கொண்டுள்ளனர்.

மேலும், இந்திய பெரு மூலதனமும், இந்திய அதிகார வர்க்க மூலதனமும் உலகத்தில் உள்ள அனைத்துக் கண்டங்களுக்கும் விரிவாகி வருகிறது.

**1947-ல் அரசியல் சுதந்திரம்** அடைந்த இந்திய பெருமுதலாளி வர்க்கம் 1950-ல் இந்தியாவை அரசியல் சுதந்தரம் பெற்ற குடியரசாக அறிவித்து பிரட்டீஷ் ஏகாதிபத்தியத்திடம் இருந்து அரசு எந்திரத்தை தனது முழு அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்தது. இந்த இடைப்பட்ட காலத்தில் இந்தியா - பாகிஸ்தான் பிரிவினையை ஒட்டி எழுந்த குழப்ப நிலையை கட்டுக்குள் கொண்டு வந்தும், சாதி - நிலக்கிழார் சக்திகளை தனது அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்தும் தன்னை நிலைப்படுத்திக் கொண்டது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சர்வாதிகாரத்தின் கீழ்ழிருந்த இந்திய துணைகண்டத்தின் ஒரு பெரும் பகுதி இந்தியா என்ற பெயரில் இந்திய பெரு முதலாளிகளின் சர்வாதிகார நாடாக மாறியது.

*தேசிய சுய நிர்ணய உரிமையுடன் கூடிய கூட்டு அரசு என்பதற்கு மாறாக இந்திய ஒன்றிய அரசு என்று பெயரளவில் அறிவிக்கப்பட்டு, இந்திய நாடு என்பது தேசிய இனங்கள் மற்றும் பழங்குடிகளின் சிறைக் கூடமாக மாறியது.*

*மொழி வாரி மாநில போராட்டங்களில் முதலில் தயங்கிய ஆளும் வர்க்கங்கள் பின்னர் அதை தனக்கு சாதகமாக மாற்றிக் கொண்டன. தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்களின் தேவையை இது பாதாளத்திற்கு அனுப்பியது.*

*நிர்வாகம், அதிகாரங்கள் பகிர்வு என்ற பெயரில் மையப்பட்டியல், பொதுப்பட்டியல், மாநிலப்பட்டியல் என்று பிரிக்கப்பட்டன. இதுவே, அரை - கூட்டாட்சி முறை என்று வர்ணிக்கப்பட்டது. ஆனால், படிப்படியாக மாநிலப்பட்டியலில் உள்ளவை மையப்பட்டியலுக்கு மாற்றப்பட்டு கொண்டிருக்கின்றன. குறைந்த பட்ச அதிகாரங்கள் கூட பிடுங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.*

*1950-க்குப் பின் அரசியல் நிர்ணய சட்டம் முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயக வடிவத்தின் மூலம் செயல்படுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் அரசியல் சுதந்திரம் பெற்ற முதலாளித்துவ ஜனநாயக நாடாக பறைசாற்றப்பட்டது.*

***"அரசியல் சுதந்திரம் என்பதன் பொருள் பின்வருமாறு அமையும் மக்கள் சம்பந்தப்பட்ட பொது பிரச்சனைகளையும் அரசாங்கம் தொடர்பான பிரச்சனைகளையும் ஒழுங்குபடுத்திக் கொள்ளும் உரிமை, சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை, ஆகியவை அரசியல் சுதந்திரம் என்ற கோட்பாடுட்டுக்குள் அடங்கும், சட்டங்களை விவாதித்து நிறைவேற்றும் உரிமை, வரிவிதிக்கும் உரிமை ஆகிய அனைத்தும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்துக்கே வழங்கப்படுதல் அனைத்து அதிகாரிகளையும் நியமனம் செய்யும் உரிமை, அரசாங்க பிரச்சனைகள் தொடர்பாக விவாதிக்க கூட்டங்கள் நடத்தும் உரிமை, எவரிடமும் அனுமதி கோராமல் நாளிதழ்களையும் புத்தங்களையும் வெளியிட உரிமை ஆகியவையும் அரசியல் சுதந்திரம் என்ற கோட்பாட்டுக்குள் அடங்கும்"***, - *லெனின் (கிராமப்புற ஏழைமக்களுக்கு)*

*இந்திய நாடாளுமன்ற ஜனயநாயகத்தின் நிலை என்ன?*

***மக்கள் தங்களது பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கும் உரிமை உண்டு. திருப்பி அழைக்கும் உரிமை கிடையாது. அதிகாரிகளை***

**தேர்ந்தெடுக்கும் உரிமை கிடையாது. முக்கிய சட்டங்கள் மக்கள் கருத்துப்படி நிறைவேற்றுப்படுவது கிடையாது. அதாவது, பொது வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றப்படுவது கிடையாது. சமூகத்தின் பன்முகத்தன்மைக்கேற்ப விகிதாச்சார பிரதிநிதித்துவம் கிடையாது. தேர்ந்தெடுக்கப்பட்டதற்கேற்ப பிரதிநிதித்துவமும் கிடையாது. இந்திய (ஒன்றிய) அரசு என்று சொல்வதற்கேற்ப தேசிய இனங்கள் மற்றும் பழங்குடிகள் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒன்றிய அவை கிடையாது.**

*மேற்கண்ட முதலாளித்துவ ஜனநாயகத்தின் முக்கிய அடிப்படைக் கூறுகள் இந்திய நாடாளுமன்ற ஜனநாயகத்தில் கிடையாது. இது மட்டுமல்லாமல் நவீன சட்டங்களின் ஆட்சி என்று சொல்லப்பட்டாலும், சட்டங்கள் ஏட்டளவிலும் நடைமுறையில் சாதி - நிலவுடைமை மதிப்பீடுகளும் (அ) மனு நீதி தர்மமே நடைமுறையாக்கம் பெறுகிறது. இது நீதிமன்றங்கள் முதல் கிராமப்புற சாதிக்கிழார்களின் பஞ்சாயத்து வரை மாற்றப்படாத செயலாக்கமாக உள்ளது.*

*மிகத் தெளிவாகவே ஆளும் வர்க்கங்களின் நலனை காப்பதே சட்டங்களில் நோக்கமாக உள்ளது. பெரும்பாலானவை சட்டங்களுக்கு அப்பாற்பட்டே செயல்படுத்தப்படுகின்றன. இதனால் நாடாளுமன்ற ஜனநாயகம் என்பது சாராம்சத்தில் போலி ஜனநாயகமாகவே உள்ளது. ஒட்டு மொத்தத்தில், இந்திய ஜனநாயகம் என்பது ஆளும் வர்க்கங்களுக் கானதாகவும் ஆதிக்க சாதிகளுக்கானதாகவும், மக்களுக்கு உரிமைகள் மறுக்கப்பட்டும் இருப்பதால் அரைத்தன்மை கொண்டதாகவே உள்ளது.*

*இந்திராகாந்தியின் அவசர நிலை ஆட்சி இந்திய ஜனநாயகத்தின் முகமுடியை கிழித்தெறிந்தது. பின்னர், ஜெயலலிதா, நரேந்திர மோடி என்று இந்திரா காந்தியை மிஞ்சுபவர்கள் தொடர்ந்துக் கொண்டிருக்கிறார்கள்.*

*இந்திய பெருமூலதனத்தின் பாசிசம் இன்று உலக அரச பயங்கரவாதத்தின் பகுதியாக இந்திய அரசபயங்கரவாதமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நக்சலைட் பயங்கரவாதம், இஸ்லாமிய பயங்கரவாதம் ஒழிப்பு என்ற பெயரில் உழைக்கும் மக்களையும், ஜனநாயக ஆற்றல் களையும், புரட்சியாளர்களை ஒடுக்கியும் கொன்று குவித்துக் கொண்டிருக்கிறது.*

*இந்திய ஆளும் வர்க்கங்கள் மற்றொரு வலிமை மிக்க ஆயுதமான கருத்தியலை கொண்டிருக்கின்றன. கடந்த காலக்கட்டத்தில் குறிப்பிட்டது போல் நவீன பிராமணீயமும் சீர்திருத்த வாதமும் சமூகத்தில் தீர்மானகரமான*

ஆதிக்கத்தைக் கொண்டிருக்கின்றன. காந்தியம் இக்கட்டடத்தில் காந்தியைப் போல் ஓரங்கட்டப்பட்டது. நவீன பிராமணியத்தின் அபாயகரமான வெளிப் பாடாக இந்துத்துவ பயங்கரவாதம் இன்று சமூக கேடுகளை விளைவித்துக் கொண்டிருக்கின்றன.

சீர்திருத்தவாதம் என்பது ஒருபுறம் ஆளும்வர்க்கத்தின் நலனுக்காவும் மறுபுறம் சமூக நெருக்கடிகளை தனிப்பதற்காகவும் இந்திய ஆளும் வர்க்கங்கள் மிகவும் திறமையாக பயன்படுத்தி வருகின்றன.

சீர்திருத்தவாதம் மறுபக்கத்தில் புரட்சிகர முகாமிலும் முதன்மை செல்வாக்கை செலுத்துகிறது. கடந்த காலத்தில் உருவான பெரியாரியமும், அம்பேத்காரியமும் இக்கட்டத்திலும் நவீன பிராமணித்தின் கருத்தியலுக் கெதிராக உறுதியான போராட்டத்தை தொடுத்தனர். அதே சமயத்தில் இவை இயல்பிலேயே சீர்திருத்த கோட்பாட்டு உருவாக்கத்தை கொண்டிருந்த படியால் அம்பேத்கர், பெரியார் காலத்திலேயே சீர்திருத்த எல்லைக்குட் பட்டதாகவே இருந்தன.

இக்கட்டத்தில் ஆளும் வர்க்கத்தின் முக்கிய சீர்திருத்தமான நேரு (சோசலிச) ஜோதியில் இந்தியகம்யூனிஸ்டுக் கட்சி அய்க்கியமாகியது. மேலும் சர்வதேச பொதுவுடமை இயக்கம் பிளவுண்டபிறகு குருசேவிய திரிபுவாத பாதையை இ.க.க. ஆதரித்தது. பின்னர், உருவான மார்க்சிஸ்ட் கட்சியும் இப்பாதையையே தேர்ந்தெடுத்தது. இதனால், இவர்கள் தெளிவாகவே உழைக்கும் மக்களை பொருளாதாரவாதம், தொழிற்சங்க வாதம், சீர்திருத்தவாதம், நாடாளுமன்ற வாதத்தில் தொடர்ந்து மூழ்கடித்துக் கொண்டிருக்கின்றன.

நக்சல்பாரி பேரெழுச்சியை ஒட்டி உருவான இ.க.க. (மா.லெ) கட்சி புரட்சிகர பராம்பரியத்தை கட்டி அமைத்தது. சில சிக்கல்கள் பற்றி பொதுவான முடிவை கொண்டு வந்தது. முக்கியமாக பலாத்காரத்தின் மூலமே புரட்சிகரமாற்றம் என்பதை திட்டவட்டமாக நிறுவியது. இதுவே இன்று வரை இக்கட்சியின் தொடர்ச்சியாக உள்ள பல்வேறு கட்சிகள் (அ) குழுக்களின் பராம்பரியமாக உள்ளது.

அதே சமயத்தில் மா.லெ. கட்சி கடந்த காலத்தின் அனுபவவாதத்தை தொடரவே செய்தது. இந்திய சமூகங்களைப் பற்றி நேரிடையான ஆய்விற்கு பதில், சர்வதேச நிலைபாடுகளை எந்திரகதியாக இங்கு பொருத்தினர். இந்திய சமூகங்களின் வளர்ச்சிகளை கணக்கில் கொள்ளாமல், பின்தங்கிய வலது நிலைபாடே எடுக்கப்பட்டது. இது அதிகாரத்தைப்பற்றிய பின்தங்கிய மதிப்பீட்டிற்கே கொண்டு சென்றது. இதன் விளைவாகவே ‘அழித்தொழிப்பு

பாதை' என்ற பின்தங்கிய வலது வழி உருவானது. இதன் திரிந்த வளர்ச்சியான வடிவங்கள்தான் இன்றைய இ.க.க. மாவோயிஸ்டுகளின் அரசியல் மற்றும் இராணுவ வழிகளான ஆயுத சீர்திருத்தவாதம், கெரில்லாயிசம் என்ற வலது வழிகளாகும். ஆளும் வர்க்க கருத்தியல்கள் புரட்சிகர முகாம்களிலும் செல்வாக்கு செலுத்துகின்றன என்பதே இன்றைய யதார்த்தமாகும்.

**தமிழகத்தைப் பொருத்தவரை** 1947க்கு பின் நடந்த முக்கிய நிகழ்வு மொழிவாரி மாநில பிரிவினைகளாகும். மெட்ராஸ் மாகாணத்திலிருந்து முதலில் ஆந்திர மாநிலம் பிரிந்தது. பின்னர் 1956 நவம்பர் 1ந்தேதி கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு, உருவாக்கப்பட்டது. தமிழக எல்லை மீட்பு போராட்டம் மிகத்தீவிரமாக நடைபெற்றது. ஆனால், தமிழர்கள் அதிகம் வசித்த இடுக்கி, சித்தூர் மாவட்டங்கள் இழக்கப்பட்டன.

மாநில பிரிவினை கோரிக்கைகள் முதலில் முற்போக்காக தோன்றிய போதிலும் இது தேசிய சுய நிர்ணய உரிமைக்கான போராட்டத்தை இல்லாதத்தாக்கியது. இதனால்தான் முதலில் இக்கோரிக்கைகளை ஏற்க மறுத்த நேரு பின்னர் ஒப்புக் கொள்கிறார்.

சுதந்திரத்திற்கு பின் நடந்த மெட்ராஸ் மாகாண சட்டமன்ற, தேர்தலில் (1952) இந்திய கம்யூனிஸ்ட்டுக் கட்சி கூட்டணியே அதிக இடங்களை பெற்றது. ஆனால், குறுக்கு வழியில் இராஜாஜி தலைமையில் காங்கிரஸ் ஆட்சியைப் பிடித்தது. பேரத்தின் மூலம் அணி மாற்றி ஆட்சியை பிடிக்கும் கேவலத்தை காங்கிரஸ் தொடங்கி வைத்தது. இரண்டாண்டுகளுக்கு பிறகு காமராஜர் முதல்வர் ஆன பிறகு மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட்டன.

திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து அண்ணாதுரை தலைமையில் திராவிட முன்னேற்றகழகம் (1949) உருவானது. தி.மு.க. முதல் தேர்தலில் பங்கெடுக்கவில்லை. அடுத்த தேர்தல்களில் பங்கெடுத்து வளர்ச்சி பெற்றது. இது "வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது", "அடைந்தால் திராவிட நாடு அடையாவிட்டால் சுடுகாடு", "மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி" போன்ற முழக்கங்களை முன்வைத்து செல்வாக்கு பெற்று வளர்ச்சி பெற்றது. இறுதியில் இந்தி எதிர்ப்பு போராட்டத்தை ஒட்டி ஆட்சியை பிடித்தது (1967).

1967க்கு பிறகு தி.மு.கவும் அ.தி.மு.கவும் மாறி மாறி ஆட்சி புரிகின்றனர். காங்கிரஸ் முற்றிலுமாக அகற்றப்பட்டுவிட்டது. கம்யூனிஸ்டுக் கட்சிகள் செல்வாக்கை இழந்தன.

திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் இலவசங்களும், சீர்திருத்த வாதங்களுமே மேலோங்கி உள்ளன. மாநில உரிமைகள் முற்றிலும்

மழுங்கடிக்கப்பட்டன. கடந்த இருபதாண்டுகளில் இவர்கள் மத்தியில் ஆட்சியில் பங்கு கொண்ட காலத்தில்தான் அதிகப்படியான மாநில உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன. அதிலும் முள்ளிவாய்க்காலில் அப்பாவி ஈழமக்கள் படுகொலைக்கு தி.மு.க ஆட்சியில் பங்கேற்று துரோக மிழைத்தது.

இக்காலக்கட்டத்தில் முக்கிய சட்டங்களாக குத்தகைதாரர் பாதுகாப்பு சட்டங்களும், நில உச்சவரம்பு சட்டமும் போடப்பட்டன. நில உச்சவரம்பு சட்டத்தால் எந்தவிதபயனும் இல்லை. பெரு நிலக்கிழார்கள் தங்கள் அதிகப்படியான நிலங்கைள பினாமிகள் பெயரில். டிரஸ்டுகள் பெயரிலும் மாற்றிக் கொண்டனர்.

குத்தகை தாரர் சட்டங்களை பொருத்தவரை துவக்கத்தில் வெற்றியை தரவில்லை ஆனால், பின்னர் படிப்படியாக முக்கிய மாற்றத்தை ஏற்படுத்தியது குறிப்பாக மறைமுக நிலக்கிழாரியத்தின் (ஆப்சென்டி லேன்ட்லார்டிசம்) நிலங்களின் குத்தகைதார்கள் பயன்பெற்றனர். பிராமனர்கள், வெள்ளாளர்களிடமிருந்த நிலங்கள் இடைநிலை ஆதிக்க சாதிகளிடம் பெருமளவில் கைமாறின. இப்போக்கே தமிழக கிராமப் புறங்களில் பெருநிலக்கிழார்கள் பெரும் எண்ணிக்கையில் இல்லாததற்கு முதன்மை காரணமாகும். இடைநிலை சாதிகளின் இந்த நிலவுடைமையின் வளர்ச்சியை மூன்றாவது கட்டம் என்று கூறலாம் (முதல் கட்டம் ஹைதர் அலியின் படையெடுப்பின்போது இரண்டாவது கட்டம் பிரிட்டீஷ் அரசின் "தரிசுநிலங்கள் மீட்பு" **1963** அரசு விதி நடைமுறைப் படுத்தப்பட்டதாகும்)

கிராமப்புறங்களில் பொருளாதாரத்தில் ஆதிக்கம் பெற்ற இடைநிலை ஆதிக்க சாதிகள் அரசியலிலும் ஆதிக்கம் பெற்றனர். நவீன வடிவமாக சங்கம் என்ற (சாதி சங்கம்) வடிவத்தின் மூலம் கல்வி, வேலை, அதிகாரத்திற்காக என்று போராட்டங்களை எடுத்தனர். பின்னர், அரசியல் கட்சியாகவும் பரிணமித்தனர். எடுத்துக்காட்டாக வன்னியர் சங்கத்தின் இடஒதுக்கீடு போராட்டத்தின் வளர்ச்சியில் பாட்டாளி மக்கள் கட்சி அரசியல் கட்சியாக உருவானது. தொன்னூறுகளுக்கு பிறகு இப்போக்கே தொடர்கிறது. மூவேந்தர் முன்னேற்ற கழகம், புதிய நீதிக்கட்சி, கொங்கு நாடு முன்னேற்ற கழகம் என்று தொடர்கிறது, இவ்வமைப்புகள் கணிசமாக வாக்குகளை பெற்றாலும் தாங்கள் சார்ந்த ஒட்டுமொத்த சமூகத்தை திரட்டுவதில் தோல்வியே அடைந்துள்ளன.

இதேபோல் ஒடுக்கப்பட்ட சமூகபிரிவிலும் அரசியல் கட்சிகள் உருவாகியுள்ளன. தலித்துகளுக்காக புதிய தமிழகம், விடுதலை சிறுத்தைகள் கட்சியும், முஸ்லீம் மதச் சிறுபான்மையிருக்காக மனிதநேய மக்கள் கட்சி,

போன்ற கட்சிகளும் உருவாகி உள்ளன. இவைகள் ஓரளவு செல்வாக்கை பெற்றிருந்த போதிலும் இவர்களின் சந்தர்ப்பவாத, பிழைப்புவாத செயல் பாடுகளுக்கு இவர்களின் சொந்த சமூகத்தினரிடையே அவநம்பிக்கை நிலவுகிறது. இதுமட்டுமில்லாமல் பெரிய கட்சிகளின் நலனுக்கு பலியாகும் பலவீனத்தையும் இவர்கள் பெற்றுள்ளனர்.

இக்கால கட்டத்தில் தமிழக போராட்ட வரலாற்றை பொருத்தவரை சில குறிப்பிடும்படியான போராட்டங்களே நடைபெற்றன. முதலில் தமிழ்நாடு தனி மாநிலம் அமைப்பதற்கான போராட்டம் தமிழகம் தழுவிய அளவில் எழுச்சியுடன் நடைபெற்றது.

தஞ்சையில் பிரிட்டிஷ் ஆட்சியின் இறுதியிலிருந்தே கம்யூனிஸ்டு கட்சியின் தலைமையில் விவசாயிகளின் சாணிப்பால், சவுக்கடி போன்ற சாதி எதிர்ப்பு போராட்டங்கள் மற்றும் வர்க்க போராட்டங்களும் எழுச்சியுடன் நடைபெற்றன இவை சில ஆண்டுகள் நிகழ்ந்தன என்பது இதன் சிறப்பம்சமாகும்.

அடுத்தாக, 1965ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு போராட்டம் ஆகும். இது தமிழகமெங்கும் எழுச்சியை தந்தது. இப்போராட்டம் சுமார் 50 நாட்கள் நீடித்தன. இதில் சுமார் 500 பேர் உயிரிழந்தனர். சுமார் 5000 பேர் கைது செய்யப்பட்டனர். இப்போராட்டம் இந்தியா முழுவதும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இப்போராட்டத்தின் பலனை தி.மு.க. அறுவடை செய்தது. இப்போராட்டத்தில் இந்திக்கு மாற்றாக ஆங்கிலம் முன்வைக்கப்பட்டது. தமிழ் முன்நிறுத்தப்படவில்லை இன்று வரை திராவிடக்கட்சிகள் ஆட்சியில் தமிழ் ஓரங்கட்டப்பட்டு ஆங்கிலமே கோலோச்சுகிறது.

எழுபதுகளில் நடைபெற்ற நாராணயசாமி நாயுடு விவசாய சங்க போராட்டம் பெரும் போராட்டமாக இருந்தது. தமிழகம் தழுவிய அளவில் பரவலாக விவசாயிகளின் வீரஞ்செறிந்த போராட்டமாக இது இருந்தது.

என்பதுகளில் ஈழவிடுதலை ஆதரவு போராட்டம் தமிழகம் தழவிய எழுச்சியை தந்தது. இந்திய அரசு ஆதரவு தந்ததால் தமிழகம் ஈழப் போராளிகளின் பயிற்சிகளமாக இருந்தது. இவை சில ஆண்டுகள் நீடித்தன.

தொண்ணூறுகளில் தென்மாவட்டங்களில் நடைபெற்ற சாதி மோதல்களை ஒட்டிய போராட்டங்கள் தலித் எழுச்சியாக அமைந்தன என்றால் மிகையாகாது.

தருமபுரி, சேலம், வடாற்காடு, தென்னாற்காடு, பெரம்பலூர் பகுதிகளில் மக்கள் யுத்தக் கட்சியால் எடுக்கப்பட்ட போராட்டங்கள் வரலாற்று சிறப்புமிக்கவையாகும். இப்பகுதிகளில் நூற்றுக்கணக்கான

*போராட்டங்கள் எடுக்கப்பட்டன. நிலப்பகிர்வு, தீண்டாமை எதிர்ப்பு, பெண் ஒடுக்குமுறை எதிர்ப்பு, கூலி உயர்வு, கந்துவட்டி, பல்வேறு பகுதி சிக்கல்கள் என்ற பலவித போராட்டங்கள் நடைபெற்றன. தருமபுரியில் 70களின் இறுதியில் இருந்து 2002 வரை தொடர்ந்து நீண்ட கால (சுமார் 25 ஆண்டுகள்) போராட்டங்கள் நடைபெற்றன.*

*சமீபத்தில் நடந்துக் கொண்டிருக்கும் கூடங்குளம் போராட்டம் மிகச்சிறப்பான போராட்டமாகும். அதேபோல் சமச்சீர்கல்வி, முல்லைப் பெரியாறு போன்ற சிக்கல்களுக்கான தமிழகம் தழுவிய போராட்டங்கள் போராட்ட ஆற்றல்களுக்கு உத்வேகத்தை அளித்துள்ளன.*

*இவைமட்டுமல்லாமல் தொழிலாளர், விவசாயிகள், மீனவர்கள், மாணவர்கள் என்று பலதரப்பினரும் எண்ணற்ற போராட்டங்களை எடுத்துள்ளனர்.*

*மேற்கண்ட போராட்டங்கள் எல்லாம் பகுதியளவிலேயே சுருங்கிக் கொண்டன இப்போராட்டங்களினால் சமூகத்தில் பகுதியளவு சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. ஆனால் தமிழகம் தழுவிய தமிழ்த்தேசிய இயக்கமாக எந்த போராட்டங்களும் பரிணமிக்கவில்லை, கம்யூனிஸ்டுகளின் தஞ்சாவூர் போராட்டமாகட்டும், மக்கள் யுத்தக் கட்சியின் போராட்டங்களாகட்டும் பகுதி அளவிலேயே சுருங்கி இருந்தன. தமிழகத்தின் இதர பகுதிகளுக்கு விரிவடையவில்லை. பகுதியிலேயே பின்னடைவுக்குள்ளாகின. இந்தி எதிர்ப்பு போராட்டம் அடுத்த கட்ட கோரிக்கைகளுக்கு நகராமல் தி.மு.க.வால் மழுங்கடிக்கப்பட்டது.*

*இனி தமிழ்த்தேசிய உரிமைக்கான வரலாற்றை பார்ப்போம் இவ் வரலாறு மூன்று போக்குகளை கொண்டது.*

***முதல்போக்கு வெள்ளாளிய தமிழ் தேசிய மாகும் இது நவீன வெள்ளாளித்தின் கூறுகளை வெளிப்படுத்துகின்றது. அதாவது ஓரளவு பிராமணர் எதிரப்பு, சாதியம் நீடிப்பு, சைவமதம், பெண்ணடிமைத்தனம், பிற்போக்கு நிலவுடமை சிந்தனைகள், தமிழக ஆளும்வர்க்க நலனை பாதுகாப்பது, குறுகிய இனவாதம் போன்ற கூறுகளை தமிழ்த் தேசியத்தோடு வெளிப்படுத்தும்.***

***இறுதியில் ஆளும் வர்க்கம், ஆதிக்க சாதிகளின் நலனை பாதுகாப்பதே இதன்நோக்கமாக இருக்கும், இப்போக்கு ஆளும் வர்க்கத்திற்கு சேவை செய்வதையே செயலாக கொண்டிருக்கும். எனவே இதை நிராகரிப்பது மிக அவசியமாகும்.***

***இப்போக்கை பகுதியாகவோ, முழுமையாகவோ, மறைமுக மாகவோ வெளிப்படுத்துவர்களாக மனோன்மணியம் சுந்தரனார், மறைமலைஅடிகள் முதல் இன்றைய அறிஞர் குணா (பெங்களூர்) வரை உள்ளனர்.***

***இரண்டாவது, தந்தை பெரியாரின் போக்காகும். இவர் முதலில் "தமிழ்நாடுதமிழருக்கே" என்ற முழுக்கத்தை ஆதரித்தார். பின்னர் "திராவிடநாடு திராவிடருக்கே" என்ற முழுக்கத்தை முன்வைத்தார். பிரிட்டிஷ் தூதுக்குழுவிடம் தனித் திராவிட நாடு கோரிக்கையை முன்வைத்தார் மொழிவாரி மாநிலங்கள் பிரிந்த பிறகு "சுதந்திர தமிழ்நாடு" முழக்கத்தை முன்னெடுத்தார். இம்முழுக்கம் சனநாயகத்தன்மை கொண்டதாக இருந்த போதிலும் இவரின் செயல்பாடுகள் மேலோட்ட மானதாகவே இருந்தது. செயல்பூர்வமாக இல்லை.***

***மூன்றாவதாக தமிழ் தேசிய விடுதலைக்கு புரட்சிக்கரத்தன்மை தந்ததில் முதன்மையானவர தோழர் தமிழரசனாவார். சாதி ஒழிப்பு, தமிழ்த் தேசிய விடுதலை என்ற கருத்தை சரியாகவே முன்வைத்தார். ஆனால், அதே சமயத்தில், இவர் மார்க்சிய - லெனினிய அமைப்பின் எழுபதுகள் அரசியல் வழியையே நடைமுறைபடுத்தினார். இவரது அமைப்பு, செயல் முறைகள் முற்றிலும் "அராஜகவாதமாகவே" இருந்தன. 1984-ல் மக்கள் யுத்தக் கட்சியிலிருந்து பிரிந்த இவர் 1987 மரணமடையும் வரை சில சாகச நடவடிக்கைகளிலியே ஈடுபட்டார். இது தவிர மக்களை திரட்டுவதற்காக எந்த செயல்போக்கையும் கண்ணோட்டத்தையும் பெற்றிருக்கவில்லை.***

*எனவே, தோழர் தமிழரசனின் தமிழ்த்தேசியம், சாதிஒழிப்பு போன்ற அரசியல் நிலைபாடுகளை அங்கிகரிப்பது என்பது தவிர, அவருடைய அமைப்பு, அரசியல் வழியை முற்றிலுமாக நாம் நிராகரிக்கவேண்டும்.*

*மேற்கண்ட போக்குகள் தமிழ் தேசிய விடுதலைக்கான சரியான திட்டத்தை முன்வைக்காததையும் தமிழ்த் தேசிய விடுதலையை மக்கள் கோரிக்கையாக மாற்றவில்லை என்பதையும் வரலாறு நமக்கு உணர்த்துகிறது.*

*அடுத்ததாக, தமிழகத்தில் பல அமைப்புகள் தமிழ்த்தேசியத்தை முன்வைத்து செயல்பட்டுக் கொண்டிருக் கின்றன. இலைகளில் பெரும்பாலும் என்பதுகளில் நடந்த தமிழ் ஈழவிடுதலை ஆதரவு போராட்டங்களின் உத்வேகத்தில் உருவானவை சுமார் இருபது இருபத்தைந்து ஆண்டுகளாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அரங்கக்*

கூட்டம், மாநாடுகளை தாண்டியதில்லை, மக்களுக்கும், இவர்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை, தனி உலகத்தில் உள்ளனர்.

தமிழ்த்தேசியத்தின் விடுதலைக்கான இலக்குகள் எவை, எப்படி அதிகாரத்தை கைப்பற்றுவது என்பது போன்ற அடிப்படையான அம்சங்களைப் பற்றி எந்தவித அறிவும் இல்லாதவர்களாக உள்ளனர்.

மேலும், தமிழக சமூகத்தை பற்றி மேலோட்டமான பார்வையே கொண்டுள்ளார், சரியான வரையறையை பெற்றிருக்கவில்லை.

இவர்களாலும் தமிழ்த் தேசிய சிக்கலை மக்களின் கோரிக்கையாக மாற்ற முடியாது என்பதே எதார்த்தமாக உள்ளது.

இந்த சூழ்நிலையும், எதார்த்தமும் தமிழ்த்தேசிய விடுதலைக்கான ஒரு புதிய கொள்கை திட்டத்தையும், ஒரு புதிய அமைப்பையும் கோருகின்றன. இந்த தேவையிலிருந்தே மக்கள் சனநாயக குடியரசுக் கட்சி உருவாக்கப்பட்டுள்ளது. உங்கள் முன் ஒரு புதிய கொள்கை திட்டமும் முன் வைக்கப்பட்டுள்ளது.

# II

# கொள்கை - திட்டம்

# இந்திய துணை கண்டத்தின் சமூகத் தன்மை?

தமிழக வரலாற்றை அடிப்படையாகக் கொள்ளும் அதே வேலை இந்தியத் துணைகண்டத்தின் தற்போதைய சமூகத் தன்மையையும் தமிழ்ச் சமூகத்தின் இன்றைய நிலையையும் கணக்கில் கொண்டால்தான், நம்மால் தமிழ்த்தேசிய விடுதலைக்கான திட்டத்தை மிகத்தெளிவாக முன் வைக்கமுடியும்.

இதன் அடிப்படையில் இந்திய துணை கண்டத்தின் தற்போதைய சமூகத் தன்மையை காண்போம்.

இந்திய துணைகண்டத்தை அதன் வரலாற்று போக்கில் நோக்கும் போது, ஓர் ஒற்றை சமூகமாக என்றும் இருந்திருக்க வில்லை. இந்திய பிராந்திய பெருமுதலாளிகளே தங்கள் சந்தைக்காகவும், சுரண்டலுக்காகவும் ''இந்திய தேசியம்'' என்ற கற்பிதத்தை உருவாக்கியுள்ளனர். இக்கற்பிதத்தை உண்மையாக்க நவீன பிராமணியமானது ''இந்து -இந்தியா - இந்தி'' என்ற கருத்தியலை தொடர்ந்து பரப்பி கொண்டிருக்கிறது.

எனவே, நாம் இந்திய பிராந்திய பெருமுதலாளிகளின் சுரண்டலை பாதுகாக்கும் நவீன பிராமணிய கருத்திற்கு பலியாகாமல் இந்திய துணை கண்டத்தின் தற்போதைய சமூக தன்மையை அறிய வரலாற்று பொருள் முதலியல் பார்வையில் அணுக வேண்டும்.

இந்திய துணை கண்டத்தில் தற்போது **முதலாளிய உற்பத்திமுறை, சாதி - அரை நிலவுடமை உற்பத்திமுறை, அரை தொல்குடி உற்பத்தி முறை என்ற மூன்று உற்பத்தி முறைகள் உள்ளது. இம்மூன்று உற்பத்தி முறைகளும் இந்திய துணைகண்டம் முழுக்க ஒரே மாதிரியாக இல்லாமல் ஒன்று ஓரிடத்தில் பலமாகவும், வேறோர் இடத்தில் குறைவாகவும் (அ) மிகக் குறைவாகவும் இருக்கிறது.**

சத்திஸ்கர், தண்டகாரன்யா, அசாம், மிசோராம், மணிப்பூர்.... போன்ற பகுதிகளில் அரை தொல்குடி உற்பத்தி முறையே பலமாக உள்ளது. பீகாரில் சாதி, அரை நிலவுடமை உற்பத்திமுறை பலமாக உள்ளது. தமிழ்நாடு, பஞ்சாப், அரியானா, கேரளாவில் மூலதன உற்பத்தி முறை பலமாக உள்ளது.

இந்தியா என்பது ஒற்றை சமூகமாக இல்லாத நிலையில் சமூக மாற்றத்தை முன்னெடுக்கும் அமைப்புகள் இந்தியாவின் முதன்மை முரண்பாடு நிலப்பிரபுத்துவத்திற்கும் X பரந்து பட்ட மக்களுக்கும் இடை யிலானது என்றும் (அல்லது) ஏகாதிபத்தியத்திற்கும் X பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலானது என்றும் வறட்டு கூப்பாடு போடுகின்றனர்.

*நிலப்பிரபுத்துவத்திற்கும் X பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடு இந்தியாவின் முதன்மை முரண்பாடு என்று முன்வைக்கும் மாவோயிஸ்ட் கட்சியானது பலமாக உள்ள சத்தீஸ்கரில் பழங்குடி மக்களுக்கும் ஜ் மூலதனத்திற்கும் (இந்திய பெருமுதலாளிகள், ஏகாதிபத்திய முதலாளிகள்) இடையிலான முரண்பாட்டை மையமாகக் கொண்டே இயங்குகின்றனர். மேற்கூறியதுதான் சத்தீஸ்கரின் எதார்த்தமாக உள்ளது.*

*இதே போல் அஸ்ஸாம், மிசோராம், நாகா-வில் பழங்குடி தேசத்திற்கும் X இந்திய ஒன்றிய அரசிற்குமான முரண்பாடே முதன்மை முரண்பாடாக உள்ளது. காஷ்மீரிலும் கூட காஷ்மீர் தேசத்திற்கும் X இந்திய ஒன்றிய அரசிற்கும் இடையிலான முரண்பாடே முதன்மை முரண்பாடாக உள்ளது.*

*பீகாரில் சாதி நிலவுடமைக்கும் X பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடே முதன்மையாக உள்ளது.*

***இந்நிலையில் மக்கள் சனநாயக குடியரசு கட்சியானது இந்தியா என்பது ஒற்றை சமூக வளர்ச்சி கொண்ட சமூகம் அல்ல என்ற வரலாற்று உண்மையை உணர்கிறது. சமூக கட்டங்கள் வெவ்வேறாக இருக்கும் நிலையில் இந்திய துணைகண்டம் முழுமைக்கும் ஒரே திட்டத்தை முன்வைப்பது என்பது சமூக எதார்த்தத்தை மறுக்கும் செயலாகும்.***

*சத்தீஸ்கர் மக்களுக்கான சமூக மாற்றத்திற்கான கொள்கையும், காஷ்மீர் மக்களின் சமூக மாற்றத்திற்கான கொள்கையும், பீகார் மக்களுக்கான சமூக மாற்றத்திற்கான கொள்கையும், தமிழக மக்களுக்கான சமூக மாற்றத்திற்கான கொள்கையும் ஒன்றாக இருக்க முடியாது.*

*ஒவ்வொரு தேசிய இனங்களிலும் கூட இத்தகைய வேறுபாட்டை காணமுடியும் என்ற கருத்தை சிலர் முன்வைக்கலாம். குறைந்த பட்சம் நாம் எதிலிருந்து தொடங்குவது என்பது நம்முன் உள்ள கேள்வியாகிறது.*

***தோழர் லெனின் "தேசங்களின் அரசு என்ற வரலாற்று கட்டத்தை தாண்டித்தான் வரலாறு முன்செல்லும்" என்ற கூற்றையும் "ஒவ்வொரு தேசத்துக்கும் தன்னாட்சியையும், ஐக்கியத்தையும் மீட்டளிக்காமல் பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேச ஒற்றுமையை உண்டாக்குவதோ, பொது நோக்கங்களுக்காக இந்த தேசங்களிடையே சமாதான வழிப்பட்ட அறிவார்ந்த ஒத்துழைப்பை ஏற்படுத்துவதோ முடியாத காரியம்" (பி.எங்கெல்ஸ் - கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை - இத்தாலிய பதிப்பின் முகவுரை)***

மேற்கூறிய வரலாற்று போக்கை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு தேசத்திற்கான (மொழி வழி தேசிய இனங்கள், பழங்குடி தேசங்கள்) திட்டத்தை முன்வைத்து, வரலாற்றின் இயல்பான "தேசங்களின் அரசு" என்பதை நிறுவி சமூக மாற்றத்தை முன்னெடுப்பது என்பதே அறிவியல் பூர்வமான முடிவாக இருக்க முடியும்.

இந்திய துணை கண்டத்தில் மையப்படுத்தப்பட்ட இந்திய ஒன்றிய அரசும், நிர்வாகமும், இராணுவமும், அரசியலும் இருப்பதால் நம்முன் மற்றொரு கேள்வி முன்னெழுகிறது. இந்திய பிராந்திய பெரு முதலாளி களிடம் உள்ள அரசியல் அதிகாரம் தூக்கியெறியப் படும் போதுதான் நாம் மேற்கூறிய சமூக மாற்றத்தை முன்னெடுக்க முடியும்.

எனவே, இந்திய துணை கண்ட அளவில் மையப்படுத்தப்பட்டுள்ள இந்திய ஒன்றிய அரசை தூக்கியெறிய சமூக மாற்றத்தை விரும்பும் அனைத்து இயக்கங்களும், கட்சிகளும் இந்திய துணைகண்ட அளவில் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டிய முன்நிபந்தனையுள்ளது.

மேற்கூறிய அடிப்படை உண்மைகளை உணரும் மக்கள் சனநாயக குடியரசு கட்சியானது கீழ்வரும் திட்டங்களை முன்வைக்கிறது.

1. **ஒவ்வொரு மொழிவழி தேசிய இனங்களும், பழங்குடி தேசங்களும் அந்தந்த தேசங்களின் சமூக, பொருளியல் நிலையை ஆய்வு செய்து தங்களுக்கான திட்டங்களை முன்வைப்பது.**

2. **இந்திய ஒன்றிய அரசை வீழ்த்தி, ஒவ்வொரு தேசமும் இந்திய ஒன்றிய சிறையிலிருந்து தங்களை விடுவித்து "சுதந்திர தேசமாக" அறிவித்து தங்களுக்கான "சுதந்திர தேச குடியரசை" அமைத்து கொள்ளுதல்.**

3. **ஒவ்வொரு "சுதந்திர தேச குடியரசும்" இணைவது அல்லது தனியே பிரிந்து போவது என்ற அடிப்படையில் மக்களின் வாக்கெடுப்பின் மூலம் விருப்பபூர்வமாக இணைந்து "சுதந்திர தேசங்களின் கூட்டரசை" அமைத்துக் கொள்ளுதல் என்ற புரிந் துணர்வுடன் மொழிவழி தேசிய இனங்கள், பழங்குடி தேசங்களில் உள்ள கட்சிகள் மற்றும் இயக்கங்கள் இந்திய துணை கண்ட அளவில் கூட்டமைப்பை அமைத்து கொள்வது.**

4. **தெற்காசிய அளவிலான கூட்டரசை படைப்பதை நோக்கமாக கொண்டு அதற்கான ஒருங்கிணைப்பை தெற்காசிய அளவில் உருவாக்குவதன் மூலம் வளரும் இந்திய ஏகாதிபத்தியத்தின் அனைத்து வேர்கால்களையும் வெட்டி எறிவது.**

மேற்கண்டவைகளின் அடிப்படையில் மக்கள் சனநாயகக் குடியரசுக் கட்சியானது தமிழகத்தின் சமூக, பொருளியல் நிலையை ஆய்ந்து தமிழ்த் தேசிய விடுதலைக்கான கொள்கையை முன்வைக்கிறது.

# தமிழ்த் தேசம் எத்தன்மையில் உள்ளது?

ஒரு தேசம் என்பது பொதுவான மொழி, பொதுவான பொருளாதாரம், பொதுவான மன இயல்பு, பொதுவான நிலப்பகுதியைக் கொண்டதாகும் என்று ஸ்டாலின் வரையறுக்கிறார்.

மேலும் ஆப்கான் பிற்போக்கு அரசனுடைய பிரிட்டீஷ் எதிர்ப்பு போராட்டத்தை ஆதரித்தது மட்டுமல்லாமல், ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பதை தேசிய விடுதலைப் போராட்டத்தின் முக்கிய கூறாக குறிப்பிடுகிறார்.

அரசுகளைப்பற்றி குறிப்பிடும் பொழுது, பிரான்சில் ஒற்றை தேசிய இன அரசும், ஜெர்மனி போன்ற நாடுகளில் பல் தேசிய இன அரசும், காலனிய நாடுகளில் பழங்குடிகள், தேசிய இனங்களை ஒடுக்கி ஏகாதிபத்திய அரசுகளுமாக உலகில் நிலவுகின்றன என்று குறிப்பிடுகிறார்.

மேற்கண்ட வரையறைகளை எப்படி புரிந்துக் கொள்வது? எப்படி பொருத்துவது? என்பதே நம் முன் கேள்விகளாக உள்ளன.

முதலாளித்துவம் அதன் முழுத்தன்மைகளோடு பிரான்சில் மட்டுமே வெளிப்பட்டது. இதன் பொருள் தேச உருவாக்கமும் பிரான்சைத் தவிர வேறு இடங்களில் மாறுபட்டே உருவாயின. ஜெர்மானிய நிலக்கிழார்களே முதலாளிகளாக மாறினர். ஜெர்மனியில் பல்தேசிய இனங்களின் அரசு அமைந்தன.

உலகில் வளர்ச்சி அடையாத பழங்குடி, நிலவுடைமை பகுதிகள் காலனி நாடுகளாயின. இவர்கள் மீதான ஒடுக்கு முறையின் காரணமாக தேசிய விடுதலை என்பது வளர்ச்சியடையாத பகுதிகளிலும் உருவாயின. இதனால் தேசியம் என்பது முதலாளிகளின் சந்தை சிக்கல் என்பதாக மட்டுமல்லாமல், ஒடுக்கப்படும் பிரிவினரின் (அ) பகுதிகளின் பிரிக்க முடியாத அங்கமாக தேசிய விடுதலைப் போராட்டம் மாறியுள்ளது என்பதே எதார்த்தமாகும்.

**எனவே, இந்த ஏகாதிபத்திய காலகட்டத்தில் தேசிய விடுதலைப் போராட்டம் என்பது பல்வேறு அம்சங்களைக் கொண்டதாக இருக்கும். இது பழங்குடிகள், மதப் பிரிவினர், பிரதேச ஏற்றத்தாழ்வு, மொழி திணிப்பு, தேசிய இன ஒடுக்குமுறை என்று ஒடுக்குமுறை தன்மைக்கேற்ப பல்வேறு அம்சங்களில் வெளிப் படுகிறது.**

**இந்தியத் துணைக் கண்டத்தைப் பொருத்தவரையில் கூட வடகிழக்கு பகுதிகளில் நடைபெறும் பழங்குடிகளின் தேசிய விடுதலை போராட்டமும், காஷ்மீர், காலிஸ்தான் போன்ற மதத்தை முக்கிய கூறாகக் கொண்ட தேசிய விடுதலை போராட்டங்களும், பிரதேச ஏற்றத்தாழ்விற்காக உருவான தெலுங்கானா போராட்டமும் எடுத்துக்காட்டுகளாகும்.**

*மேற்கண்டவைகளை கணக்கில் எடுத்துக் கொண்டால் தேசங்களைப் பற்றிய நான்கு வரைமுறைகளும், ஒரு தேச விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கில் முழுமை பெறும் என்று கருதலாம்.*

**தமிழ்த் தேசியத்தின் தன்மையை எடுத்துக்கொண்டால், அது பொது மொழி, பொது நிலப்பகுதியைக் கொண்டிருக்கிறது. ஆனால், பொருளாதாரம் ஒத்த மன இயல்பைப் பெற்றிருக்கவில்லை. (வட்டார, சாதிய பண்பாடுகளே மேலோங்கி உள்ளன. ஆதிக்கம் செய்கின்றன.)**

*எனவே, தேசிய பொருளாதாரத்தைக் கட்டமைக்க வேண்டிய தேவை உள்ளது. அதேபோல், இப்பொழுதுள்ள ஆதிக்க சாதி, ஆளும் வர்க்க சாதிய நிலவுடையை பண்பாடுகளை ஒழித்து, உழைக்கும் மக்களின் ஜனநாயக பண்பு, அறிவியல் சிந்தனா முறையைக் கொண்ட புதிய மக்கள் சனநாயகப் பண்பாட்டை உருவாக்க வேண்டியுள்ளது.*

*மேற்கண்டவைகள் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கிலேயே நிறைவேறும்.*

# தமிழ்த் தேசத்தின் இன்றைய சமூக நிலை

## 1. தமிழ்த் தேசத்தின் அரசியல் அதிகாரம்:

*தமிழ்த் தேசத்திற்கான அரசியல் அதிகாரம் குறித்த சிக்கலானது நான்கு அடிப்படை அம்சங்களைக் கொண்டுள்ளது.*

**முதல் அம்சம் :**

**இந்திய ஒன்றிய அரசின் சிறையில் தமிழகம் அடிமைப் பட்டிருக்கிறது.**

- *1947- ஆகஸ்ட் 15-இல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடமிருந்த அரசியல் அதிகாரம் இந்திய பிராந்திய பெருமுதலாளிகளின் கைகளுக்கு மாறியது.*

- *இந்திய பிராந்திய பெருமுதலாளிகள் தங்களின் சந்தைக்காகவும், சுரண்டலுக்காகவும் இந்திய பிராந்தியம் முழுவதையும் அடித்தளமாகக் கொண்டு வளர்ந்தவர்கள். ஆகவே இந்திய பிராந்திய சந்தையை தங்களது முழுக்கட்டுப்பாட்டில் வைத்து கொள்வதற்காக சனநாயக பூர்வமற்ற வழியில் சர்வாதிகாரமாகத் தேசங்களின் உரிமையை பறித்து, தேசங்களை அடிமையாக்கி உருவாக்கப்பட்டதுதான் "இந்திய ஒன்றிய அரசு" ஆகும். இந்திய ஒன்றிய அரசானது மொழி வழி தேசிய இனங்களின், பழங்குடி தேசங்களின் சிறைக்கூடமாக உள்ளது. இதன் விளைவால் நமது உயிரான தமிழ்த் தேசமும் இந்திய ஒன்றிய அரசின் சிறையில் அடிமைப் பட்டிருக்கிறது.*

- *1956-ஆம் ஆண்டு மக்களிடம் கருத்துகளை சனநாயகப் பூர்வமாகக் கேட்டறியாமல் சர்வாதிகாரமாகவும், வரலாற்று ஆதாரங்களைப் புறந்தள்ளியும் தமிழக எல்லை வகுக்கப்பட்டு, தமிழ் மாநிலம் உருவாக்கப் பட்டது. அனைத்து அதிகாரங்களையும் தன்னகத்தே பெற்ற "சுதந்திர தமிழ்த் தேசக் குடியரசை" அமைக்காமல், எத்தகைய உரிமையுமற்ற* **"தமிழ் மாநிலம்" உருவாக்கப்பட்ட நாள் தமிழர்களுக்கு கருப்பு நாளாகும்.** *இந்நாள் நம் தமிழ்த்தேசம் இந்திய ஒன்றிய அரசின் சிறையில் சட்டபூர்வமாக அடிமைப்பட்ட நாளாகும்.*

**மாற்றாக......**

- *1947 - ஆகஸ்ட் 15-க்கு பிறகு இந்திய துணை கண்டத்தில் உள்ள நமது தமிழ்த்தேசம் உட்பட ஒவ்வொரு தேசமும் தனக்கான "சுதந்திர தேசக்குடியரசை" சனநாயகப் பூர்வமாக அமைத்து கொண்டிருக்க வேண்டும்.*

• இந்திய துணை கண்டத்தில் உள்ள ஒவ்வொரு சுதந்திர தேச குடியரசும் அத்தேச மக்களிடம் "சுதந்திர தேசங்களின் கூட்டரசில்" இணையலாமா, வேண்டாமா என பொதுவாக்கெடுப்பு நடத்தி மக்கள் விருப்பத்தின் அடிப் படையில் "சுதந்திர தேசங்களின் கூட்டரசை" உருவாக்கியிருக்க வேண்டும்.

• மேற்கூறியவற்றின் அடிப்படையில் நமது தமிழ்த்தேசம் தனது அரசியல் அதிகாரத்தை நிலைநாட்ட **முதன்மையாகச் செய்ய வேண்டிய பணி இந்திய ஒன்றிய சிறையைத் தகர்த்து விடுதலை பெற்ற "சுதந்திர தமிழ்த் தேசிய குடியரசை" படைப்பதே ஆகும்.**

• இதற்கு தடையாக நம்மிடம் உள்ளவைகள், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடத்தப்பட்ட சுதந்திர போராட்டத்தின் விளைவாக உருவானதுமான, இந்திய பிராந்திய பெருமுதலாளிகளால் கட்டியமைக்கப்பட்டதுமான "இந்திய தேசம்" என்ற சிந்தனை யிலிருந்து விடுபடுவதும், நாம் தமிழர்களாய் ஒன்றிணைய பெருந் தடையாக உள்ள "சாதியத்தை" அடித்து நொறுக்கி, சாதியம் ஒழித்து தமிழர்களாய் ஒன்றிணைவதும் அவசியமாகிறது.

மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம், இறையாண்மை பெற்ற தமிழ்த்தேசம், சுயநிர்ணய உரிமை போன்ற மழுப்பலான "சுதந்திர தமிழ்த்தேசக் குடியரசை" அமைப்பதிலிருந்து திசை திருப்பக்கூடிய சமரச, சந்தர்ப்பவாத முழக்கங்களுக்கு பலியாகாமல் "சுதந்திர தமிழ்த்தேச" முழக்கத்தை முன்னெடுப்பது.

## இரண்டாம் அம்சம்

## இந்திய பெருமுதலாளிகளின் சர்வாதிகார அரசியல் அதிகாரத்தின் கீழ் நமது தமிழ்த்தேசம் உள்ளது.

• 1947 - ஆகஸ்ட் 15-இல் அரசியல் அதிகாரத்தை தங்கள் வசமாக்கி கொண்ட இந்திய பிராந்திய பெருமுதலாளிகள் அன்றைய உள்துறை அமைச்சராக இருந்த வல்லபாய் பட்டேல் மூலமாக நமது தமிழகம் உட்பட இந்திய துணை கண்டம் முழுவதிலும் இருந்த சமஸ்தானங்களை முற்றிலும் ஒழித்தனர். இதன் மூலம் சாதிய நிலக்கிழார்களின் சமஸ்தான அரசியல் அதிகாரத்தை வீழ்த்தி, தங்களது அரசியல் அதிகாரத்தின் கீழ் முற்றும் முழுதாகக் கொண்டுவந்தனர்.

• இந்திய பெருமுதலாளிகள் சாதி - நிலவுடமையை முற்றிலும் ஒழிப்பதற்கு பதில் தங்களின் சுரண்டல் நலனை பாதுகாப்பதற்காக, மூலதன

- சாதி - நிலக்கிழார்களை கட்டுப்படுத்தப்பட்ட கூட்டாளியாக வைத்து கொண்டனர்.

• இந்திய ஒன்றிய அரசின் சிறையிலிருந்து நம் தமிழகத்தை விடுவித்து சாதி நிலவுடமை உற்பத்தியை ஒழிப்பது என்ற கடமையானது மக்கள் புரட்சியின் மூலம் நிறை வேற்றுவது தள்ளி போகும் பட்சத்தில், தற்போதைய உலகமயமாக்கல் சூழலில் படிப்படியாக வருங்காலங்களில் இந்திய பிராந்திய பெருமுதலாளிகள் தங்களின் தவிர்க்க இயலாத சுரண்டல் நலனிலிருந்து "முதலாளித்துவ பண்ணைகளை" நிறுவுவார்கள். இதன் விளைவாய் சாதி நிலவுடமை உற்பத்தி ஒழிக்கப்பட்டு விவசாயத்தில் முதலாளித்துவ உற்பத்தி நிலைநாட்டப்படும்.

• மேலும், இந்திய பெருமுதலாளிகள் ஏகாதிபத்தியத்துடன் கூட்டு (அ) சார்பு என்ற வகையில் உறவை வைத்துள்ளனர். தங்களுக்கு சேவகம் செய்யும் அதிகார வர்க்க முதலாளியத்தை ஊட்டி வளர்த்தும் வருகின்றனர்.

• இதனால் நம் தமிழ்த்தேசமானது இந்திய பெருமுதலாளிகளின் அரசியல் அதிகாரத்தின் கீழ் இந்திய பெருமுதலாளிகள், ஏகாதிபத்திய முதலாளிகள், மூலதன - சாதி - நிலக்கிழார்களின் சுரண்டல் காடாக உள்ளது.

**மாற்றாக .......**

எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு.... நாம்
எல்லோரும் சமநிலை உறுதி ஆச்சி ......

என்ற பாரதியின் பாடல் வரிகளுக்கு ஏற்ப 1947 - ஆகஸ்ட் 15-இல் நமது தமிழகத்தில் அனைத்து மக்களுக்கும் சுதந்திரம் கிடைத்தது என்று சொன்னால், மக்களுக்கான அரசியல் அதிகாரம் படைக்கப்பட்டு, தொழிலாளி ஜ் முதலாளி, உழவர்கள் ஜ் சாதி நிலக்கிழார்கள், தலித்துக்கள் x ஆதிக்க சாதி, பெண்கள் ஜ் மூத்தோன் வழி ஆணாதிக்கம், ஒவ்வொரு தேசத்திற்கும், பழங்குடிகள் x பழங்குடி அல்லாதோர்க்கும், ஒவ்வொரு மதத்திற்கும்... இடையிலான அனைத்து விதமான வேறுபாடுகள், சுரண்டல்கள், ஆதிக்கங்கள், ஏற்ற தாழ்வுகள் என அனைத்தும் ஒழிக்கப்பட்டு "எல்லோரும் சமநிலையில் வாழும் வாழ்வு" உறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடமிருந்த அரசியல் அதிகாரம் - மக்களின் கைகளுக்கு மாறியிருக்க வேண்டும்.

• ஆனால், இந்நிலை உருவாகவில்லை. **எனவே, இந்திய பெரு முதலாளிகளின் அரசியல் அதிகாரத்தை வீழ்த்தி நமது சுதந்திர தமிழ்த்தேசிய மக்கள் சனநாயகக்குடியரசை, தொழிலாளி வர்க்க தலைமையில் உழவர்கள், குட்டி முதலாளிகள், தேசிய முதலாளிகள்,**

**பெண்கள், தலித்துக்கள், மீனவர்கள், மதசிறுபான்மையினர், பழங் குடிகளின் கூட்டு அரசியல் அதிகாரத்தின் கீழ் நிறுவப்பட வேண்டும்.** *இத்தகைய உழைக்கும் மக்களின் கூட்டு அரசியல் அதிகாரமே அனைத்து உழைக்கும் மக்களுக்கான சுரண்டலற்ற சனநாயக தமிழ்த்தேசத்தைக் கட்டியமைக்கும்.*

- *நமது தமிழக உழைக்கும் மக்கள் தற்போதுள்ள ஆட்சி மக்களாட்சி அல்ல என்பதை அடிப்படையில் உணர்ந்து, மக்கள் ஆட்சி என்ற மாயையை ஏற்படுத்தும் கட்சிகள் அனைத்தையும் தூக்கியெறிந்து மக்கள் ஆட்சி அமைய* **"கூட்டு அரசியல் அதிகாரத்தை"** *படைக்க வேண்டும்.*

## மூன்றாம் அம்சம்:-

## இந்திய அரசியல் சாசனம் நமது தமிழ்த்தேசத்திற்கானது அல்ல

*இந்திய பெருமுதலாளிகள் தங்களின் நலனை பாதுகாக்க கூடிய அரசியல் சாசனத்தை சனநாயகம் மற்ற வழியில் சர்வாதிகாரமாக உருவாக்கி இறுதி செய்து கொண்டனர். இதையே இந்திய ஒன்றிய அரசின், நமது தமிழ் தேசம் உட்பட அனைத்துத் தேச மக்களின் நலன் காக்கும் அரசியல் சாசனம் என்று நம் காதில் பூச்சுற்றுகின்றனர். இத்தகைய அரசியல் சாசனத்திற்கு உட்பட்டு நமது தமிழ்த்தேசமும், நம் தமிழ்த்தேச மக்களும் வாழ வேண்டும் என்று சர்வாதிகாரம் செய்கின்றனர்.*

**மாற்றாக.....**

- *1947 ஆகஸ்ட் 15-க்கு பிறகு "தமிழ்த்தேசியக் குடியரசு" அமைக்கப் பட்டிருக்க வேண்டும்.* **தமிழ்த்தேசிய குடியரசானது தனக்கான அரசியல் சாசனத்தின் வரைவை, தமிழ்த்தேச மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட அரசியல் சாசனசபை மூலம் உருவாக்கி, மக்களிடம் உறுதி செய்தல், இறுதி செய்தல் என்று இருமுறை வாக் கெடுப்புக்கு விடப்பட்டு சனநாயகப்பூர்வமாக இறுதி செய்திருக்க வேண்டும்.**

- **சுதந்திர தேசங்களின் கூட்டரசிற்கான அதிகார வரம்பு மற்றும் அரசியல் சாசனமானது, சுதந்திர தேசங்களின் கூட்டரசில் இணைந் திருக்கும் அனைத்து தேச மக்களிடமும் உறுதி செய்தல், இறுதி செய்தல் என்று இருமுறை பொதுவாக்கெடுப்புக்கு விடப்பட்டு சனநாயகப் பூர்வமாக இறுதி செய்திருக்க வேண்டும்.**

- *எனவே, நம் தமிழ்த்தேசத்திற்கும், தமிழக உழைக்கும் மக்களுக்கும் விரோதமான இந்திய அரசியல் சாசனத்தைப் புறக்கணித்து, தமிழ்த்தேசிய குடியரசுக்கான அரசியல் சாசனத்தை சனநாயகப் பூர்வமாக உருவாக்க வேண்டும்.*

**நான்காம் அம்சம்:**

## நாடாளுமன்ற சட்டமன்ற வடிவம் முதலாளித்துவ வடிவமே! தமிழ்த் தேசத்திற்கும், தமிழ்த்தேசிய உழைக்கும் மக்களுக்கு மானதல்ல!

• *அதிகாரங்கள் பரவலாக்கப்படாமல் முதலாளித்துவத்தின் அடிப்படை பண்பான அனைத்தையும் மையப்படுத்துதல் என்பதற்கேற்ப இந்திய ஒன்றிய அரசு அனைத்து அதிகாரத்தையும் மையப்படுத்தியுள்ளது.*

• *மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத கிராம நிர்வாக அலுவலர், வட்டாட்சியர், மாவட்ட ஆணையர், கவர்னர், ஜனாதிபதி, நீதிபதிகள், அதிகாரிகள்... என இவர்களின் கையில் வரிவசூல், மேம்பாட்டு திட்டங்கள், திட்டங்களைச் செயல்படுத்தும் உரிமை, சேவைத்துறை, காவல்துறை, நீதித்துறை, நாட்டின் பாதுகாப்பு என அனைத்து அதிகாரங்களையும் வழங்கி யுள்ள இந்திய பெருமுதலாளிகள் இவர்களை தங்களின் கைப்பாவைகளாக ஆக்கி வைத்துள்ளனர்.*

• *சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், பெருமுதலாளிகள் மற்றும் அவர்களின் பங்காளிகளான ஏகாதிபத்தியங்கள், மூலதன - சாதி-நிலக்கிழார்களின் நலன் சார்ந்துதான் செயல்படவேண்டும். அவ்வாறு செயல்படாமல் 90%மாக உள்ள மக்கள் நலனே தனது லட்சியம் என்று செயல்பட்டால் அவ்வாட்சி உடனடியாகக் கலைக்கப்பட்டு, மாநிலமாக இருந்தால் கவர்னர் ஆட்சி, மத்திய ஆட்சியாக இருந்தால் ஜனாதிபதி ஆட்சி நடைமுறைக்கு வரும். மக்களின் நலனில் மிக உறுதியாகவும், மிக பெரும்பான்மை பலத்துடனும் நாடாளுமன்றத்தில் ஆட்சி அமைந்தால் அந்த ஆட்சி கலைக்கப்பட்டு அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டு இராணுவ ஆட்சி நடைமுறைக்கு வரும். மக்கள் நலன் சார்ந்த பிரதமர் சுட்டு கொல்லப் படுவார் (சிலி நாட்டில் ஹலண்டேவை கொன்றது போல்) நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று சிறைக்கம்பியை எண்ணிக் கொண்டிருப்பார்கள் (அ) தூக்கு கயிற்றில் பிணமாகத் தொங்கிக் கொண்டிருப்பார்கள். இதுதான் இந்திய பெருமுதலாளிகளால் உருவாக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற சனநாயகத்தின் "மக்களாட்சி" லட்சணமாகும்.*

**மாற்றாக.....**

*1947 ஆகஸ்ட் 15-க்கு பிறகு "உண்மையான மக்களாட்சி" முறையை உருவாக்கியிருக்க வேண்டும். அதற்கு கீழ்கண்ட அடிப்படை உரிமைகள் வகுக்கப்பட்டிருக்க வேண்டும்.*

• மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கே முழு அதிகாரம், மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தவறு செய்தால் அவர்களை திருப்பி அழைக்கும் உரிமை இருக்க வேண்டும்.

• தொழிலாளர்கள், விவசாயிகள், குட்டி முதலாளிகள், தேசிய முதலாளிகள், பெண்கள், தலித்துகள், மீனவர்கள், மதசிறுபான்மையின மக்கள், பழங்குடிகள் என அனைத்து மக்களின் சதவீதத்திற்கு ஏற்ப அரசியல் அதிகாரத்தில் விகிதாச்சார பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும்.

• முதலாளித்துவத்தின் அதிகாரத்தை மையப்படுத்துதல் என்பதற்கு மாறாக அதிகாரங்களை பரவலாக்குவதை உறுதி செய்திருக்க வேண்டும். அதாவது ஒவ்வொரு குறிப்பிட்ட மக்கள் பகுதிக்கும் முழு அதிகாரம் படைத்த.... அதாவது தொழில்துறை, விவசாயத்துறை, பண்ணைத்துறை, சேவைத்துறை, வரிவசூல், மக்கள் மேம்பாட்டு திட்டங்கள், நலத் திட்டங்கள், நீதித்துறை, (மக்கள் நீதிமன்றம்) காவல்துறை என அனைத்தையும் தீர்மானிக்கவும், செயல்படுத்தவும், கட்டுப்படுத்தவும் அதிகாரம் படைத்த "மக்கள் ஆட்சி மன்றங்களை" கொண்டதாக இருக்க வேண்டும்.

இம்மன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள், மக்கள் நீதி மன்றத்திற்கான நீதிபதிகள் என அனைவரும் சனநாயகப்பூர்வமாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

• அதிகாரத்தில் உள்ளவர்களுக்கும், மக்களுக்கும் இடையிலான உறவு எளிமைப்படுத்தபட்டும், அதிகாரிகள் தவறு செய்தல், மக்கள் தட்டி கேட்கவும், போராடவும் உரிமை பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

"மக்கள் ஆட்சி மன்றங்களே" சுதந்திர தமிழ்த்தேசிய குடியரசின் முக்கிய அரசு வடிவமாகவும், அடிப்படை அலகாகவும் அமைய வேண்டும்.

• சோவியத் அரசின் வடிவத்தைக் கணக்கில் கொண்டு, அனைத்து தேசங்களுக்கும் சம அந்தஸ்து, சம உரிமை அளிக்ககூடிய சுதந்திர தேசங்களின் கூட்டரசைக் கொண்டதாக இருக்க வேண்டும்..

• இத்தகைய அரசமைப்பை படைக்க தமிழக உழைக்கும் மக்கள் **சட்டமன்ற, நாடாளுமன்ற மாயையிலிருந்து, விடுபட்டு, இந்திய பெரு முதலாளிகளின் சுரண்டல் நலனை பாதுகாக்ககூடிய இவ்வடிவங்களை புறக்கணித்து முழு அதிகாரம் படைத்த "மக்கள் ஆட்சி மன்றங்களை" அடிப்படை அலகுகளாகக் கொண்ட தமிழ்த் தேசிய மக்கள் சனநாய குடியரசை படைக்க வேண்டும்.**

# 2. தமிழ்த்தேசத்தின் பொருளியல் கொள்கை

• நேருவின் "கலப்பு பொருளாதார கொள்கை", இந்திரா காந்தியின் வங்கிகளை, எண்ணெய் நிறுவனங்களை மற்றும் நிலக்கரி சுரங்கங்களை தேசிய மயமாக்கல் மற்றும் பசுமைபுரட்சி ......", ராஜீவ் காந்தியின் "புதிய பொருளாதார கொள்கை" இதை அடிப்படையாகக் கொண்டு நரசிம்மராவ், வாஜ்பாய், மன்மோகன் சிங் வரை நடைமுறைப்படுத்தும் உலகமயம், தாராளமயம், தனியார் மய பொருளியில் கொள்கைகள் எல்லாம் இந்திய பிராந்திய பெருமுதலாளிகள் மற்றும் இவர்களின் கூட்டாளியான ஏகாதிபத்திய முதலாளிகளின் முன்னேற்றத்திற்கான பொருளியல் கொள்கைகளே ஆகும்.

• 90 % மக்களை ஓட்டாண்டிகளாக்கி, 10% சுரண்டல் கும்பலை மேலும், மேலும் கொழுக்க வைப்பதற்கான பொருளியல் கொள்கை களையே இதுவரை வகுத்து வந்துள்ளனர். இது உண்மை என்பதற்கு இந்திய துணை கண்டத்தின் தற்போதைய பொருளியல் புள்ளிவிவரங்களே அழிக்க முடியாத சாட்சியங்களாக உள்ளது.

• மக்களின் அடிப்படை வாழ்க்கையையே, இந்திய துணை கண்டத்தின் தலையெழுத்தையே தீர்மானிக்கக்கூடிய மேற்கூறிய அனைத்து பொருளியல் கொள்கைகளும், அனைத்து மக்களின் கருத்துக்களை கேட்டு தயாரிக்கப்படவில்லை சனநாயகப் பூர்வமாக மக்களின் பொதுவாக்கெடுப்பு மூலம் இறுதி செய்யவில்லை. முதலாளிகளின் நலன்காக்க, முதலாளிகளின் கருத்துக்களை மட்டும் கேட்டு, முதலாளிகளின் வளர்ச்சிக்காகச் சர்வாதிகாரமாக மக்கள் மீது திணிக்கப்பட்ட பொருளியல் கொள்கைகளே மேற்கூறிய அனைத்துமாகும்.

• நமது தமிழ்த்தேசத்தில் முதலாளித்துவ உற்பத்தி முறை, சாதி - அரை நிலவுடமை உற்பத்தி முறையே உள்ளது. தமிழ் நாட்டில் பழங்குடிகளின் எண்ணிக்கை மிக குறைவாக உள்ளதால் அரை தொல்குடி உற்பத்தி முறை தமிழகத்தை பொறுத்தவரை மிக முக்கிய உற்பத்தி முறையாக இல்லை.

• தமிழ் நாடானது இந்திய பிராந்திய பெருமுதலாளிகள், ஏகாதிபத்திய முதலாளிகளின், அதிகார வர்க்க முதலாளிகளின், மூலதன - சாதி - நிலக்கிழார்களின் சுரண்டல் காடாக உள்ளது. இச்சுரண்டல் ஒவ்வொரு துறையிலும் எப்படி உள்ளது என்பதை விரிவாகப் பார்ப்போம்.

## தொழில் துறை

• இன்றைய தொழில் துறையில் மூலதன குவிதலும், பெருவீத உற்பத்தியுமே முதன்மையாக உள்ளது.

• முதலாளித்துவத்தின் மூலதன குவிதலானது தவிர்க்க இயலாமல் பொருளாதார மையப்படுத்தலை இயல்பிலேயே கட்டி வளர்க்கின்றது. மூலதன மையப்படுத்தலை ஒட்டி அரசியல், நிர்வாகம் என அனைத்தும் மையப்படுத்தபடுகின்றது. தமிழ்த்தேசிய உற்பத்தி. தமிழ்த்தேசிய சந்தை, தமிழ்த்தேசிய வளர்ச்சி, தமிழ்த்தேசிய அரசியல் அதிகாரம் என்பதற்கு மாறாக இந்திய பிராந்திய சந்தையை, சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவ உற்பத்தியும், இம்முதலாளிய சுரண்டலை பாது காப்பதற்கான தேசங்களின் உரிமைகளை அடியோடு ஒழித்து மையப்படுத்தப் பட்ட இந்திய ஒன்றிய அரசின் அதிகார குவிதலுமே உள்ளது.

• உலகமயமாக்கலை ஒட்டி பெரும் பகாசுர கம்பெனிகள் ஆக்டோபஸ் போல் அனைத்தையும் ஆக்கிரமித்து வருகின்றது. நமது தமிழக உழவர்கள், மீனவர்கள், பழங்குடிகள், நகர்ப்புற ஏழைகள் என அனைவரையும் அவர்களின் வாழ்விடங்களிலிருந்து அப்புறப்படுத்தியும் விவசாய நிலங்களையும் கடலையும், வனத்தையும், நகர்புற பகுதியையும் ஆக்கிரமித்து வருகின்றன. இதனால் தமிழக உழவர்கள், மீனவர்கள், பழங் குடிகள், நகர்புற ஏழை மக்கள் தங்கள் சொந்த மண்ணிலேயே அகதி களாக்கப்படுகின்றனர்.

• நவீன இயந்திரங்களைப் பயன்படுத்துவது, உதிரி பாகங்களை உற்பத்தி செய்ய சிறு முதலீட்டாளர்களிடம் வெளியில் கொடுப்பது (Out Sourcing) ஆகிய காரணங்களால் தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்துள்ளது. அனைத்து தொழிற்சாலைகளிலும் நிரந்தர தொழிலாளர்களை குறைத்து, ஒப்பந்த மற்றம் பயிற்சி தொழிலாளர்களை அதிகப்படுத்துகின்றனர். இதனால் தொழி லாளர் ஊதியம் மிக, மிக குறைக்கப்பட்டுள்ளது. நிரந்தர வேலையின்மை யால் தொழிலாளர் வாழ்க்கை கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது.

• அனைத்தும் இயந்திரமயமாக்கப்பட்டு வருவதால் வேலையில்லா தோர் எண்ணிக்கை அதிகரித்து கொண்டே வருகிறது. தொழிற்சங்க உரிமை, நிரந்தர வேலை, 8 மணி நேர வேலை, குறைந்த பட்ச கூலி நிர்ணயம், போராடும் உரிமை..... உள்ளிட்ட அனைத்து உரிமைகளும் பறிக்கப்பட்டு தொழிலாளர்கள் முதலாளிகளின் கொத்தடிமைகளாக ஆக்கப்பட்டுள்ளனர். பெண்களின் மீதான உழைப்பு சுரண்டல் அதிகரித்து கொண்டேயிருக்கிறது

சுமங்கலி திட்டம் என்ற பெயரில் இளம் பெண்களின் உழைப்பு கொடூர சுரண்டலுக்கு உள்ளாக்கப்படுகிறது. கொத்தடிமைகளாக ஆலைகளில் அடைப்பட்டு கிடக்கின்றனர். வரும் ஆண்டுகளில் நிரந்தர தொழிலாளர்கள் முற்றிலும் காணாமல் போய்விடுவர். ஒப்பந்த மற்றும் பயிற்சி தொழிலாளர்களே இருப்பர். பெண்களின் மீதான உழைப்பு சுரண்டல் அதிகரிக்கும். படிப்படியாகப் பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து கொண்டே போகும்.

• தொழிற்சங்கங்கள் அனைத்தும் தொழிலாளர்களை சீர்த்திருத்தவாத, பொருளாதாரவாத, தொழிற்சங்கவாத, சட்டவாத புதைகுழியில் தள்ளியுள்ளனர். தொடர்ந்து வரும் காலங்களில் முதலாளிகளுக்கு ஒத்துழைக்கும் தொழிற்சங்கங்கள் மட்டுமே அனுமதிக்கப்படும், அத் தொழிற்சங்கங்கள் தொழிலாளி வர்க்கத்தை முதலாளிகளிடமும், அரசிடமும், நீதிமன்றத்திடமும் கையேந்தும் முதுகெலும்பற்றவர்களாக மாற்றியமைக்கும்.

• மக்களின் தேவை குறித்தும், மக்களின் நுகர்வு சக்தி குறித்தும், சுற்று சூழல் குறித்தும் கவலைப்படாது முதலாளித்துவமானது லாபம் ஒன்றையே குறியாக வைத்து அராஜக உற்பத்தியை செய்துவருவதால் தொடர்ந்து வரும் காலங்களில் இயற்கை வளங்கள் அழிக்கப்படுவதோடு சுற்றுச்சூழல் பெரும் பாதிப்புக்குள்ளாகும். மக்களின் வாங்கும் சக்தியும் மிகவும் குறைவதோடு, உணவு உற்பத்தி புறக்கணிக்கப்படுவதால் பெரும் பஞ்சங்கள் ஏற்படும்.

## விவசாயத்துறை:

• நமது தமிழகத்தில் 91 % விவசாய நிலங்கள் சிறு, குறு நடுத்தர உழவர்களிடம் துண்டு, துண்டாக உள்ளது. மற்ற 10 % க்கும் குறைவான விவசாய நிலங்கள் மூலதன - சாதி - நிலக்கிழாரிடமும், இந்திய பெரு முதலாளிகளிடமும், ஏகாதிபத்திய முதலாளிகளிடமும், கோயில் மற்றும் மடத்திற்கு சொந்தமாகவும், அரசுடமையாகவும், பணக்கார விவசாயிகளிடமும் உள்ளன.

• உலக மயமாக்கல் சூழலில் கனிம வளங்களை சுரண்டுவதற்கும், தொழிற்சாலைகளை கட்டுவதற்கும், ரியல் எஸ்டேட் கொள்ளையர்கள் வீடுகட்டுவதற்கும் என விவசாய நிலங்களை அபகரித்து வருவதால், வருங்காலங்களில் விவசாய உற்பத்தி வீழ்ச்சியடைந்து பெரும் உணவு பஞ்சம் ஏற்படும்.

தொடர்ந்து வரும் காலங்களில் சிறு, குறு, நடுத்தர உழவர்களின், குறிப்பிட்டளவு பணக்கார விவசாயிகளின் நிலங்கள், மடம் மற்றும் கோயில்

அரசு நிலங்கள் ஆகியவை இந்திய பெருமுதலாளிகள், அன்னிய கார்ப்ரேட் முதலாளிகள், ரிலையன்ஸ், வால்மார்ட் போன்ற வணிக நிறுவனங்களால் படிப்படியாகப் பிடுங்கப்பட்டு "முதலாளித்துவ பண்ணைகளாக" மாற்றப்படும். மூலதன சாதி - நிலக்கிழார்களும், தங்களின் நிலங்களை "முதலாளித்துவ பண்ணைகளாக" மாற்றி கொள்வார்கள். இதனால் நிலமிழந்த சிறு, குறு, நடுத்தர விவசாயிகள் வீதியில் தூக்கியெறியப்பட்டு ஏற்கெனவே உள்ள வேலையில்லாதோர் கூட்டத்தோடு சேர்க்கப்படுவர். மேலும் கந்துவட்டி சுரண்டலும் எண்ணற்ற விவசாயிகள் தற்கொலை செய்துகொள்ளும் நிலை ஏற்படும்.

• இன்றைய தமிழகத்தில் விவசாய உற்பத்தியானது நிலம் துண்டு, துண்டாக கிடப்பதாலும் நவீன அறிவியலை முழுமையாக உள்வாங்காத தாலும் பின்தங்கிய உற்பத்தியாகவே உள்ளது. சாதிய சுரண்டல், ஒப்பந்த அடிமை, நவீன கொத்தடிமை போன்ற கொடுமையான உழைப்பு சுரண்டலும் நிலவி வருகின்றது.

• இயற்கை வேளாண்மை லாபகரமான தொழிலாக்கப்பட்டு இயற்கை வேளாண் பொருட்கள் பெரும் பணக்காரர்கள் மட்டுமே வாங்கி சாப்பிடக் கூடிய ஒன்றாக மாற்றப்பட்டு வருகின்றது.

• மழைநீர் சேகரிக்கப்படாமல் வீணடிக்கப்படுகிறது. நிலத்தடி நீரை ஆழ்துளை போட்டு உறிஞ்சி எடுக்கின்றனர். ஆறுகள், பெரும் ஏரிகள், கம்மாய்கள், அழிக்கப்பட்டு வருகிறது. கிணற்று நீர், ஆழ்துளை நீர் எடுத்தல் மூலமாகவே நீர் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது. நமது தமிழகத்திற்கு நியாயமாக கிடைக்கவேண்டிய காவிரி (கர்நாடகா), பாலாறு (ஆந்திரா), முல்லை பெரியாறு (கேரளா) தண்ணீரை கொடுக்க மறுத்து வருகின்றனர். இதனால் விவசாய உற்பத்தியானது பெரும்பாதிப்புக்குள்ளாகி உள்ளது. இந்திய துணை கண்டம் முழுவதும் இவ்வாறு ஒரு தேசத்திற்கும் மற்றொரு தேசத்திற்கும் இடையிலான நதிநீர் சிக்கல் தீர்க்கப்படாமலேயே உள்ளது. இச்சிக்கலை இரு தேசத்திற்கும் இடையிலான முரண்பாட்டை வளர்ப்பதற்கு ஆளும் வர்க்கங்கள் பயன்படுத்தி கொள்கின்றன. காடுகளும் மலைகளும் தொடர்ந்து அழிக்கப்பட்டு வருவதாலும் முதலாளித்துவத்தால் பூமி வெப்பம் அடைந்து வருவதாலும் மழை வளமும் குறைந்து கொண்டே வருகிறது.

**பண்ணைத்துறை:**

• நமது தமிழகத்தில் ஆடு, மாடு மற்றும் கோழி, மீன், பண்ணைகள் இந்திய பெருமுதலாளிகளின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளது. பெரும்பாலும்

மூலதன - சாதி - நிலக்கிழார்களுக்கும், பணக்கார விவசாயிகளுக்கும் உரிமையாக உள்ளது.

• சுகுணா, அட்சன் போன்ற பெரு வணிக நிறுவனங்கள் ஒப்பந்த அடிப்படையில் பண்ணைகள் வைத்துள்ள சிறு முதலீட்டாளர்களை சுரண்டி வருகின்றன.

• சிறு குறு, நடுத்தர உழவர்களில் சிலர் சிறு அளவிலான ஆட்டு பண்ணைகளை வைத்துள்ளனர். கூலி, ஏழை விவசாயிகள் சிறு அளவில் ஆடு, மாடு, கோழிகளை வளர்த்து வருகின்றனர்.

• லாப நோக்குடனான முதலாளித்துவ அணுகுமுறையால் ஆடு, மாடு, கோழி மற்றும் மீன்களை இயற்கையான முறையில் வளர்ப்பதற்கு மாறாக வேகமாகவும், பெரிதாகவும் வளர்ப்பதற்காகச் செயற்கை தீவனம் மற்றும் இரசாயன மருந்துகளை பயன்படுத்துகின்றனர். இதனால் இறைச்சி, மீன், பாலை உட்கொள்ளும் மக்களுக்கு பல்வேறு பக்க விளைவுகள் ஏற்படுகின்றது.

• காடுகள், தோட்டங்கள், மேய்ச்சல் பகுதிகள், வயல் வெளிகள் அழிந்து வருவதாலும் கோமாரி போன்று தொடர்ந்து தாக்கும் நோய்களைக் கூட அரசு கட்டுப்படுத்த அக்கறை காட்டாததாலும் ஆடு, மாடுகளின் வளர்ப்பு குறைந்து வருகிறது.

• படிப்படியாக ஆடு, மாடு மற்றும் கோழி, மீன் பண்ணைகள் அனைத்தும் பெருமுதலாளிகள் கட்டுபாட்டிற்குள் வரும். சிறு அளவிலான பண்ணைகள் அனைத்தையும் பெரு முதலாளிகள் தங்கள் வசம் ஆக்கி கொள்வார்கள். சுகுணா, அட்சன் போன்ற பெரு முதலாளிகள் படிப்படியாக கோழி, மாட்டு பண்ணைகளை தங்கள் வசம் ஆக்கி கொள்வார்கள். இதனால் ஏற்கெனவே பண்ணைகள் வைத்துள்ள சிறு முதலீட்டாளர்கள் வீதிக்கு வருவார்கள். நவீன முறைகளை அதிகம் பயன்படுத்துவதால் பண்ணை தொழிலாளர்களும் வேலையிழப்பர்.

• இறைச்சி, மீன், பாலின் சந்தை விலையை பெருமுதலாளிகள் லாப வெறியுடன் அவ்வப்பொழுது ஏற்றுவதன் மூலமும், பெரும் கார்ப்பேரட் வணிக நிறுவனங்களின் லாப வெறியாலும் உழைக்கும் மக்களால் இத்தகைய உணவுகளைப் பயன்படுத்துவது என்பது இயலாத ஒன்றாகும்.

## வணிகம்

தமிழகத்தில் லட்சக்கணக்கான சிறு வணிகர்கள் தங்கள் வாழ் வாதாரத்திற்காக வணிகத்தையே சார்ந்துள்ளனர்.

சூப்பர் மார்க்கெட்டுகள், மால்கள் போன்ற பெரும் வணிக வளாகங்கள் மாநகராட்சியிலிருந்து சிறு நகர்ப்புற பகுதி வரை பரவி வருகிறது. மேலும் படிப்படியாக வணிகமானது ரிலையன்ஸ், கோயங்கோ, பிர்லா, நீல்கிரிஸ்.... போன்ற பெருமுதலாளிகளின் கட்டுபாட்டிற்குள் வருவதாலும் சிறு வணிகர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து வீதிக்கு வருகின்றனர்.

• பெருமுதலாளிகள் வணிகத்திற்கு தேவையான விளைபொருட்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளிடம் ஒப்பந்த விவசாயம் (Contract farming) அடிப்படையில் முன்பணம் கொடுத்தும் (அ) கடன் வழங்கியும் ஒப்பந்தங்கள் போட்டும் விளைபொருட்களை மிக குறைந்த விலைக்கு வாங்கியும், விவசாய நிலங்களைப் பெருமளவில் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து, தங்கள் வணிகத்திற்கு தேவையான விளை பொருட்களை உற்பத்தி செய்வதன் மூலம், உழவர்களின் உழைப்பை உறிஞ்சுகின்றனர்.

பெரும்பாலான சிறு, குறு, நடுத்தர உழவர்களின் நிலத்தை அரசு அதிகாரத்தை பயன்படுத்தி வஞ்சகமாக அபகரித்து தாங்கள் போட்ட "ஒப்பந்தங்களின்" அடிப்படையில் நிலத்தை பறிமுதல் செய்து உழவர்களை நிலமற்ற கூலிகளாக்குவர்.

• உழவர்களின் விளைபொருட்களைப் பாதுகாத்து விற்பதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யாததால் உழவர்கள் பெரும் துன்பத்திற்கு உள்ளாகியுள்ளனர். உழவர்களுக்கும், நுகர்வோருக்கும் இடையே உள்ள இடைத்தரகர்கள், வணிகர்களால் உழவர்களின் உழைப்பு சுரண்டப் படுகிறது. நுகர்வோரும் விலைவாசி உயர்வால் பெரும் அவதிக்குள்ளா கின்றனர்.

• பொருட்களின் தரம் மக்களின் வாங்கும் சக்தியை பற்றி கொஞ்சமும் கவலைப்படாத பெரும் வணிக நிறுவனங்கள் லாபத்தை குறிக்கோளாகக் கொண்டு வணிகம் செய்வதாலும், இடைதரகர்களாலும் விலைவாசியானது உழைக்கும் மக்களால் பொருட்களை வாங்க முடியாத அளவிற்கு உயர்கிறது.

• செயற்கையான தேவையை (அ) பற்றாக்குறையை ஏற்படுத்தி மக்களிடம் கொள்ளை லாபம் அடிக்கின்றனர். தரமற்ற பொருட்களை தங்களின் தொழில் நுட்பத்தால் கவர்ச்சியாக்கியும், பெரும் விளம்பரங்கள் மூலம் மக்கள் தலையில் கட்டுகின்றனர்.

• அரசானது நிதி ஆதாரமில்லை என்று கைவிரித்து வணிகத்தை பெரும் வணிக நிறுவனங்களின் பிடிக்கு மாற்ற துடிக்கின்றது.

## கல்வி, மருத்துவம்

• கல்வி, மருத்துவம் இரண்டையும் படிப்படியாக அரசாங்கம் கைவிட தனியார் துறையானது இவ்விரண்டையும் ஆக்கிரமித்து வருகிறது. தனியார் கல்வி நிறுவனங்களும், மருத்துவமனைகளும், நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகிறது. அரசானது கல்வி நிறுவனங்களையும், மருத்துவ மனைகளையும் ஒழுங்கான முறையில் நிர்வகிக்காமல் திட்டமிட்டே தரத்தை குறைத்து வருவதோடு மூடியும் வருகிறது.

• மக்கள் மனதில் இயல்பாகவே அரசு நடத்தும் கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள் தரமற்றது, தனியார் நிறுவனங்களே தரமானது என்ற உளவியலை கட்டியமைப்பதன் மூலம் தனியார் மயமாக்கலை மக்கள் மத்தியில் நியாயப்படுத்தி தனியார் நிறுவனங்களை அரசானது ஊட்டி வளர்க்கிறது.

• உலகமயமாக்கல், தனியார்மயமாக்கல், தாராளமயமாக்கலுக்கு பிறகு கல்வி, மருத்துவம் வேக, வேகமாகத் தனியார் மயமாகி வருகிறது. கல்வியும் மருத்துவமும் லாபம் கொழிக்கும் துறையாக முதலாளிகளால் மாற்றப்படுகிறது. பெரிய கார்ப்ரேட் முதலாளிகள் அதிகார வர்க்க முதலாளிகள், மூலதன - சாதி- நிலக்கிழார்களிடமும் கல்வியும், மருத்துவமும் முழுக்கட்டுப்பாட்டில் கொண்டுவரப்படுகிறது. இதனால் இவை ஏழைகளுக்கு எட்டா கனியாகிவருகிறது. சிறந்த கல்வி, சிறந்த மருத்துவத்தை பணக்காரர்கள் மட்டுமே அடைய முடியும் என்ற நிலை உருவாகி வருகிறது.

• தாய்மொழி கல்வி, அறிவியல் பூர்வமான கல்வி, சனநாயகக் கல்வி என்பதற்கு மாறாக கற்பித்தலில் எத்தகைய சனநாயகமுமற்ற, அறிவியல் தன்மையும் இல்லாமல் கல்வி நிறுவனங்கள் சிறைக் கூடமாகவும், ஆசிரியர்கள், அதிகாரிகள் போலவும், தொழிற்சாலைகளில் வேலை செய்வதற்கான தொழிலாளர்களை, தொழில்நுட்ப வல்லுநர்களை உற்பத்தி செய்யும் இடமாகவும் ஆங்கில வழி கல்வியுமே உள்ளது.

## சேவைத்துறை

• மூலதனமானது உற்பத்தி துறையை விட சேவைத்துறையில் அதிகமாக முதலீடு செய்யப்படுகிறது.

• வங்கிகள், போக்குவரத்து, மின்சாரம், தகவல் தொடர்பு மற்றும் நிதி நிறுவனம் போன்ற சேவைத்துறைகள் அனைத்தும் தனியாருக்கு தாரைவார்க்கப்படுகிறது.

• *முதலாளித்துவமானது உற்பத்தியில் முதலீடு செய்வதற்கு பதிலாக ஊக வாணிபத்தில் அதிகபட்ச முதலீடுகளை செய்து வருகிறது. பங்கு குறியீடுகளே நாட்டின் வளர்ச்சிக்கு அடையாளமாக்கப்படுகிறது. ஊதி பெருத்த பலூனை போல் இருக்கும் இப்பங்கு மார்க்கெட்டுகள் திடீரென சரிந்து காற்று போன பலூனாக மாறிவிடுகிறது.*

• *வங்கிகள், போக்குவரத்து, தகவல் தொடர்பு... போன்ற சேவைத் துறை அனைத்தும் கார்ப்ரேட் கம்பெனிகள் கட்டுபாட்டில் வருவதால், கார்ப்ரேட் முதலாளிகள் லாப வெறியுடன் சேவைக் கட்டணத்தை உயர்த்தி கொண்டேயிருக்கின்றனர். இதனால் உழைக்கும் மக்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகின்றனர். அரசு துறையும் மக்கள் சேவை என்பதிலிருந்து விலகி லாப நோக்குடன் செயல்பட்டு அனைத்து சுமைகளையும் மக்கள் தலையில் சுமத்துகிறது.*

**மாற்றாக**

• *இந்திய துணைகண்டம் ஏற்ற தாழ்வான வளர்ச்சி மற்றும் பல்வேறு சமூக, பொருளியியல் தன்மைகளை கொண்ட மொழி வழி தேசங்களை, பழங்குடி தேசங்களை, கொண்டுள்ளதால்* ***பொருளாதார கொள்கை யானது மக்கள் நலன் மற்றும் ஒவ்வொரு தேசத்தின் வளர்ச்சியை கொண்டுள்ளதாக அமைய வேண்டுமென்றால் வறட்டுத்தனமாக இந்திய துணைகண்டம் முழுமைக்குமான பொருளியல் கொள்கையை முன்வைக்காமல் நம் தமிழ் தேசம் உட்பட ஒவ்வொரு தேசத்திற்கும் தனித்தனியாக பொருளியல் கொள்கையை முன்வைத்திருக்க வேண்டும்.***

***• அனைத்து தேசங்களும் இணைந்து செயல்பட வேண்டியுள்ள பொருளாதார திட்டங்களை மட்டும், சுதந்திர தேசங்களின் கூட்டரசு முன்வைத்து அனைத்து தேச மக்களின் வாக்கெடுப்பு மூலம் இறுதி செய்திருக்க வேண்டும்.***

• *1947 - க்கு பிறகு நமது தமிழகத்தில் இந்திய பெருமுதலாளிகள், ஏகாதிபத்திய முதலாளிகள், மூலதன - சாதி- நிலவுடமையர்களின் நலன் காக்கும் பொருளியியல் கொள்கைக்கு மாற்றாக உழவர்கள், தொழி லாளர்கள், மீனவர்கள், பெண்கள், பழங்குடிகள், தலித்துகள், மதச்சிறு பான்மையினர் என அனைவரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் விதமாக, பொருளாதார ஏற்ற தாழ்வுகளை ஒழிக்கும் விதமாக, நமது தமிழ்த்தேசத்தை பொருளாதார வளம்மிக்க தேசமாக உயர்த்தும் விதமாக சுதந்திர தமிழ்த்தேசிய குடியரசுக்காக பொருளியல் கொள்கைகளை வகுத்திருக்க வேண்டும்.*

• *மக்களின் கருத்துகளை கேட்டு பொருளியல் கொள்கைக்கான வரைவு திட்டத்தை முன்வைத்து மக்களின் வாக்கெடுப்பு மூலம் சனநாயக பூர்வமாக பொருளியல் கொள்கை இறுதி செய்யப்பட்டு நடைமுறை படுத்தியிருக்க வேண்டும்.*

## 3. தமிழ்த்தேசியத்தின் பண்பாட்டு நிலை

• *நமது தமிழ்த்தேசத்தில் ஆளும் வர்க்கத்தால் கட்டியமைக்கப்பட்ட பண்பாடாக இரண்டு அடிப்படை கூறுகள் பண்பாட்டு தளத்தில் ஆதிக்கம் செலுத்துகிறது. அவை 1. நவீன பிராமணியம் 2., நவீன வெள்ளாளியம்.*

### நவீன பிராமணியம்

*சாதி - நிலவுடமை கருத்தியலான "இந்துத்துவாவை" நிலை நிறுத்தவும், போலியாகக் கட்டியமைக்கப்பட்ட "இந்திய தேசியத்தை" நிலைநிறுத்தவும், இந்திய தேசியத்தின் மொழியாக "இந்தி மொழியை" உருவாக்கவும், கட்டியமைக்கப்பட்டுள்ள கருத்தியல்தான் நவீன பிராமணியமாகும். இதன் அடிப்படை கூறுகளாக "இந்து - இந்தியா - இந்தி" உள்ளது.*

### நவீன பிராமணியத்தின் "இந்து" என்ற கூறானது

*நாற்றமெடுத்த வர்ணாசிரம, சாதிய சமூக கட்டமைப்பை காப் பதற்கான கருத்தியலை, மூத்தோன் வழி ஆணாதிக்கத்தை நிலைநிறுத்து வதற்கான கருத்தியலை, பகுத்தறிவற்ற மூடநம்பிக்கையை அடிப்படையாக கொண்ட சிந்தனா முறையை, இந்து மதவெறி பாசிசத்தை கட்டியமைப் பதற்கான கருத்தியலை கட்டிக்காக்கின்றது; வளர்க்கின்றது.*

*தமிழ்த்தேசியத்தில் உள்ள ஒவ்வொருவரும் பிறக்கையில் தமிழர் களாய் பிறக்காமல், சாதி அடையாளத்துடன் தான் பிறக்கின்றனர். தமிழர்களாய் தமிழ் மக்கள் ஒன்றிணைய சாதிய கட்டமைப்பு தடையாக உள்ளது. சாதியம் ஒழித்து தமிழர்களாய் ஒன்றிணைவது என்பது தமிழ்த் தேசிய விடுதலை போராட்டத்தின் முதன்மை கடமையாக உள்ளது. மேலும் ஆண் - பெண் சமத்துவம் படைக்கவும், பகுத்தறிவு சிந்தனா முறையை வளர்க்கவும், இந்து மதவெறி பாசிசத்தை முறியடிக்கவும் நாம் வீழ்த்த வேண்டிய கருத்தியலாக "இந்து" என்ற கருத்தியல் உள்ளது.*

## நவீன பிராமணியத்தின் "இந்தியா" என்ற கூறானது

*இந்திய பெருமுதலாளிகள், ஏகாதிபத்திய முதலாளிகள் இந்திய பிராந்திய அளவிலான சந்தை மற்றும் சுரண்டலுக்காக மொழிவழி தேசிய இனங்களையும், பழங்குடி தேசங்களையும், இந்திய சிறையில் அடிமைப்படுத்தி சர்வாதிகாரமாக போலியாக உருவாக்கப்பட்டுள்ள "இந்திய தேசத்தை" கட்டமைப்பதற்கான, பாதுகாப்பதற்கான கருத்தியலை கட்டிக் காக்கின்றது, வளர்க்கின்றது. "இந்திய இறையாண்மை" என்ற கருத்தியலும் பாசிச தன்மையில் நிலைநிறுத்தப்படுகிறது.*

*தமிழ்த்தேசிய உணர்வுக்கும், தமிழர்களாய் தமிழ்த்தேசிய விடுதலைக்கு அணிதிரள்வதற்கும் "இந்திய தேசியம்" என்ற கருத்தியலானது பெரும் தடையாக உள்ளது. இந்திய தேசியம் என்ற மாயையிலிருந்து தமிழக மக்களை கருத்தியல் ரீதியாக வெளிக்கொணர்வதும் மிக அவசிய கடமையாக உள்ளது. தமிழ்த்தேசிய விடுதலையை முன்வைத்தாலே "இந்திய இறையாண்மைக்கு எதிரானது" என்று பாசிசத் தன்மையில் நம்மீது அடக்குமுறை ஏவப்படுகின்றது. எனவே நாம் "இந்திய இறையாண்மை" என்ற கருத்தியலையும் பண்பாட்டு தளத்தில் உடைத்தெறிய வேண்டியுள்ளது.*

## நவீன பிராமணியத்தின் "இந்தி" என்ற கூறானது

*பீகார் போன்ற இந்தி பேசாத மாநிலங்களையும், இந்தி பேசும் மாநிலம் என்ற பொய்யை கோயபல்ஸ் பிரச்சாரம் மூலம் நிறுவி, பெரும்பான்மை இந்தி பேசும் மாநிலம் உள்ளதால், இந்தியாவின் ஆட்சி மொழி "இந்தி" என்று நம் தமிழகத்தின் மீது இந்தி மொழியை தொடர்ந்து திணித்து வருகின்றனர்.*

*இந்திய துணைகண்டத்தில் உள்ள பல்வேறு மொழி வழி தேசிய இனங்கள், பழங்குடி தேசங்களின் மொழியை படிப்படியாக ஒழித்து, "இந்தி மொழியை" இந்திய தேசத்தின் மொழியாகச் சர்வாதிகாரமாகக் கட்டியமைப்பதற்கான கருத்தியலை கட்டியமைக்கின்றது.*

*நம் தாய் மொழியாம் தமிழ்மொழியை காக்கவும் - சிறுபான்மை மொழியின் உரிமையை காக்கவும் "இந்தி தேசிய மொழி" என்ற கருத்தியலைத் தகர்த்தெறிய வேண்டியுள்ளது.*

## நவீன வெள்ளாளியம்

*தமிழகத்தில் அன்று ஆளும் வர்க்கமாக இருந்த வெள்ளாளர்கள், இந்திய துணை கண்டத்தின் வடக்கில் சாதி நிலவுடமை சமூகத்தைக்*

கட்டியமைத்த கருத்தியலான பிராமணியத்தை முன்வைத்த பிராமணர்களுடன் சேர்ந்து தமிழகத்தில் சாதி - நிலவுடமை சமூகத்தை கட்டியமைத்தனர், பிராமணியமும் - வெள்ளாளியமும் சாதி - நிலவுடமை சமூகத்தின் கருத்தியலை முன்னிறுத்தும் ரெட்டைத்தலை நாகமாகும். தமிழகத்தில் சாதி சமூகத்தை கட்டியமைத்து நிலை நிறுத்தியுள்ள கருத்தியலே வெள்ளாளியமாகும்.

நவீன வெள்ளாளியமானது சாதி - நிலவுடமை கருத்தியலான சாதியத்தை, மூத்தோன்வழி ஆணாதிக்கத்தை, மூடநம்பிக்கையை, மற்றும் பிராமணர் எதிர்ப்பு (பகுதி அளவில் முழுமையாக அல்ல) ஆதிக்க சாதி நலனை பாதுகாக்கும் தமிழ்த்தேசியம் ஆகிய கூறுகளைக் கொண்டுள்ளது.

## மற்ற பண்பாட்டுக் கூறுகள்

“இந்து மத வெறி” பாசிசத்திற்கான கருத்தியல் அடித்தளத்தைக் கட்டியமைக்கிறது. “இந்திய இறையாண்மை” என்ற கருத்தியலானது மொழிவழி தேசிய இனங்கள், பழங்குடி தேசங்களின் உரிமையை, விடுதலையை சர்வாதிகாரமாகப் பாசிசத்துடன் ஒடுக்குவதற்கு கட்டியமைக்கப்படுகிறது. தொழிலாளிவர்க்கம், விவசாயிகளின், ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்கள் இந்திய இறையாண்மைக்கு எதிரானது என்ற கருத்தியலை முன்வைத்து கொடூரமாக ஒடுக்கப்படுகிறது. “இந்திய இறையாண்மைக்கான நேரடி பொருளாக இந்திய பெருமுதலாளிகளின் சுரண்டல் நலனே! என்ற கருத்தாக்கம் வெற்றி பெற்று வருகிறது.

• மக்கள் தங்கள் சக்தியின் மீது நம்பிக்கை வைப்பதற்கு பதில் தங்கள் வாழ்வை இரட்சிக்க ஒரு இரட்சகன் வருவான் என்றும் மன்னர் கடவுளுக்கு நிகரானவர் அவரால்தான் நாட்டை நிர்வகிக்க (ஆள) முடியும் என்றும் சாதி - நிலவுடமை சமூகத்தில் மக்களிடம் உருவாக்கப்பட்ட கருத்தியிலானது இன்றும் ஆதிக்கம் செலுத்திவருகிறது. இன்றைய அனைத்து கட்சி தலைவர்களும் தங்களை விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவர்களாக தனிநபர் பிம்பத்தை, தனிநபர் வழிபாட்டை, வளர்க்கக் கூடியவர்களாக உள்ளனர். கட்சி உறுப்பினர்களும் தலைவர்களை நிலவுடமை மன்னர்களாகவும், தலைவர்களின் வாரிசுகளை இளவரசர்களாகவும் போற்றி வழிபடும் நிலையிலேயே உள்ளனர். முதலாளித்துவமும் சூப்பர் மேன்களால்தான் மக்களை காப்பாற்ற முடியும் என்ற பிம்பத்தை, உருவாக்குகின்றனர். தலைவர் முதல் நிர்வாகிகளில் பெரும்பாலானவர்கள் அரசியல் கட்சிகளை பிழைப்பு வாதத்திற்கான ஒன்றாகக் கருதுகின்றனர்.

• *முதலாளித்துவ சீரழிவு பண்பாடுகளான நுகர்வு பண்பாடு, பெண்களை விளம்பர பொருளாக - பாலியல் தேவையை பூர்த்தி செய்யும் பொருளாக மாற்றுவது மனிதர்களை அவர்களின் உறவுகளிலிருந்து பிரித்து உழைப்பை விற்கும் பண்டமாக மாற்றுவது மற்றும் தனிநபர் சிந்தனை, தனிநபர் செயல்பாடு, தனிநபர் சர்வாதிகாரம் போன்ற முதலாளித்துவ கருத்தியலும் நமது தமிழகத்தின் பண்பாட்டுத் தளத்தில் ஆதிக்கம் செலுத்துகிறது.*

• *வலுவான ஊடகங்களாக உள்ள சினிமா, சின்னத்திரையிலும் மற்றும் தினசரி, வார பத்திரிகைகளிலும் சாதி - நிலவுடமை பண்பாடே ஆதிக்கம் செலுத்தி வருகிறது. பெரும்பான்மையான ஊடகங்களில் ஏகாதிபத்திய சீரழிவு பண்பாடும் ஊட்டி வளர்க்கப்படுகிறது.*

• *இந்திய பெருமுதலாளிகள், அதிகார வர்க்க முதலாளிகளின் கட்டுப் பாட்டில் பெரும்பாலான ஊடகங்கள் உள்ளதால் ஊடகங்கள் அனைத்தும் ஆளும் வர்க்க நலனை பிரதிபலிப்பதாகவே உள்ளது.*

• *உலகமயமாக்கல் சூழலில் கணிசமாக நடுத்தர வர்க்கம் வளர்ச்சி பெற்றுள்ளது. இவ்வர்க்கத்தின் முன்னோடி அரசியல் சக்திகளிடையே பிற்போக்கு தன்மையே ஆதிக்கம் செலுத்துகிறது. சாதிய இனக்குழு வாதம், பாளையக்காரத்தனம், தனிநபரை முதன்மை படுத்துதல் போன்ற போக்குகளே ஆதிக்கம் செலுத்துகிறது.*

• *மொத்தத்தில் நமது தமிழகத்தின் கருத்தியல் தளத்தில் மார்க்சிய விரோத, மக்கள் விரோத, பின் நவீனத்துவ, சாதிய, இந்துத்துவா, இனவாத, மதவாத, ஆணாதிக்க, தனிநபர்வாத, பிழைப்பு வாத, சந்தர்ப்பவாத, தலைமை வழிபாடு, ஆபாச, மூடநம்பிக்கை போன்ற ஆளும் வர்க்க நலன் சார்ந்த கருத்தியல்களே ஆதிக்கம் செலுத்தி வருகிறது.*

# தமிழகத்தில் நிலவும் முரண்பாடுகள்

## அடிப்படை முரண்பாடுகள்

*மேற்கண்ட நிலையில் தமிழகத்தில் கீழ்கண்ட ஒன்றுக்கும் மேற்பட்ட அடிப்படை முரண்பாடுகள் நிலவுகின்றன.*

*1. வளரும் இந்திய ஏகாதிபத்திய மூலதனம் x தமிழக பரந்துபட்ட மக்கள்*

*2. ஏகாதிபத்திய மூலதனம் x தமிழக பரந்துபட்ட மக்கள்*

*3. அதிகார வர்க்க மூலதனம் x தமிழக பரந்துபட்ட மக்கள்*

*4. சாதி - நிலக்கிழாரிய மூலதனம்* X *தமிழக பரந்துபட்ட மக்கள்*

*5. சாதி - அரை நிலவுடமை* X *தமிழக பரந்துபட்ட மக்கள்*

*6. இந்திய ஒன்றிய அரசமைப்பு* X *தமிழ்த்தேசியம்*

*7. அனைத்து முதலாளித்துவ மூலதனங்கள்* X *இயற்கை*

## முதன்மை முரண்பாடு

*மேற்கண்ட அடிப்படை முரண்பாடுகள்தான் இன்று தமிழகத்தை "அடிப்படையில்" இயக்கி கொண்டிருக்கின்றன. ஒன்றுக்கும் மேற்பட்ட அடிப்படை முரண்பாடுகள் தமிழ்த்தேசியத்தில் நிலவுவதால் இம் முரண்பாடுகளை ஆதிக்கம் செய்யும் முதன்மை முரண்பாட்டை மாறுகின்ற அரசியல் பொருளாதார சூழலுக்கேற்ப அடையாளங்கண்டு "உடனடி செயல் திட்டம்" முன்வைக்கப்பட்டு நமது கட்சியானது அச்செயல்திட்டத்தை முதன்மை பணியாக முன்னெடுக்கும்.*

## முக்கிய (அ) பெரிய முரண்பாடுகள்

*தமிழகத்தில் சில முக்கிய (அ) பெரிய முரண்பாடுகள், அவை அடிப்படை முரண்பாடுகளின் கூறுகளில் உள்ளடங்கி இருந்தாலும் தனித்த அடையாளங்களுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவை ...*

*1. இந்திய ஆளும் வர்க்கங்களுக்கிடையிலான முரண்பாடு*

*2. தமிழ்த்தேசிய வளர்ச்சி* X *இந்திய தேசியம்*

*3. தமிழ்த்தேசிய வளர்ச்சி* X *சாதியம்*

*4. சாதியம்* X *தாழ்த்தப்பட்டவர்கள்*

*5. ஆணாதிக்கம்* X *பெண்கள்*

*6. இந்துத்துவா பயங்கரவாதம்* X *மத சிறுபான்மையினர்*

*7. பழங்குடிகள்* X *பழங்குடியல்லாதோர்*

*8. தமிழ்ப் பெருந்தேசிய இனம்* X *மொழி சிறுபான்மையினர்*

*9. தமிழ்த்தேசிய வளர்ச்சி* X *தமிழக பிராந்திய ஏற்றத்தாழ்வுகள்*

*10. தமிழ்த்தேசியம்* X *அண்டை தேதிய இனங்கள்*

*11. தமிழ்த்தேசியம்* X *சிங்கள பேரினவாதம் (இலங்கை அரசு)*

*12. தமிழ்த்தேசியம்* X *இந்திய விரிவாதிக்கம்*

*என முக்கிய (அ) பெரிய முரண்பாடுகள் நிலவுகின்றன. இவைகளில் சில முரண்பாடுகள் அடிப்படை முரண்பாடுகளின் இயக்க போக்கின் தீவீரத்தால் கடுமையாகி தற்காலிக முதன்மை முரண்பாடாகவோ, மண்டலம்*

*(அ) வட்டாரம் சார்ந்து முக்கிய முரண்பாடாகவோ முன்னுக்கு வரும். இவைகளைக்கையாளும் பொழுது வர்க்கக் கண்ணோட்டத்திலிருந்து எச்சரிக்கையாக கையாள வேண்டும். இல்லையெனில் ஆளும் வர்க்க நலனுக்கும், சதிக்கும் இரையாக வேண்டி இருக்கும்.*

## துணை (அ) சிறிய முரண்பாடுகள்:

*நமது தமிழகத்தில் மேற்கண்ட முக்கிய (அ) பெரிய முரண்பாடுகள் மட்டுமல்லாமல் துணை (அ) சிறிய (விவீஸீஷீக்ஷீ) முரண்பாடுகளும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன அவை....*

1. *பாட்டாளி வர்க்கத்திற்கும் x குட்டி முதலாளி வர்க்கத்திற்கும்*
2. *குட்டி முதலாளி வர்க்கத்திற்கும் x உழவர்களுக்கும்*
3. *பாட்டாளி வர்க்கத்திற்கும் x உழவர்களுக்கும்*
4. *பணக்கார உழவர்கள், நடுத்தர உழவர்கள் x கூலி உழவர்கள்*
5. *பணக்கார உழவர்கள் x நடுத்தர உழவர்கள்*
6. *வணிகர்களுக்கும் x உழவர்களுக்கும்*
7. *வணிகர்களுக்கும் x முதலாளிகளுக்கும்*
8. *நகரங்களுக்கும் x கிராமங்களுக்கும்*

## முரண்பாடுகளைக் கையாள்வது குறித்து:

*மேற்கண்ட முரண்பாடுகள் ஒவ்வொன்றும் தனக்கே உரிய தனிப்பட்ட குறிப்பான தன்மையைக் கொண்டிருக்கிறது. மேலும், ஒவ்வொரு முரண்பாட்டிலும் உள்ள ஒவ்வொரு கூறும் அதற்கே உரிய குறிப்பான பண்பு களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு முரண்பாட்டின் குறிப்பான தன்மையை மட்டுமல்லாது, ஒவ்வொரு முரண்பாட்டிலும் உள்ள இரு கூறுகளையும் ஆழ்ந்து பயில வேண்டும். முழுமையைப்புரிந்து கொள்வதற்கான வழிமுறை இதுதான்.*

*முரண்பாடுகளின் வேறுபட்ட பண்பிற்கேற்ப பண்பால் வேறுபட்ட முறைகளால்தான் தீர்க்க வேண்டும். எடுத்துக்காட்டாக வளரும் இந்திய ஏகாதிபத்திய மூலதனமும், ஏகாதிபத்திய நிதி மூலதனங்களும் கைப்பற்றப் பட்டு அதன் முதலாளித்துவ தனி உடமை ஒழிக்கப்பட்டு சோசலிச சாரத்தில் சமூக உடைமையாக்கப்படுவதன் மூலம் தீர்க்கப்படும். சாதி- அரை நிலவுடமை சமூகத்தை எடுத்து கொண்டால் அங்கு பிற்போக்குத்தனமாக இருக்ககூடிய நிலவுடமை சக்திகளின் (மூலதன - சாதி நிலக்கிழார்கள்) நிலங்கள் கைப்பற்றப்பட்டு, நிலமற்ற கூலி உழவர்களுக்கு மக்கள் சனநாயக*

*முறையில் நிலங்கள் பகிர்ந்தளிக்கபடும். நிலங்கள் துண்டு துண்டாக பிரிந்து இருக்கும் பின்தங்கிய நிலையிலிருந்து நிலங்களைக் குவிப்பது என்ற கூட்டு பண்ணையின் சோசலிச முறையில் தீர்க்கப்படும்.*

# தமிழ்த்தேசிய விடுதலைப்போராட்டத்தில் நாம் எதிர்த்து வீழ்த்த வேண்டிய எதிரிகள் - நாம் அணிதிரட்ட வேண்டிய நண்பர்கள்

## நாம் எதிர்த்து வீழ்த்த வேண்டிய எதிரிகள்:-

1. *இந்திய பிராந்திய பெருமுதலாளிகள்*
2. *ஏகாதிபத்தியங்கள்.*
3. *அதிகார வர்க்க முதலாளிகள்*
4. *மூலதன - சாதி நிலக்கிழார்கள்.*

*இந்நால்வரே நம் எதிர்த்து வீழ்த்த வேண்டிய எதிரிகள் ஆவர். இவர்களைப் பற்றி விரிவாகப் பார்ப்போம்.*

### 1. இந்திய பிராந்திய பெருமுதலாளிகள்

- *பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்திய துணை கண்டத்தில் தோன்றிய இயல்பான பட்டறை முதலாளியத்தை அழித்து தனது கட்டுப்பாட்டிற்குள் இந்திய பிராந்திய பெருமூலதனத்தை (முதலாளியத்தை) அனுமதித்தது.*

- *இந்திய பெருமுதலாளியத்தின் தோற்றம்*

*அ) எந்த தேசியத்தையும் சார்ந்து வரவில்லை*

*ஆ) தனது நலனை புறக்கணித்து விட்டு ஏகாதிபத்தியத்தின் ஏஜெண்டாகவும் உருவாகவில்லை*

*இ) இந்திய துணைகண்ட சந்தை பலத்திலேயே பிராந்திய (பெரு முதலாளி வர்க்கம் என்ற தனிப் பண்போடு உருவாகியது.*

*ஈ) தனது சொந்த நலனுக்காகப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை சார்ந்து சார்பு மற்றும் கூட்டு என்ற தன்மையில் வளர்ந்தது. தனது நலனிற்காக தந்திரமாக செயல்படுதல் (அ) பேரம் என்ற உத்திகளையே முதன்மையாகக் கொண்டிருந்தது.*

• இரண்டு உலக போர்களிலும் தன்னை பலப்படுத்திக் கொண்ட பெருமுதலாளிகள், இரண்டாம் உலக போரில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அரசியல்., பொருளாதார ரீதியாக பலவீன மடைந்ததையும். இந்திய துணை கண்டத்தில் பீறிட்டெழுந்த பரந்துப்பட்ட மக்களின் சுதந்திர உணர்வையும், சுதந்திரத்திற்கான பல்வேறு வகைப்பட்ட போராட்டங் களையும் பயன்படுத்தி "வெள்ளையனே வெளியேறு" இயக்கத்தின் மூலம் தனது உச்சக்கட்டத்தை காட்டி சமாதான பூர்வமாகவே வெள்ளையனிட மிருந்த அரசியல் அதிகாரத்தை கைப்பற்றி கொண்டனர்.

• அரசியல் அதிகாரத்தை கைப்பற்றிய இந்திய பிராந்திய பெரு முதலாளிகள் ஏகாதிபத்தியத்துடன் கூட்டு (அ) சார்பு என்ற வகையிலும், மூலதன சாதி- நிலக்கிழார்களை கட்டுப்படுத்தப்பட்ட கூட்டாளியாகவும், தனக்கு சேவகம் செய்யும் அதிகார வர்க்க முதலாளியத்தை ஊட்டி வளர்த்தும் வருகிறது.

• 1947-க்கு பிறகு அமெரிக்கா மற்றும் சோவியத் இரசியாவிற்கும் இடையிலான பனிப்போரை பயன்படுத்தி தங்களை வளர்த்து கொண்டனர்.

• 1960 -களில் தேசிய மயமாக்கல் என்ற பொருளாதார கொள்கையை இந்திரா காந்தி மூலம் நிறைவேற்றி வங்கிகளை தேசிய மயமாக்கி அதன் மூலம் திரட்டப்பட்ட பெரும் பணத்தை தங்களது மூலதனத்திற்காகப் பயன்படுத்தி கொண்டதோடு, தங்களின் சுரண்டலுக்கு ஏற்ப விவசாய உற்பத்தி, மற்ற உற்பத்திகளை மாற்றி கொள்ள பசுமை புரட்சி, வெண்மை புரட்சி, நீலப் புரட்சி என்று இந்திரா காந்தி மூலம் பல 'புரட்சி'- களை செய்து கொண்டது. மொத்தத்தில் அதிகார வர்க்க (அரசின்) மூலதனத்தை சார்ந்து தங்களை முழுமையாக பலப்படுத்திக் கொண்டனர்,

• 1990 களில் உலகமயமாக்கல், தனியார் மயமாக்கல், தாராள மயமாக்கல் கொள்கையை இராஜிவ் காந்தி மூலம் புதிய பொருளாதார கொள்கை என தொடங்கி, நரசிம்மராவ், வாஜ்பாய், மன்மோகன் சிங் ஆட்சி காலங்களில் இந்திய பிராந்திய பெருமுதலாளிகள் உலகமயமாக்கல் மூலம் இந்திய பிராந்திய அளவிலும், தெற்காசிய அளவிலும், தனது சந்தை மற்றும் சுரண்டலை திடப்படுத்தி கொண்டதோடு, உலகின் முதன்மையான 2000 கம்பெனிகளில் 50 இந்திய கம்பெனிகளாகவும், டாடா, பிர்லா போன்ற பெருமுதலாளிகனின் மொத்த வருவாயில் 50%-க்கும் மேல் இந்தியாவின் வெளியிலிருந்து வரும் அளவிற்கும் உலகளவில் தனது சந்தை மற்றும் சுரண்டலை விரிவுப்படுத்தியுள்ளனர்.

• *மேலும் படிப்படியாக அரசிற்கு சொந்தமாக உள்ள நிறுவனங் களையும், தொழில்களையும், தனியார்மயம் என்ற கொள்கைமூலம் தங்கள் வசமாக்கி வருகின்றனர்.*

• *அரசியல் அதிகாரத்தை தங்கள் கையில் வைத்துள்ள இந்திய பெரு முதலாளிகள் இந்திய அரசியலை, ஆட்சியை தீர்மானிக்கின்றனர்.*

• *இந்திய பெருமுதலாளிகள் தங்கள் சந்தை மற்றும் சுரண்டலுக்காகத் தமிழ்த் தேசத்தை, இந்திய ஒன்றிய அரசில் சிறைப்படுத்தி வைத்திருக் கின்றனர். தமிழக மக்களை தாங்கள் சுரண்டி கொழுப்பதோடு ஏகாதிபத்திய முதலாளிகள், மூலதன- சாதி- நிலக்கிழார்கள், அதிகார வர்க்க முதலாளிகள் சுரண்டி கொழுக்கவும் உறுதுணையாக இருக்கின்றனர்.*

• *“சுதந்திர தமிழ்த் தேசிய மக்கள் சனநாயகக் குடியரசை” அமைப்பதற்கு முதன்மையான எதிரியாக இந்திய பிராந்திய பெரு முதலாளிகளே இருக்கின்றனர். இவர்களுக்கு எந்தவித தேசிய தன்மையும் கிடையாது, பிற்போக்கு தனமான இந்திய பிராந்திய, தெற்காசிய மற்றும் உலகளாவிய விரிவாதிக்க தன்மையைக் கொண்டவர்களாகவே உள்ளனர்.*

• *சில இனவாத கும்பல்கள் தமிழ்த்தேசத்திலிருந்து வளர்ந்த இந்திய பிராந்திய பெருமுதலாளிகளை தமிழ்த்தேசிய முதலாளியாகத், தமிழ்த் தேசிய போராளியாகச் சித்தரித்து பிரச்சாரம் செய்கின்றனர். நாம் இத்தகைய இனவாத கும்பல்களின், இந்திய பெருமுதலாளிகளுக்கான அடிவருடித் தனத்தை, தமிழ்த் தேசத்திற்கான துரோகத்தை அம்பலபடுத்த வேண்டும். ஏனென்றால் இந்திய பிராந்திய பெருமுதலாளி வர்க்க உருவாக்கத்தின் கருவாக உருவானவர்கள்தான் தமிழ் பேசும் இந்திய பெருமுதலாளிகள் ஆவர்.*

• *தமிழ் பேசும் இந்திய பெருமுதலாளிகள் உட்பட இந்திய பிராந்திய பெருமுதலாளி வர்க்கத்தை தூக்கியெறிவது என்பதே தமிழ்த்தேச விடுதலையின் மைய இலக்காகும்.*

## 2. ஏகாதிபத்தியங்கள்

• *காலனிய ஆட்சி காலத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தமிழ்த்தேசம் உட்பட இந்திய துணை கண்டத்தை சுரண்டி கொண்டிருந்தது. இது மட்டு மல்லாமல் அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி போன்ற ஏகாதிபத்தியங்களும் சுரண்டி கொண்டிருந்தன.*

• *1947-க்கு பிறகு பிரிட்டிஷ் மூலதனம் பின்னுக்கு தள்ளப்பட்டு அமெரிக்காவின் மூலதனம் முன்னுக்கு வந்தது. அமெரிக்கா மற்றும்*

சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் போட்டிகளமாகத் தமிழ்த்தேசம் மாறியது.

- இந்திய பெரு முதலாளி வர்க்கம், அதிகார வர்க்க மூலதனத்தைச் சார்ந்து தன்னை பலப்படுத்தி கொண்டது. 1960-களுக்கு பிறகு ஏகாதி பத்தியத்தியங்களின் மூலதனம் என்பது தமிழ்த்தேசம் உட்பட இந்திய துணை கண்டத்தில் மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டது.

- 1990- களுக்குப் பிறகு உலக மயமாக்கல், தாராளமயமாக்கல் மூலம் பெருவாரியான ஏகாதிபத்திய நிதி மூலதனங்கள் தமிழகத்தில் குவிகின்றன. இதன் விளைவாகத் தமிழகம் பன்னாட்டு முதலாளிகளின் வேட்டைகாடாகி உள்ளது. சிறப்பு பொருளாதார மண்டலங்கள் மூலம் விளைநிலங்கள், கடல் வளங்கள், காட்டு வளங்கள் பெருமளவில் கொள்ளை போகின்றது.

- 1990 -களுக்கு பிறகு உலகமயமாக்கல் சூழலிலும் தமிழகம் உட்பட இந்திய துணைகண்டத்தில் ஏகாதிபத்தியங்களின் மூலதனம் மூன்றாவது இடத்தில்தான் உள்ளது. அதிகார வர்க்க மூலதனம் முதல் இடத்திலும் இந்திய பெருமுதலாளிகளின் மூலதனம் இரண்டாவது இடத்திலும் உள்ளது.

- தமிழகத்தில் இயற்கை வளங்களையும், தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், பழங்குடிகளின் வாழ்வையும் பாதுகாப்பது என்பது ஏகாதிபத்திம் உட்பட முதலாளியத்தை தமிழ் நாட்டிலிருந்து விரட்டுவது என்பதுதான்.

## 3. அதிகார வர்க்க முதலாளிகள்:

- பிரிட்டிஷ் ஆட்சியின் போது பயிற்றுவிக்கப்பட்ட அதிகார வர்க்கம் மற்றும் அரசியல் தரகர்கள், 1947-ஆம் ஆண்டு "சுதந்திரத்திற்கு" பின் முக்கிய பங்கை வகித்து வருகின்றனர். இந்திய பிராந்திய பெருமுதலாளி வர்க்கம் தன்னை திடப்படுத்தி கொள்வதற்காகத், தனது நலனிலிருந்து அரசு மூல தனத்தை வளர்த்தெடுத்தது, இதையொட்டி புதிய வர்க்கமாகவே அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் அதிகார வர்க்க முதலாளிகளாக உருவாகினர்.

- இவர்கள் அரசின் வர்க்கத்தன்மையிலிருந்து இந்திய பெருமுதலாளி களின் நலனையும், ஏகாதிபத்தியம் மற்றும் மூலதன - சாதி- நிலக் கிழார்களின் நலன்களையும் பாதுகாப்பவர்களாகச் செயல்படுகின்றனர். அதிகார வர்க்க முதலாளிகள் இவர்களின் தரகர்களாக (அ) ஏஜெண்டுகளாகச் செயல்படுகின்றனர்.

• ***அதிகார வர்க்க முதலாளிகளில் ஒரு பிரிவினரான அதிகாரிகள் (அதிகாரதரகர்கள்)*** *பொதுத்துறை இயக்குநர்களாக முக்கிய முடிவுகளைத் தீர்மானிக்கின்றனர். நிறுவனப் பங்குகளில் முக்கிய பங்குதாரர் ஆகிறார்கள். பொது துறையை தனியார் மயமாக்குவது என்பதில் அதிகாரவர்க்க தரகர்கள் கையூட்டு, ஊழல்மூலம் பெரும் பலனை அடைகிறார்கள். ஓய்வு பெற்றதும் தனியார் நிறுவனங்களுக்கு அதிகாரி (அ) தலைவர் (அ) சட்ட ஆலோசகர் களாகத் தங்களது அந்தஸ்தை தொடர்வது என்பது இன்றைய அதிகாரவர்க்க முதலாளி வர்க்கத்தின் சிறப்பியல்பாகும்*

• ***அரசியல்வாதிகள் (அரசியல் தரகர்கள்)*** *தங்களது அரசியல் கட்சிக்கான நிதியை ஆளும் வர்க்கத்திடமிருந்து பெருமளவில் பெறு கின்றனர். எனவே, அவர்களுக்கு சாதகமாக நடவடிக்கைகளை மேற் கொள்வதையே தங்களது கடமையாகக் கொள்கின்றனர், அரசாங்க நிலங்கள், புறம்போக்கு நிலங்கள், விவசாய நிலங்கள், காட்டு வளங்கள், குவாரிகள், சுரங்கங்கள் என்று இயற்கையையே தங்களுக்கு முழுமையாகப் பட்டா வாக்கிக் கொள்கிறார்கள்.*

• *கூலி கொலை பட்டாளத்தை உருவாக்குவது, ரவுடி கும்பல்களை உருவாக்குவது, கட்டப்பஞ்சாயத்து, கள்ளக்கடத்தல், விபச்சாரம், சூதாட்டம், நிதி மோசடி கம்பெனிகள், போதைப்பொருட்களைத் தயாரித்தல், போதைப்பொருட்களை உற்பத்தி செய்தல், விற்றல் மற்றும் அனைத்து வகையான குற்றங்களுக்கும் உதவியாக இருத்தல் (அ) செய்தல் என்ற தன்மைகளில் இவர்கள் நேரடியாக ஈடுபடுகின்றனர் (அ) துணை புரிகின்றனர், இவ்வாறு இவர்கள் சமூக விரோத கும்பல்களாகக் கூட உள்ளனர்.*

• *தங்களது கொள்ளைகளை பினாமிகள் (அ) உறவினர்கள் மூலமாக பங்குகளாகவும், சொத்துகளாவும் மாற்றுகின்றனர். இதன் மூலம் இவர்களில் ஒரு பகுதியினர் பெருமுதலாளிகள் பட்டியலில் சேருகின்றனர். தமிழ்நாட்டை சேர்ந்த டி.டி.கே. குழுமம், கருணாநிதி குடும்பம். ஜெ, சசி குடும்பம், இராமதாசு குடும்பம் இதற்கு நல்ல எடுத்துக்காட்டுகளாகும்.*

• *ஊடகங்கள், திரைத்துறை, தொழில்கள், சிமெண்ட், அனைத்து போக்குவரத்து துறைகள், ஸ்டார் ஓட்டல்கள், வணிக நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், பண்ணைகள், தோட்டங்கள், மீன்பிடி கப்பல்கள், நிதி நிறுவனங்கள், வெளிநாட்டில் மூலதனமிடுதல், வெளிநாட்டு வங்கிகளில் பதுக்குதல் என்று அனைத்து இடங்களிலும் இவர்களின் அதிகாரமே பரவி, விரவி உள்ளது.*

• இவர்கள் தங்களது கொள்ளைகளை இன்றைய கட்டத்தில் ஒழுங்கு முறைக்கு உட்படுத்தி நிறுவனமயமாக்குகின்றனர். ஆளுங்கட்சி, எதிர்கட்சி, இதரகட்சிகள் மற்றும் உயரதிகாரிகள், கீழ் மட்ட அதிகாரிகள், என்று சதவீத கணக்கில் பங்கை பிரிக்கின்றனர். தலைமை அரசியல்வாதியிலிருந்து கீழ் மட்ட வார்டு மெம்பர் வரையிலும், தலைமை அதிகாரிகள் முதல் கீழ்மட்ட கிராம நிர்வாக அதிகாரிகள் வரையிலும் நிர்ணயிக்கப்பட்ட பங்கு போய் சேருகிறது.

• மொத்தத்தில் அதிகார வர்க்க முதலாளிகள் (அதிகார வர்க்க தரகர்கள், அரசியல் தரகர்கள்) சட்டங்களை இயற்றுதல், செயலாற்றும் ஆணைகள், நீதிமன்ற உத்தரவுகள், திட்டங்கள், மக்கள் நல திட்டங்கள், பராமரிப்பு, ஒப்பந்தங்கள், இவற்றில் பெரும் பங்கை லஞ்சமாகப் பெறுகின்றனர். கடன்கள், மானியங்கள், நிதி ஏஜெண்டுகள், அந்நிய செலவாணி, வரி ஏய்ப்பு, தொழில் உரிமங்கள், என்று அனைத்திலும் பெரு மளவு அட்டைபோல் உறிஞ்சி எடுக்கின்றனர். தங்களது எசமானர்களுடன் சேர்ந்து கொண்டு தங்களது அரசாங்கத்தையே திவாலாக்குகிறார்கள்.

• எனவே, ஒரு சில விதிவிலக்கு தவிர மற்றவர்கள் இவர்களின் எசமானர்களோடு தூக்கி எறிய வேண்டியவர்கள்.

• அடுத்ததாக, அதிகாரவர்க்க மூலதனத்தின் வளர்ச்சி மிக பிரமிப் பூட்டக் கூடியது, அறுபதுகளில் ஏகாதிபத்திய நிதிமூலதனத்தை மூன்றாவது இடத்திற்கு தள்ளிவிட்டு முதல் இடத்தை பிடித்த அதிகாரவர்க்க மூலதனம் இன்றும் அதே இடத்தில் தொடர்கிறது. சில கோடிகளில் தொடங்கிய சில நிறுவனங்கள் இன்று 1 லட்சம் கோடிக்கு மேல் சொத்துக்களை பெற்றுள்ளன (எல்.அய்.சி, இந்திய எண்ணெய் நிறுவனம், ஸ்டேட் வங்கி... போன்றவை) உலகமயமாக்கலுக்கு பிறகு இந்திய அதிகார வர்க்க மூலதனத்தின் பிடி தெற்காசிய நாடுகளில் பலமாக இறுகி உள்ளது. இதன் மூலம் தெற்காசிய பிராந்திய அதிகார வர்க்க ஏகாதிபத்தியமாக வளர்ந் துள்ளதோடு, இதர கண்டங்களுக்கும் தன்னை விரிவுப்படுத்தி கொண்டு வளரும் ஏகாதிபத்தியமாக உருவெடுத்துள்ளது.

• தமிழ்த்தேசிய விடுதலையில் அதிகார வர்க்க மூலதனம் கைப்பற்றப்பட்டு அதன் வர்க்கத்தன்மை மாற்றியமைக்க வேண்டும்.

## 4. மூலதன - சாதி - நிழக்கிழார்கள்:

• தமிழகத்தில் ஏற்கெனவே இருந்த சாதி - நிலக்கிழார்களில் தங்களை எதிர்த்தவர்களின் அரசியல் அதிகாரத்தை முற்றிலும் வீழ்த்தி தங்களுக்கு விசுவாசமானவர்களைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் அதிகாரம் அளித்து

*கிராமப்புரங்களை தங்களுக்கு தேவையான கச்சா பொருட்களை உற்பத்தி செய்யும் விவசாயமாக மாற்றியமைத்தது கிழக்கிந்திய கம்பெனியாகும் இதில் உருவானவர்களே மூலதன சாதி - நிலக்கிழார்கள்.*

- *இவர்கள் ஒருபக்கம் பிரிட்டிஷ் கம்பெனிகளுக்கு கச்சாப் பொருட்களை ஏற்றுமதி செய்தும், இந்திய சந்தைகளுக்கு விளை பொருட்களை, உற்பத்தி செய்தும் மண்டிகள் மற்றும் அன்றைய போக்கு வரத்துகளுக்கு, சொந்தக்காரர்களாகவும் முதலுடைமையின் அம்சங்களைக் கொண்டு இருந்தனர்.*

- *மறுபக்கம் சாதிய சுரண்டல், கொத்தடிமை, கந்துவட்டி, கிராம ஆதிக்கம், குத்தகை சுரண்டல் என்று நிலவுடமையின் அம்சங்களையும் கொண்டிருந்தனர். இதனால் இவர்கள் அரை நிலவுடமையின் கிராம எசமானர்களாகவும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு சேவை செய்யும் கிராம சேவகர்களாவும் மூலதன - சாதி - நிலக்கிழார்கள் என்ற புதிய வர்க்கமாக மாற்றம் பெற்றனர்.*

- *1947-க்கு பிறகு இந்திய பெருமுதலாளி வர்க்கம் இவர்களை (மு.சா.நி) அழிக்காமல் தங்களுக்கு கட்டுப்பட்ட கூட்டாளியாக மாற்றிக் கொண்டனர்.*

- *இன்று இவர்கள் தங்களை நவீனமாக மாற்றி கொண்டு வரு கின்றனர். ஒரு பிரிவினர் முதலாளிகளாகவும், வேறு பிரிவினர் தாங்கள் சார்ந்த சாதி அடையாளங்களை முன்னிறுத்தி வட்டாரங்களில் அரசியல் சக்திகளாக உருவெடுக்கின்றனர். இதன் மூலம் அதிகார வர்க்க முதலாளி களாக மாறுகின்றனர்.*

- *தமிழக கிராமப்புறங்களின் பிற்போக்குத் தனங்களை தமிழ்த்தேசிய வளர்ச்சிக்கு தடையாக இருக்கும் சாதியத்தைக் கட்டிக்காக்கும் இந்த பிற்போக்கு ஆதிக்க சக்திகளே உடனடியாக வீழ்த்தப்பட வேண்டிய எதிரிகள் ஆவார்கள்.*

- *மேற்கூறிய நான்கு எதிரிகளையும் தமிழ்த்தேசிய விடுதலைக்கானப் போராட்டத்தில் தூக்கியெறிய வேண்டும்.*

## நாம் அணிதிரட்ட வேண்டிய நண்பர்கள்

- *வர்க்க பிரிவினராக உள்ள தொழிலாளர்கள், விவசாயிகள், குட்டி முதலாளிகள், தேசிய முதலாளிகள், ஒடுக்கப்பட்ட சமூக பிரிவினராக உள்ள பெண்கள் தலித்துக்கள், மீனவர்கள், மதசிறு பான்மையினர், பழங்*

குடிகளுமே தமிழ் தேசிய விடுதலைக்கான போராட்டத்திற்கு அணிதிரட்ட வேண்டிய நண்பர்கள் ஆவார்கள்.

## தொழிலாளர்கள்

• “சுதந்திர தமிழ்த்தேசிய மக்கள் சனநாயகக்குடியரசை” படைப் பதற்கான போராட்டத்தில் முதன்மையாக அணிதிரட்ட வேண்டிய நண்பர் தொழிலாளி வர்க்கமே. இதில் நவீன ஆலை தொழிற்சாலைகளில் வேலை செய்யும் முன்னேறிய தொழிலாளி வர்க்கமான பாட்டாளி வர்க்கமே தமிழ்த் தேசிய விடுதலைக்கான போராட்டத்திற்கு தலைமை தாங்க வேண்டிய வர்க்கமாகும்.

• நமது தமிழகத்தில் பாட்டாளி வர்க்கம் மட்டுமல்லாது, அமைப் பாக்கப்பட்ட தொழிலாளர்கள், அமைப்பாக்கப்படாத தொழிலாளர்கள், விவசாய தொழிலாளர்கள் என்று சுமார் 2 கோடி பேர் உள்ளார்கள். தேயிலைத் தோட்ட தொழிலாளர்களும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் உள்ளனர். இவ்வர்க்கமே தமிழ்நாட்டில் பெரிய வர்க்கமாகும்- ஆனால் இதில் பெரும்பகுதி கிராமப்புற மக்களே ஆவர். கிராமப்புற மக்களின் நகரும் தன்மையை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

• தலைமை சக்தியான நவீன பாட்டாளி வர்க்கம் சுமார் 10-லட்சம் என்ற சிறிய அளவில் இருப்பதால், இவர்கள் இதர தொழிலாளர்கள் மற்றும் அமைப்பாக்கப்படாத தொழிலாளர்கள், விவசாய தொழிலாளர்களையும் அணிதிரட்ட வேண்டியுள்ளது.

• மொத்தத்தில் தொழிலாளி வர்க்க பிரிவினரின் எண்ணிக்கை தமிழ் நாட்டுக்கே உரிய சிறப்பம்சமாகும். இவர்கள் தமிழ்நாட்டின் உழைப்புச் சக்திகளில் 60% மேலானவர்கள் ஆவர். இவர்கள் தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 30% ஆவர். கடந்த சில பத்தாண்டுகளில் தமிழகத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவே இதுவாகும். நகர்புற மக்கள் தொகை 50% மேல் அதிகரித்துள்ளது. இது இந்தியாவின் சராசரியை விட மிக அதிகமாகும். இது மட்டுமல்லாமல் நகரும் மக்கள் தொகை என்பது நாளுக்கு நாள் பன்மடங்கு அதிகரித்து கொண்டே செல்கிறது.

• கிராமப்புறங்களில் உழைப்பு சக்தியை உள்வாங்கக்கூடிய விவசாய பொருளாதார உற்பத்தி முறை இல்லாததால் கிராமப்புற மக்கள் இதர வாய்ப்புகளைத் தேடி நகருகின்றனர். ஆனால் இவர்களை முழுமையாக உள்வாங்கும் பலத்தையும் நகரங்கள் கொண்டிருக்கவில்லை, இதனால் நிலையற்ற வாழ்க்கையுடையோரின் எண்ணிக்கை மிகவும் அபாயகரமாக உள்ளது. இந்நெருக்கடி சமூக மாற்றத்தின் தேவையை ஆழப்படுத்துவதன் மூலம் விரைவுப்படுத்துகிறது.

• தொழிலாளி வர்க்கம் ஏற்கெனவே போராடி பெற்ற அனைத்து உரிமைகளும் தொழிற்சங்க உரிமை, 8 மணி நேர வேலை., குறைந்த பட்ச கூலி, வேலை நிரந்தரம், தொழிலாளர் நீதிமன்றம், போராடும் உரிமை என அனைத்தும் உலகமயமாக்கலுக்கு பிறகு பறிக்கப்பட்டு தொழிலாளர்கள் வாழ்க்கை உத்தரவாதமற்று உள்ளது. நிரந்தர தொழிலாளர்கள் எண்ணிக்கை பெருமளவில் குறைந்துள்ளது. ஒப்பந்த தொழிலாளர்கள், பயிற்சி தொழிலாளர்கள் மூலமே தொழிற்சாலைகளை இயக்குகின்றனர். இவர் களுக்கு மிக குறைந்த கூலியே அளிக்கப்படுகிறது. வேலை உத்தவாதம் மின்மையால் இத்தொழிலாளார்களின் வாழ்க்கை கேள்விக் குறியாக்கப் பட்டுள்ளது. இவர்களிடம 10 மணி நேர, 12 மணி நேர வேலைகளை வாங்கி கசக்கி பிழிந்தெடுக்கின்றனர். தேயிலைத்தோட்ட தொழிலாளர்கள் மிக கொடூரமான உழைப்பு சுரண்டலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

• கல்வி வளர்ச்சியும், நகர்புறமயமாக்கலும் ஒரு புறத்தில் இறுகிப் போன கிராமப்புற சாதிய வாழ்க்கை முறையை நெகிழ்வடைய செய்கிறது. இது வர்க்க போராட்ட அணி திரட்டலுக்கும், தமிழ்த்தேசிய விடுதலையின் வளர்ச்சிக்கும் உதவிகரமாகவே இருக்கும்.

• தமிழ் நாட்டில் உள்ள தொழிற்சங்கங்கள் அனைத்தும் சீர்திருத்தவாத, பொருளாதாரவாத, சட்டவாத புதை சேற்றுக்குள் தொழி லாளர்களைத் தள்ளியுள்ளது. உற்பத்தியின் சமூகத் தன்மையைப் போல் முதலாளிகளிடமுள்ள (தனியார்களிடமுள்ள) உற்பத்தி சாதனங்களை (சமூக தன்மைக்கு) தொழிலாளர்களின் கைகளுக்கு மாற்றுவதொன்றே தொழிலாளர்களுக்கு நிரந்தரத் தீர்வை அளிக்கும்.

• இந்திய பெரு முதலாளிகள், ஏகாதிபத்திய முதலாளிகள், மூலதன -சாதி நிலக்கிழார்களின் உற்பத்தி சாதனங்களை (மூலதனத்தை) இழப்பீடின்றி பறிமுதல் செய்து தொழிலாளர் மன்றங்கள் மூலம் தொழிற்சாலைகளை நிர்வகிக்க வேண்டும்.

## 2. விவசாயிகள்

### (அ) கூலி விவசாயிகள்

• கிராமப்புறங்களில் உழைக்கும் வர்க்கத்தின் பெரும்பகுதி இவர்களே யாவார்கள். எளிய சிறு உழைப்பு கருவிகளை கொண்டிருக்கும், இவர்களை மார்க்ஸ் "அரை பாட்டாளி வர்க்கம்" என்று குறிப்பிடுகிறார். அதே சமயத்தில் இவர்கள் நிலமற்றவர்களாகவும், உழைப்பை சுதந்திரமாக விற்கும் தொழிலாளர்களாகவும் உள்ளனர்.

• கூலி விவசாயிகளில் பெரும்பாலோர் தலித் மக்களாக உள்ளனர். மேலும் ஆதிக்க சாதியிலும் பெரும்பகுதி விவசாயிகள் கூலி விவசாயிகளாக உள்ளனர். கூலி விவசாயிகள் என்ற வர்க்க அடிப்படையில் அணிதிரள்வதை தடுக்க ஆளும் வர்க்கங்கள் தலித் மக்களை சாதி ரீதியாக ஒடுக்குவதோடு, ஆதிக்க சாதி உழைக்கும் மக்களிடம் சாதி உணர்வை ஊட்டி வளர்க்கின்றனர். பெண் கூலி விவசாயிகள் (குறிப்பாக தலித் பெண்கள்) உழைப்பு சுரண்டலோடு, சாதிய ஒடுக்குமுறை பாலியல் வன்கொடுமை உட்பட பல்வேறு, ஒடுக்குதல்களுக்கும், மூத்தோன் வழி ஆணாதிக்கத்திற்கும், குடும்ப சுரண்டலுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர்.

• கூலி விவசாயிகளுக்கு மூலதன - சாதி - நிலக்கிழார்களின், கோயில்கள், மடங்கள் மற்றும் அரசு நிலங்களை பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அதே சமயத்தில் கூட்டு பண்ணைகளுக்கான தேவைகளைத் தொடக்கத்திலிருந்தே உணர்த்த வேண்டும். சாதிய, ஆணாதிக்க, குடும்ப ஒடுக்குதலிலிருந்தும் விடுவிக்க வேண்டும்.

## (ஆ) குறு, சிறு, நடுத்தர விவசாயிகள்

• தமிழகத்தில் விவசாய உற்பத்தியில் தலையாய சிக்கல் நிலம் துண்டுபடுதலே ஆகும். தமிழ்நாட்டின் சாகுபடி பரப்பு சுமார் 50 லட்சம் ஹெக்டேர் ஆகும். மொத்த நிலத்தின் உரிமையில் 91%-க்கு மேல் குறு சிறு, நடுத்தர விவசாயிகளாக உள்ளனர்.

• கிராமக் கூட்டுக்குடும்பத்தின் தகர்வு நிலம் துண்டுபடுதலில் மிக முக்கியப் பங்கை வகிக்கிறது. அது மட்டுமல்லாமல், அரசின் சீர்திருத் தங்களான குத்தகைதாரர் சட்டம், நிலம் அளித்தல் போன்றவைகளும் சிறிய அளவு பங்கை கொண்டிருக்கின்றன. இவை மட்டுமல்லாமல், இயற்கையில் சிக்கல், நதிநீர் சிக்கல், அராஜக சந்தையின் (நியாயமான விலை கிடைக்காமல்) பாதிப்புகளினால், விவசாயத்தில் இருந்து பகுதி அளவை விற்பது என்பதும், நகர்புறத்தை சேர்ந்த நடுத்தரவர்த்தகத்தினரின் உடைமைகளுமாக பல காரணிகள் உள்ளன.

• எப்படி இருப்பினும் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு தடையாக இருக்கும் நிலம் துண்டுபடுதல் என்ற சிக்கலை தீர்ப்பதே தமிழக விவசாய சிக்கலின் மையக்கடமையாகும். இச்சிக்கலை தீர்க்க குறு, சிறு, நடுத்தர விவசாயிகளை இணைத்து கூட்டுறவுகள் அமைத்து, இவர்களின் நிலங்களை கூட்டுடமை அடிப்படையில் நில உரிமைக்கேற்ப உற்பத்தியின் பங்குகளைப் பகிர்ந்து கொள்ளுதல் என்ற ஒப்பந்த அடிப்படையில் கூட்டுபண்ணைகளாக நிறுவ வேண்டும். இதன் மூலம் கட்டுப்படுத்தப்பட்ட நிலக்குவிதல்

நடைபெறும் மேலும் இதற்கு உதவிகரமாக உற்பத்தி கருவிகள், மூல தனத்திற்கான கூட்டுறவுகள் ஏற்படுத்தப்பட வேண்டும். இன்றைய சுதந்திரமான போட்டி என்ற பெயரில் உள்ள அராஜகவாத சந்தைக்குப் பதிலாக, உழவர்களால் கட்டுப்படுத்தப்படும் சந்தை உருவாக்கப்பட வேண்டும்.

## இ. குத்தகை விவசாயிகள்

• தமிழகத்தில் அரசு விவரப்படி சுமார் 9 லட்சம் ஏக்கர் அறக் கட்டளைகள், கோயில்கள், சத்திரங்கள், மடங்களுக்குச் சொந்தமாக உள்ளது. இதில் 5.5 லட்சம் குத்தகைதாரர்கள் என குறிப்பிடப்படுகிறது. இது உள் குத்தகை சார்ந்தும் மொத்தம் 20 லட்சமாக குத்தகை தார்கள் இருக்கலாம் என்று இதர ஆய்வுகள் தெரிவிக்கின்றன..

• இதில் தஞ்சை போன்ற மாவட்டங்களில் கணிசமாக தாழ்த்தப் பட்டோர் உள்ளனர். மேலும் அதிக எண்ணிக்கையில் குத்தகை எடுப் போரும் (10 ஹெக்டேருக்கு மேல்) உள்ளனர். எனவே, குத்தகைதாரரின் தன்மைக்கேற்ப "உழுபவனுக்கே நிலம் சொந்தம்" என்ற முழக்கத்தின் அடிப்படையில் நிலத்தை சொந்தமாக்க வேண்டும் இதர நிலங்களை நிலமற்றோருக்கு வினியோகிக்க வேண்டும்.

• தனியார் நிலங்களின் குத்தகைகளில் எதிர் குத்தகையை (Reverse tenancy) கணக்கில் எடுத்து கொள்ள வேண்டும். எனவே, குத்தகை சிக்கலை பொருத்தவரை குறித்த நபரின் தன்மையிலிருந்து தீர்மானிக்க வேண்டும்.

## ஈ). பணக்கார விவசாயிகள்

• பணக்கார விவசாயிகள் என்போர் கிராமப்புற முதலாளிகள் ஆவர். எனவே, இவர்கள் தேசிய முதலாளிகளின் பண்பை பெற்றுள்ளனர். இதனால் பெருமுதலாளி வர்க்கத்துடனும், ஏகாதிபத்தியத்துடனும் முரண் படுகின்றனர். அதே சமயத்தில் இவர்களின் ஊசலாட்டத்தின் காரணமாகத் தமிழ்த்தேச விடுதலைப் போராட்டத்தில் ஒரு பகுதியினர் நடுநிலை வகிப்பர்.

• இவர்களுக்கான விவசாய உடைமைகளை அனுமதிக்கும் அதே வேளையில் குத்தகை நிலங்களை இவர்களின் உடைமையின் அளவில் இருந்தே அணுக வேண்டும். இவர்கள் தமிழ்த்தேசிய விடுதலையின் ஊசலாடும் கூட்டாளிகளாவார்.

• தமிழகத்தில் விவசாயிகள் அமைக்கப்பாக்கப்படாமலேயே உள்ளனர். சிறு, சிறு குழுக்களாக ஒரு சில விவசாய சங்கங்களே உள்ளது.

இச்சங்கங்களுக்கு பெரும்பாலும் பணக்கார விவசாயிகளே தலைமை வகிக்கின்றனர். கூலி, ஏழை விவசாயிகள் அமைப்பாக அணிதிரட்டப் படாமலேயே உள்ளனர்.

## 3. குட்டி முதலாளிகள்:

• கைத்தொழிலாளர், சிறு வணிகர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அரசு ஊழியர்கள், அறிவு ஜீவிகள், பொறியாளர்கள், மருத்துவர்கள், வழக் குரைஞர்கள் போன்றோர் இந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். இப்பிரிவினரின் ஒரு பகுதியினர் இன்றைய நிலையில் ஈழசிக்கலை ஒட்டி தமிழ்த்தேசிய விடுதலையில் ஆர்வமுடையோராக உள்ளனர்.

• இப்பிரிவினரில் கீழ் நடுத்தர வர்க்கத் தன்மையைக் கொண்டோரே உறுதியான கூட்டாளிகளாக இருப்பர். மற்றவர்கள் ஊசலாடும் தன்மையையே வெளிப்படுத்துவர்.

## 4. தேசிய முதலாளிகள்:

• தேசிய முதலாளி வர்க்கம் என்று இங்கு குறிப்பிடுவதன் பொருள் இம்முதலாளி வர்க்கம், மூலதன அளவில் சிறியதாக இருப்பதால், பெரு முதலாளிகளின் தன்மையை பெற்றிருக்கவில்லை என்பதுதான். இவர்களின் பலவீனத்தன்மையில் இருந்து இந்திய பெருமுதலாளி வர்க்கம் மற்றும் ஏகாதிபத்திய மலைகளால் கடுமையாக அழுத்தப்படுகின்றனர்.

• இதனால் இவர்கள் முரண்பட்டாலும் தேசிய சந்தையை வளர்த் தெடுக்க தயாராக இல்லாமல், இந்திய அளவிலான பிராந்தியத்தன்மையில் வளர்வதையே தங்களது கனவாகவும், முயற்சியாகவும் கொள்கின்றனர். அதனால் இவர்கள் தமிழ்த்தேச விடுதலைக்கான போராட்டத்தில் ஊசலாடும் பிரிவினரே ஆவார்.

மேற்கண்ட நான்கு வர்க்க பிரிவினர் மட்டுமல்லாமல் கீழ்வரும் வர்க்க பிரிவினரும் தமிழ்ச் சமூகத்தில் உள்ளனர்.

## அரை பாட்டாளிகள்:

சிறு கருவிகளை உடமையாகக் கொண்டு சொந்த உழைப்பைச் செலுத்தக்கூடிய தச்சர், மெக்கானிக்... போன்றவர்களே இந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

## உதிரி பாட்டாளிகள்:-

உற்பத்தியில் ஈடுபடாத திருட்டு, ரவுடித்தனம், கடத்தல், பாலியல் போன்ற தொழில்களில் ஈடுபடும் உதிரிபாட்டாளி வர்க்கம் கணிசமானோர்

*உள்ளனர். உதிரி பாட்டாளி வர்க்கத்தின் ஒரு பகுதி தமிழ்த்தேசிய விடுதலை போராட்டத்தின் எதிர்ப்பாளர்களாக அரசால் மாற்றப்படுவர்.*

## ஒடுக்கப்பட்ட சமூகப் பிரிவினர்

*இவர்களில் ஒரு சிறு பிரிவினர் ஆளும் வர்க்கமாக இருந்த போதும். இவர்களில் பெரும்பான்மையினர் வர்க்க ஒடுக்குமுறைக்கு உள்ளாவதோடு, அரசியல், சமூக, பொருளாதார ரீதியாகவும் ஒடுக்கப்படுகின்றனர். எனவே இவர்களில் பெரும்பான்மையோர் அரசியல் அதிகாரத்தையும், உற்பத்தி சாதனங்களையும் கைப்பற்றும் தேவையில் உள்ளனர். எனவே, தமிழ்த்தேச விடுதலைப் போராட்டத்தில் தங்களது வர்க்கத் தன்மைக்கேற்ப இவர்கள் வினையாற்றுவர்.*

### 1. பெண்கள்

- *தமிழகத்தில் சங்ககாலத்தில் வர்க்க சமூக உருவாக்கத்துடன் பெண்ணடிமைத்தனமும் உருவானது. சுமார் 2500 ஆண்டுகளுக்கு மேலாக தமிழகத்தில் அடிமைகளாக உள்ள ஓர் இனம் பெண்களாகத்தான் இருப்பர். சிறுவயது திருமணம், கற்பு பேணுதல், கைம்பெண்நிலை, தாசிகளாக்குவது, சொத்துரிமை மறுப்பு, வாரிசுகளை பெற்றுதரும் எந்திரமாக என்று தொடர்ந்து இவர்களின் மீது சொல்லொண்ணா ஒடுக்குமுறைகள் ஏவப்பட்டன.*

- *சங்க காலத்திற்குப் பிறகு பல்லவர் ஆட்சியில் தொடங்கிய சாதி-நிலவுடமை உருவாக்கம், பிற்கால சோழர்கள் ஆட்சியில் தமிழகமெங்கும் பலமாக நிலைநாட்டப்பட்டது. இச்சாதி நிலவுடமை சமூகத்தில் பெண்களின் நிலையானது, வாரிசுகளைப் பெற்றெடுத்தல், வீட்டு நிர்வாகம் (வீட்டடிமை), ஆதிக்க சாதி பெண்களுக்கு உற்பத்தியில் ஈடுபட உரிமையின்மை, சொத்துடமையில் உரிமையின்மை, தாசியாக இருத்தல், தலித் பெண்கள் பாலியல் வன்கொடுமை உட்பட சாதி ஒடுக்குமுறைக்கு உள்ளதால் என்பனவாக இருந்தது. இது நாய்க்கர் ஆட்சியில் மேலும் இறுகியது.*

- *பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியில் கொண்டுவரப்பட்ட கல்வியானது, ஆதிக்க சாதி மேட்டுக்குடி பெண்களைச் சமூகத்தில் பங்காற்ற வைத்தது. அரசியல் அதிகார மாற்றத்திற்கு பிறகு ஏற்பட்ட சீர்திருத்தங்களில் கணிசமான பெண்கள் கல்வி கற்க தொடங்கினர். தாராளமயமாக்கலுக்கு பிறகு மலிவு விலை உழைப்பின் காரணமாக பெருமளவு பெண்களை உற்பத்தியில் ஈடுபட வைத்தனர்.*

• *முதலாளித்துவமானது பெண்களின் உழைப்பை குறைந்த கூலி கொடுத்து சுரண்டுவதற்காவும், பெண்களை விளம்பர பொருளாகவும், போக பொருளாகவும் பயன்படுத்தி கொள்ளவே பெண் உரிமை பேசுகின்றது. முதலாளித்துவத்தின் பெண் உரிமை குரலானது மூத்தோன் வழி ஆணாதிக்கத்தை ஒழித்து ஆண் - பெண் சமத்துவத்தை படைப்பதற்காக அல்ல. தங்களது சுரண்டலுக்காக (பாலியல் சுரண்டல் உட்பட) பெண்களை வீட்டை விட்டு வெளியில் வரவழைத்து பலியாக்குவதற்குத்தான்.*

• *உலகமயமாக்கல் சூழலை ஒட்டி எண்ணற்ற பெண்கள் வேலைக்குச் செல்ல ஆரம்பித்துள்ளனர். அவர்கள் குறைந்த கூலி, நிரந்தர வேலை யின்மை, 8 மணி நேரத்திற்கு மேலான உழைப்பு சுரண்டல், பாலியல் வன்கொடுமைகள் என்று .முதலாளித்துவத்தின் கொடுமையான சுரண்டலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.*

• *கிராமப்புறங்களில் விவசாய வேலைகளிலும், பல்வேறு அமைப்பு சாரா தொழில்களிலும் ஆணுக்கு நிகராக வேலை செய்தும் குறைந்த கூலியே பெறுகின்றனர்.*

• *இதோடு மட்டுமல்லாமல் வீட்டு வேலை, குழந்தை பராமரிப்பு, கணவனுக்கு பணிவிடை செய்தல் என்ற குடும்ப சுரண்டலுக்கும் உள்ளாகி இரட்டை நுகத்தடியின் கீழ் பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.*

• *தலித் பெண்கள் மேற்கூறிய சுரண்டலுக்கு உள்ளாவதோடு சாதிய ஒடுக்குமுறைக்கும், ஆதிக்க சாதியினரின் பாலியல் வன்கொடுமைகளுக்கும் உள்ளாகின்றனர்.*

• *பல்வேறு வங்கிகளும், தனிநபர்களும் (கந்துவட்டிக்காரர்களும்), சுய உதவிக்குழுக்கள் மூலம் பெண்களுக்கு கடனுதவி என்ற பெயரில் வட்டி தொழிலை சிறப்பாக நடத்துகின்றனர். கடனை வட்டியுடன் வசூலிக்க சம்பளம் வாங்காத வங்கி ஊழியர்களாகச் சுய உதவிக்குழு தலைவிகளைப் பயன்படுத்திக் கொள்கின்றனர், உழைப்பை இலவசமாக சுரண்டுகின்றனர். அவசர தேவையை ஒட்டி கடனை வாங்கும் பெண்களிடம் குறிப்பிட்ட நாளில் கடனுக்கான தவணையை கட்ட வேண்டும் என்று சுய உதவிக்குழு பெண்களுக்கு கடும் நெருக்கடி கொடுக்கின்றனர் இந்நெருக்கடி தாங்காது பெண்கள் தற்கொலை செய்து கொள்ளும் நிலை ஏற்படுகின்றது.*

• *படிப்படியாக விவசாயம் உட்பட அனைத்தும் பெருமுதலாளிகள் கட்டுப்பாட்டில் வருவதால், முதலாளித்துவ விவசாய பண்ணை மற்றும் தொழிற்சாலைகளில் பெண்கள் மிக அதிக எண்ணிக்கையில் வேலைக்கு*

செல்வர். குடும்பச் சிறையிலிருந்து விடுபட்டு தொழிற்சாலைகளுக்கு வேலைக்கு செல்வது அதிகரித்து வருவதால், பரந்து, விரிந்த சமூக சிந்தனை பெற்றவர்களாக மாறி வருகின்றனர். பெண்கள் படிப்படியாக பெண் உரிமை, பெண் விடுதலை கருத்துக்களும், பெண்கள் இயக்கங்களும் அதிக அளவில் உருவாகும். பெருமுதலாளிகள் தொடக்கத்திலேயே பெண்களின் உரிமைக் குரலை அடக்கி ஒடுக்குவார்கள்.

- தமிழகத்தில் சுமார் 30% மேற்பட்ட பெண்கள் உற்பத்தியில் ஈடுபடுகின்றனர். இருப்பினும் உற்பத்தி சாதனங்களின் உடைமையில் மிகவும் சொற்ப அளவிலேயே உள்ளனர். சொத்துரிமை சட்டம் நடைமுறையில் செயலற்றதாகவே உள்ளது. அதே போல் அரசியல் அதிகாரத்தில் பெண்களின் பங்கு கணவர்களின் "இரப்பர் ஸ்டாம்ப்" என்ற அந்தஸ்தை மட்டும் பெற்றுதந்துள்ளது.

- பெண்கள் உற்பத்தி சாதனங்களின் உடைமைக்கும், அரசியல் அதிகாரத்திற்கும், சமத்துவத்திற்கும் போராடக்கூடிய உறுதிமிக்க சக்திகளாக உள்ளனர்.

## தலித்துகள்:

- தமிழகத்தைப் பொறுத்தவரை சாதி- நிலவுடமை உருவாக்கத் திலேயே இங்கு தீண்டாமை தொடங்கிவிட்டது. தொழில் சார்ந்தும் மற்றும் அடங்க மறுத்தவர்கள், போரில் பிடிக்கப்பட்டவர்கள், அரசு ஆதரவு சாதிகளுக் கெதிரானவர்கள் என்று தீண்டாமை சாதிகள் உருவாக்கப்பட்டன.

- சித்தர்களில் தொடங்கி நந்தன் வரையிலும் கலங்களும், மக்கள் போராட்டங்களும் வரலாறு நெடுகிலும் நடந்தன. பிரிட்டிஷாரின் காலத்திலும் அதற்கு பிறகும் தலித்துகளின் நகரம் நோக்கிய நகர்வு - சாதி நிலவுடமையின் இன்றைய நெகிழ்ச்சிக்கு முக்கிய காரணிகளில் ஒன்றாகும்.

- சாதி- நிலவுடமை சமூகத்தில் கட்டியமைக்கப்பட்ட தலித்துக்கள் மீதான சாதி அடிப்படையிலான சுரண்டல், தீண்டாமை இன்று ஆதிக்க சாதிவெறி சக்திகளால் கட்டிக்காக்கப்படுகிறது. தலித்துகளின் சிறு அளவிலான வளர்ச்சியையும் தாங்கி கொள்ள முடியாத ஆதிக்க சாதிவெறி சக்திகள் தலித்துக்களின் வளர்ச்சியை தடுத்து நிறுத்த துடிக்கின்றனர். இதையொட்டி ஆதிக்க சாதி வெறியர்கள் தலித்துக்கள் மீது பல்வேறு மனித தன்மையற்ற தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

- இன்று வரையிலும் தமிழகத்தில் தலித்துகள் மிக பிற்போக்கான சாதி ஒடுக்குமுறைக்கு உள்ளாவதோடு நவீன கொத்தடிமைகளாகவும் உள்ளனர். உழைக்கும் மக்கள் ஓரணியில் திரண்டுவிடாமல் இருக்க ஆளும்

வர்க்க மானது ஆதிக்க சாதி உழைக்கும் மக்களிடம் சாதி வெறியை ஊட்டி வளர்க்கின்றது.

- உலகமயமாக்கலுக்கு பிறகு அனைத்தும் தனியார்மயமாகி வருவதால் தலித்துகளுக்கான இட ஒதுக்கீடு என்பது பெயரளவினதாக மாறிவருகிறது. முதலாளிய அமைப்பில் சாதியானது புதிய வடிவில் பரிணமித்துள்ளது. பார்ப்பனர், ஆதிக்க சாதியினர் உயர்மட்ட அதிகாரிகளாகவும், தலித்துக்கள் கீழ்மட்ட அதிகாரிகளாக, பெரும்பாலும் உடல் உழைப்பாளிகளாக உள்ள நிலையே உள்ளது. அரசியல் அதிகாரம், கல்வி, உயர்மட்ட வேலை என அனைத்திலும் தலித்துக்கள் இன்று வரையிலும் பின்தங்கியே உள்ளனர்.

- நவீன பிராமணியத்தின் "இந்து - இந்தியா - இந்தி" என்ற கருத்தியலில் உள்ள இந்து என்ற கூறானது தீண்டாமையை, சாதிய கட்டமைப்பை பாதுகாப்பதில் கருத்தியல் தளத்தில் முக்கிய பங்காற்றுகிறது. நவீன பிராமணியத்தின் மற்றொரு முகமாக உள்ள நவீன வெள்ளாளியமும் சாதிய அமைப்பை கட்டிக்காக்கும் தலித்விரோத கருத்தியலை கட்டமைக்கிறது.

- தலித் அமைப்புகளின் தலைமைகள் குட்டிமுதலாளிய சக்திகளாகவும், அரசியல் பிழைப்புவாத, சமரச சக்திகளாகவும் உள்ளனர். அம்பேத்காரை வழிபாட்டுக்குரிய கடவுளாக்கி (வழி நடத்த கூடியவராக பாக்காமல்), சாதியம் குறித்த அம்பேத்காரின் கருத்துக்களை குழி தோண்டி புதைப்பவர்களாகவே உள்ளனர்.

- சாதி ஒழிப்பில்தான் இதர ஆதிக்க சாதி உழைக்கும் மக்களின் விடுதலையும், தலித் மக்களின் விடுதலையும் அடங்கியுள்ளது. தமிழ்த்தேசிய விடுதலை போராட்டத்தின் வளர்ச்சியும் அடங்கியுள்ளது.

- தலித்துகள் இன்றைய சில சீர்திருத்தங்களின் மாயத் தோற்றத்தில் மயங்கிவிடாமல் உண்மையான அதிகாரத்திற்கும், உற்பத்தி சாதனங்களின் உரிமையாளர்கள் ஆவதற்கும் உறுதிமிக்க இயக்கு சக்திகளாக இருப்பது தவிர்க்க முடியாது.

## மத சிறுபான்மையினர்:

- இன்று 120 - கோடி மக்கள் தொகை உள்ள இந்திய துணைக் கண்டத்தில் நூறே நூறு முதலாளிய குடும்பங்கள் நாட்டின் உற்பத்தியில் நான்கில் ஒரு பங்கை தங்களது சொத்தாக வைத்துள்ளனர். நாளை இச் சுரண்டல் மேலும் மேலும் அதிகரித்து பெரும்பாலான உழைக்கும் மக்கள் பஞ்சத்தால் செத்து மடிவார்கள்.

• இத்தகைய நெருக்கடியை எதிர்கொள்ள முதலாளித்துவமானது மிகவும் கொடூரமாக பாசிசத்தைக் கொண்டுவரும். எல்லாவித சனநாயக உரிமைகளும் மறுக்கப்பட்டு உழைக்கும் மக்கள் போராட்டம் மிகக் கொடூரமாக ஒடுக்கப்படும். இத்ததைய நிலையில் உழைக்கும் மக்களைப் பிரிக்க ஜெர்மனியில் பாசிஸ்ட் இட்லர் "ஆரியர்கள் ஆளப் பிறந்தவர்கள்" என இனவெறியை ஊட்டி முதலாளித்துவ பாசிசத்தை கட்டிமைத்து யூத மக்களை பல்லாயிரக் கணக்கில் கொன்று குவித்தனர். இதே போல் இந்திய துணைக் கண்டத்தில் "இந்து மத வெறியை" ஊட்டி பல்லாயிரக்கணக்கான முஸ்லீம் உழைக்கும் மக்களை குஜராத், மும்பையில் கொன்றதைவிட மிக அதிகமாக கொன்று குவிக்க இந்துமத வெறி பாசிசம் கட்டியமைக்கப்பட்டு வருகிறது.

• முதலாளிகளின் சுரண்டலுக்கெதிராக உழைக்கும் மக்கள் ஓரணியில் திரளாமல் உழைக்கும் மக்களைப் பிரிக்க திட்டமிட்டு பாசிசம் வளர்க்கப்படுகிறது.

• பாபர் மசூதி இடிப்புக்குப் பிறகு இந்துத்துவா பயங்கர வாதத்தின் வளர்ச்சி மிக வேகமாக உள்ளது. இதன் எதிர்வினையாக இஸ்லாமிய அடிப்படைவாதமும் தன்னைப் பலப்படுத்தி கொள்ள முயற்சி செய்கிறது. இருப்பினும் சிறுபான்மை மக்கள் சகோதர நேயத்தையும் மனித மாண்புகளையும் காத்து வருகின்றனர்.

• அதே சமயத்தில் முஸ்லீம் மக்கள் தங்கள் வாழ்விற்கான ஆதாரங் களையும், பாதுகாப்பையும் இழந்து வருகின்றனர் என்பதை "சச்சார் கமிட்டி" அம்பலப்படுத்தியுள்ளது.

• பெரியார் பிறந்த நம் தமிழக மண்ணிலே முதலாளித்துவத்தால் திட்டமிட்டு வளர்க்கப்படும் இந்து மதவெறி பாசிசத்தால் முஸ்லீம் மக்கள் மிகபெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர். காவல் துறை, நீதித்துறை, அதிகார அலகுகள், அரசியல் என அரசு எந்திரம் அனைத்திலும் இந்துத்துவா கட்டி யமைக்கப்படுகிறது. இவையனைத்தும் முஸ்லீம்களுக்கு எதிராகச் செயல்படுகிறது.

• மதசிறுபான்மை முஸ்லீம் மக்கள், கிறிஸ்துவர்கள் உரிமை பறிக்கப்பட்டுள்ளது. அரசியல், அதிகாரம், கல்வி, வேலைவாய்ப்பு என அனைத்திலும் இவர்களின் மக்கள் தொகைக்கு ஏற்ப உரிய பிரதிநிதித்துவம் மறுக்கப்படுகிறது. மதசிறுபான்மை மக்களில் பெரும்பாலானோர் பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையிலேயே உள்ளனர்.

• முஸ்லீம் இயக்கங்களில் சில மத அடிப்படைவாதத்தை முன் வைப்பதோடு இந்து மதவெறி பாசிசத்திற்கு எதிராக பரந்துபட்ட உழைக்கும் மக்களை ஐக்கியப்படுத்தி போராடுவதற்கு பதில் ஒரு சில எதிர் நடவடிக்கைகள் மூலம் பழி தீர்த்துக் கொள்ள நினைக்கின்றனர். சிறந்த நடைமுறையாக நமது தமிழகத்தில் சில இசுலாமிய இயக்கங்கள் அனைத்து மக்கள் பிரச்சனைகளிலும் தலையீடு செய்வதன் மூலம் அனைத்து தரப்பு மக்களையும் “இந்து மத வெறி பாசிசத்திற்கு” எதிராக அணிதிரட்ட முயற்சித்து வருகிறது.

• இந்துத்துவா பயங்கரவாதத்திலிருந்து சிறுபான்மை மக்களைப் பாதுகாப்பது, இதர மக்களின் மற்றும் சனநாயக விடுதலைக்குப் போராடுபவர்களின் கடமையாகும். தமிழ்த் தேசிய விடுதலை போராட்டத்தில் மத சிறுபான்மையினர் உறுதியுடன் போராடும் இயக்கு சக்தியாக இருப்பர்.

## மீனவர்கள்

• தமிழகத்தில் மீனவர்கள் 35 லட்சம் பேர் இருப்பதாக கருதப் படுகிறது. மீனவர்கள் வரலாற்று ரீதியாக இயற்கையைச் சார்ந்து தங்களுக் கான தனித்த சமூக வாழ்க்கையை அமைத்து கொண்டவர்கள்.

• மீனவர்கள் வாழ்க்கை கடல் அலையைப் போல் நிலையற்ற ஒன்றாகவே உள்ளது. பெரும்பாலான மீனவர்கள் சிறு, சிறு குடிசை களிலேயே வாழ்ந்து வருகின்றனர். நாளுக்கு நாள் அதிகரித்து வரும் டீசல் விலையேற்றத்தாலும், முதலாளிகளின் பல்வேறு திட்டங்களாலும் கடலானது மாசுபட்டு கடல்வாழ் உயிரினங்கள் அழிக்கப்படுவதாலும், மீனவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. மீனவர்களின் மக்கள் தொகைக்கு ஏற்ப அரசியல், அதிகாரம், கல்வி, வேலை வாய்ப்பு களில் பிரிதிநிதித்துவம் மறுக்கப்படுகிறது.

• சிங்கள இனவெறி இலங்கை இராணுவத்தால் நமது மீனவர்கள் தொடர்ந்து கொன்று குவிக்கப்படுகின்றனர். சிறைப்படுத்தப்படுகின்றனர். மீனவர்களின் படகுகளும் வலைகளும் சேதப்படுத்தப்படுகின்றன. இப்படி உயிரைப் பணயம் வைத்து மீன் பிடித்து வரும் மீனவர்களுக்கான கூலியானது உயிர் வாழ்வதற்கே போதாத ஒன்றாக உள்ளது.

• உலகமயமாக்கலை ஒட்டி மீன் பிடி தொழிலில் பெருமுதலாளிகளின் முதலீடு அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. வரும் ஆண்டுகளில் மீன்பிடி தொழில், மீனவர்களின் கூட்டுறவு, கடல்வளம் அனைத்தும் பெரும் பகாசுர கம்பெனிகள் வசமாகிவிடும். பெரிய படகுகள், கப்பல்கள், நவீன கருவிகள்

மூலம் பகாசுர கம்பெனிகள் மீன்பிடி தொழிலை படிப்படியாக முழுவதும் கைப்பற்றிக் கொள்வர்.

• நாட்டுப் படகு, விசைப்படகு வைத்துள்ள மீனவர்கள் தங்கள் தொழிலை பகாசுர கம்பெனிகளிடம் இழந்து மீனவ தொழிலாளர்களாக ஆக்கப்படுவர். நவீன படகுகள், கருவிகளைப் பயன்படுத்துவதால் பெரும் பாலான மீனவ தொழிலாளர்கள் கடலிலிருந்தும், கடல் அன்னை மடியிலிருந்தும் வீதியில் தூக்கியெறியப்படுவார்கள். உலகமயமாக்கல் மூலம் கடல் எல்லைகள் ஒழிக்கப்பட்டு, அனைத்து கடல் பகுதியையும் பெரும் பகாசுரக் கம்பெனிகள் தங்கள் வசம் கொண்டு வந்து மீன்பிடி தொழிலையும், கடலையும், தங்கள் ஏகபோக உரிமையாக்கி கொள்வார்கள்.

• இயற்கையுடன் போராடி வாழ்வதாலும், சிங்கள இனவெறி, இராணுவ தாக்குதலாலும், அரசின் தொடர்ந்த மீனவர் விரோத போக்கினாலும், இவர்கள் இயல்பிலேயே கடும் அரசு எதிர்ப்பு சிந்தனை குணம் கொண்டவர்களாவும், உறுதியான போராட்ட குணம் கொண்ட வர்களாகவும் உள்ளனர். இவர்கள் தமிழ்த் தேசிய விடுதலையில் தவிர்க்க முடியாத இயக்கு சக்திகளாவர்.

**பழங்குடிகள்:**

• தமிழகத்தில் பழங்குடிகள் சில லட்சம் பேர் உள்ளனர். பழங்குடிகள் என்றென்றும் இயற்கையைச் சார்ந்து வாழ்பவர்கள். இந்திய பெரு முதலாளி களாலும், ஏகாதிபத்தியதாலும் இயற்கை வளங்கள் அழிக்கப்படுவதால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

• வனத்தின் மீதான பழங்குடி மக்களின் அடிப்படை உரிமையைப் பறித்து, வனத்தை பெருமுதலாளிகளின் முழுக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்காக, பழங்குடிகளை வனத்தை விட்டு விரட்டியடிப்பதற்கான கடுமையான முயற்சிகளில் அரசானது ஈடுபட்டுள்ளது.

• வீரப்பன் தேடுதல் வேட்டையின் போது பழங்குடி மக்கள் மிக கொடூரமான அடக்குமுறையை சந்தித்தனர். தமிழகத்தில் குறவர், இருளர், பழங்குடி மக்கள் மீது காவல்துறை தொடர்ந்து பொய்வழக்குகளைப் போடுவதோடு காவல் துறையின் சட்ட விரோத சித்திரவதைக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர். இவர்களைக் குற்ற மரபினராக காவல் துறை அணுகுவது என்பது எழுதப்படாத சட்டமாக உள்ளது. எங்கு திருட்டு நடந்தாலும், அதை யார் செய்தாலும் காவல்துறை குறவர், இருளர் மக்களையே குற்றவாளியாக்கும் கொடுமை தொடர்கதையாக உள்ளது.

*• இட ஒதுக்கீட்டில் பழங்குடிகளுக்கு நியாயமாக கிடைக்கவேண்டிய உரிமையை அரசானது தொடர்ந்து புறக்கணித்து வருகிறது. பின்தங்கியுள்ள பழங்குடி மக்களின் வாழ்க்கையை வளர்த்தெடுப்பதற்கான எத்தகைய திட்டத்தையும் அரசு மேற் கொள்ளவில்லை.*

*• பழங்குடி மக்கள் இயல்பிலேயே போராட்ட குணம் படைத்தவர்கள். தொடர்ந்த அரசின் கொடூரமான அடக்குமுறையால் அரசு எதிர்ப்பு என்பது அவர்களிடம் இயல்பாகவே உள்ளதால் தமிழ்த் தேசிய விடுதலை போராட்டத்தின் உறுதி மிக்க நட்பு சக்திகளாவர்.*

## ஐக்கிய முன்னணி

***• தொழிலாளி வர்க்க தலைமையில் விவசாயிகள், குட்டி முதலாளிகள், தேசிய முதலாளிகள், பெண்கள், தலித்துக்கள், மீனவர்கள், மதசிறுபான்மையினர், பழங்குடிகளின் ஐக்கிய முன்னணியை கட்டியமைப்பதே மக்கள் சனநாயகக் குடியரசுக் கட்சியின் அடிப்படை கடமையாகும்.***

*• தமிழ்த் தேசிய விடுதலைக்கும், மக்கள் ஆட்சிக்கும் தடையாக உள்ள எதிரிகளை தூக்கியெறிந்து தமிழ்த் தேசிய விடுதலைக்கான திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகச் செய்யவேண்டிய பணி மேற்கூறிய ஐக்கிய முன்னணியே ஆகும்.*

## தமிழ்த்தேச விடுதலைக்கான பொது திட்டம்

*தமிழ்த் தேச விடுதலைக்கான பொது திட்டம் இரண்டு பகுதிகளைக் கொண்டது.*

*1. தமிழ்த் தேசிய பொது திட்டம்*

*2. கூட்டக பொது திட்டம்.*

## தமிழ்த் தேசிய பொது திட்டம்

*தமிழ்த் தேசிய பொது திட்டமானது கீழ்கண்ட "சுதந்திர தமிழ்த் தேசிய மக்கள் சனநாயக குடியரசுக்கான" கடமைகளை முன்வைக்கிறது.*

## அ) அரசியல் கடமைகள்:

1. சுதந்திர தமிழ்த் தேச மக்கள் சனநாயகக் குடியரசைக் கட்டியமைப்பதற்கான மைய கடமையான அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு முதல் கடமையாக இந்திய ஒன்றிய அரசு என்ற சிறைக் கூடத்திலிருந்து தமிழ்த் தேசமானது தன்னை விடுவித்து கொண்டதாக, அதாவது சுதந்திர தமிழ்த் தேச மக்கள் சனநாயக குடியரசைப் பிரகடனப்படுத்தும்.

2. நாடாளுமன்ற முதலாளித்துவ சனநாயகம் என்ற திரைமறைவிற்கு பின்னால் உள்ள இந்திய பிராந்திய பெருமுதலாளி களின் அரசியல் அதிகாரத்தைத் தூக்கியெறிந்து, தொழிலாளி வர்க்க தலைமையில் விவசாயிகள், குட்டி முதலாளிகள், தேசிய முத லாளிகள், பெண்கள், தலித்துகள், மீனவர்கள், மத சிறுபான்மை யினர், பழங்குடிகளின் கூட்டு அரசியல் அதிகாரத்தை பிரகடனப் படுத்தும், நிலைநாட்டும்.

3. முதலாளித்துவ நாடாளுமன்ற ஆட்சி முறையை ஒழித்து சுதந்திர தமிழ்த் தேச மக்கள் சனநாயகக் குடியரசின் அடிப்படை அதிகார அலகுகளாக "மக்கள் ஆட்சி மன்றங்கள்" கட்டியமைக்கப் படும். அதிகாரங்கள் அனைத்தும் மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட "மக்கள் ஆட்சி மன்றங்களுக்கே" இருக்கும். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தவறு செய்தால் திருப்பி அழைக்கும் உரிமை மக்களுக்கு உண்டு.

4. "மக்கள் ஆட்சி மன்றத்திலிருந்து" "சுதந்திர தமிழ்த் தேசிய மக்கள் சனநாயக குடியரசு" வரையிலான அதிகார அலகுகள் அனைத்திலும் தொழிலாளர்கள், உழவர்கள், குட்டி முதலாளிகள், தேசிய முதலாளிகள், பெண்கள், தலித்துக்கள், மீனவர்கள், மதசிறு பான்மையினர்கள், பழங்குடிகள், மாற்று திறனாளிகள், மூன்றாம் பாலினத்தவர் மட்டுமல்ல, மொழி சிறுபான்மையினர் மற்றும் வட்டாரங்களின் தனித்தன்மைகளும் கணக்கில் கொண்டு விகிதாச்சார பிரதிநிதித்துவம் செயல்படுத்தப்படும்.

5. தமிழ்த் தேசிய விடுதலை போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்திய தமிழக மக்களின் சனநாயக முன்னணியால் அரசியல் சாசன சபைக்கான தேர்தல் நடத்தப்பட்டு, சனநாயக பூர்வமாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் சாசன சபை மூலம் "சுதந்திர தமிழ்த் தேசிய மக்கள் சனநாயகக் குடியரசுக்கான புதிய

**அரசியல் சாசன வரைவு அறிக்கை" முன்வைக்கப்பட்டு உறுதி செய்தல், இறுதி செய்தல் என்று இரு முறை மக்களிடம் பொது வாக்கெடுப்புக்கு விடப்பட்டு இறுதி செய்யப்படும்.**

***6.* புதிய சூழல்களை ஒட்டி முன்வைக்கப்படும் முக்கிய கொள்கைகள், சட்டங்கள், பொருளியியல் கொள்கைகள் மக்களாலேயே இரண்டு முறை பொதுவாக்கெடுப்பு மூலம் தீர்மானிக்கப் படும்.**

*7. "மக்கள் ஆட்சி மன்ற" அதிகாரத்தின் கீழ் அமைக்கப்படும் "மக்கள் நீதி மன்றத் திற்கான" நீதிபதிகள் மற்றும் அதிகாரிகள் அனைவரும் மக்களாலேயே தேர்ந்தெடுக்கப் படுவர். நீதிபதிகள், அதிகாரிகள் தவறு செய்தால் திரும்பி அழைக்கும் உரிமை மக்களுக்கு உண்டு.*

*8. 18 வயது நிரம்பிய குடிமகன் எவரும் தேர்ந்தெடுக்கவும், தேர்ந்தெடுக்கப்படவும், தேர்ந்தெடுத்தவர்களைத் திருப்பி அழைக்கவும் உரிமை பெற்றிருப்பர். மேலும் ஒவ்வொரு குடிமகனுக்கும் கருத்துரிமை, பேச்சுரிமை, கூட்டம் கூடும் உரிமை, சங்கம் அமைக்கும் உரிமை, போராடும் உரிமை போன்ற சனநாயக உரிமைகள் உத்தரவாதம் செய்யப்படும்.*

*9. நிகழ்கால ஆளும் வர்க்கங்களான இந்திய பெருமுதலாளிகள், ஏகாதிபத்தியங்கள், மூலதன -சாதி- நிலக்கிழார்களின் ஆதரவு அரசியல் இயக்கங்கள், கட்சிகள் தடை செய்யப்படும். இந்துத்துவா பயங்கரவாத அமைப்புகள், ஆதிக்க சாதி அமைப்புகள், பெண்கள் விரோத அமைப்புகள் தடை செய்யப்படும். அதே சமயத்தில் இதர தனிநபர் உரிமைகள் பாதுகாக்கப்படும்.*

*10. தமிழ்த் தேச மக்கள் சனநாயகக் குடியரசைப் பாதுகாக்க மக்களை ஆயுத பாணியாக்கும், குடியரசு ஆணையின் கீழ் மக்கள் இராணுவம் இருக்கும் (சுதந்திர தேசங்களின் கூட்டரசின் கீழ் இயங்கும் மக்கள் இராணுவம் தனி).*

## ஆ) பொருளியல் கடமைகள்:

*முதலாளித்துவ தேசிய பொருளாதாரத்தைக் கட்டி யமைப்பதற்கு பதிலாக தமிழ்த் தேசிய மக்கள் சனநாயக புதிய பொருளாதார கொள்கை நடைமுறைப்படுத்தப்படும். அதாவது இப்பொருளாதார கொள்கை,*

***அ)* சோசலிச பொருளாதாரக் கூறுகள் பெரும் பகுதியாகவும், சிறிய பகுதி முதலாளிய பொருளாதாரக் கூறுகளை கொண்டதாகவும் இருக்கும்.**

***ஆ) முதலாளித்துவத்தின் மூலதன குவிப்பு, உற்பத்தி சக்திகளின் கட்டுபாடற்ற வளர்ச்சி, பொருளாதார மையப்படுத்தல் மற்றும் அனைத்தும் மையச் சார்பு, கனரக இயந்தி உற்பத்தியை முதன்மை யாக்கல் என்பதற்கு மாற்றாக.***

***கட்டுப்படுத்தப்பட்ட உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி, பரவலாக்கும் தற்சார்பு பொருளாதாரம், இலகு ரக உற்பத்தியை முதன்மையாக்கல் போன்ற மக்கள் சனநாயக பொருளாதாரமே அடிப்படையாக இருக்கும்.***

***இ) இலாப நோக்கில் இயற்கையை அழிக்கும் முதலாளித்துவ அழிவுப் பொருளாதாரத்திற்கு மாற்றாக இயற்கையுடன் இயைந்த கட்டுபடுத்தப்பட்ட பொருளாதார முறை நடைமுறைப்படுத்தப்படும்.***

***அதாவது இயற்கையின் மறு உற்பத்தி சுழற்சிக்கு உட்படுத்த வாய்ப்புள்ள சூரிய ஒளி, காற்று, நீர், தாவரம் போன்றவற்றை வாழ் வாதரங்களாகக் கொண்டு சமூகத் தேவையின் பெரும்பகுதியை நிறைவேற்றி கொள்வது, அறிவியல் ஆய்வுகளை இக்கோணத்தில் முனைப்புடன் மேற்கொள்வது என்பதாகும்.***

***மேலும் மறுசுழற்சிக்கு உட்படாத கனிம வளங்களை மிகவும் எல்லைக்குட்பட்டே பயன்படுத்துவது. (எ-டு) அபாய மற்றும் கடின உழைப்பைத் தவிர்க்க, கல்வி, மருத்துவம், அறிவியல் சோதனை போன்ற மிக முக்கிய தேவைகளில் பயன்படுத்துவது. மற்றவைகளை படிப்படியாக மறு உற்பத்தி சுழற்சியின் மூலம் இயற்கை ஆதாரங் களில் தீர்த்துக் கொள்வது என்பதாகும்.***

***ஈ) மக்களின் தேவைக்கேற்ற உற்பத்தி, உற்பத்தியின் தேவைக்கான உழைப்பு, உழைப்பிற்கேற்ப ஊதியம், சம வேலைக்கு சம ஊதியம்.***

***உ) ஒவ்வொரு "மக்கள் ஆட்சி மன்றத்தின்" அரசியல் அதி காரத்திற்கு உட்பட்ட பகுதியும் தொழில்துறை, விவசாயத்துறை, பண்ணைத்துறை, சேவைத்துறை என அனைத் திலும் தன்னிறைவு பெற்ற பகுதியாக அமைவதற்கான அடிப்படையை கொண்டி ருப்பதாக மக்கள் சனநாயக பொருளாதார கொள்கை வகுக்கப்படும்.***

*மேற்கண்ட ஐந்து கூறுகளே தமிழ் தேச மக்கள் சனநாயக குடியரசின் புதிய பொருளாதார கொள்கையின் முக்கிய அடிப்படைக் கூறுகளாகும் இவ்வடிப்படையை கொண்டே அனைத்து துறைகளின் பொருளியல் கொள்கைகளும் அமையும்.*

**விவசாயத்துறை:**

• *நமது தமிழகத்தில் 91% நிலங்கள் சிறு, குறு நடுத்தர உழவர்களிடமே உள்ளது. நிலம் துண்டு, துண்டாக உள்ளதால் விவசாய உற்பத்தியை அதிகப்படுத்துவது என்பது சிக்கலான ஒன்றாகும் நிலங்கள் துண்டு துண்டாக இருப்பதால் நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்துவதற்கு தடையாக உள்ளது. எனவே விவசாயத் துறையில் உடனடியாக கீழ்வரும் திட்டங்கள் நிறைவேற்றப்படும்.*

• *சிறு, குறு நடுத்தர விவசாயிகளுக்கு அவர்களின் நில உரிமைக்கேற்ப உற்பத்தியில் பங்குகளை அளிப்பது என்ற ஒப்பந்த அடிப்படையில் அரசே தலையிட்டு அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் ஒருங்கிணைந்து வரையறுக்கப்பட்ட அளவிலான நிலங்கள் கூட்டு பண்ணைகளாக்கப்படும்.*

• *ஒருங்கிணைக்கப்பட்ட கூட்டுப் பண்ணைகளுக்கு டிராக்டர், நாற்று நடும் இயந்திரம், அறுவடை இயந்திரம், போன்ற நவீன கருவிகளை அரசானது கூட்டுறவுகள் அமைத்து அதன் மூலம் வழங்கப்படும்.*

• *லாப நோக்கிலான சந்தையை அடிப்படையாக கொண்ட விவசாய உற்பத்தியை ஒழித்து, மக்களின் தேவையை முழுமையாக நிறைவேற்றும் வகையிலான கட்டுப்படுத்தப்பட்ட சந்ததையை அடிப்படையாக கொண்ட விவசாய உற்பத்தி வளர்த்தெடுக்கப்படும்.*

• *தற்போது நடைமுறையில் உள்ள கடும் உழைப்பு சுரண்டல்களை ஒழித்து நவின முறையில் கருவிகளை பயன்டுத்தி உழைப்பை எளிமையாக்க வேண்டும். சாதிய சுரண்டல, ஒப்பந்த அடிமை, நவீன கொத்தடிமை, ஒப்பந்த விவசாயம் போன்ற கொடுமையான உழைப்பு சுரண்டல்கள், ஒழிக்கப்படும்.*

• *கூட்டு பண்ணையை நிர்வகிக்க, கூட்டு பண்ணையின் நில உரிமையாளர்களான சிறு, குறு, நடுத்தர உழவர்களை இணைத்து குழு உருவாக்கப்படும்.*

• *முதலாளிகளின் நலனுக்காக உருவாக்கப்பட்ட மணவளத்தை அழிக்கும் வீரிய வித்துக்கள், இரசாயன உரங்கள், பூச்சி கொல்லிகள், முதலியவற்றை முற்றாக தடைசெய்து, இயற்கை, மண்வளம், சத்துவளம், நீர்வளம் சார்ந்து, வீரிய வித்துக்கள், நமது பாரம்பரிய விதையை நவீனபடுத்துதல் ஆகியவை அறிவியல் மெய்ப்பித்தல் மூலம் படிப்படியாக நடைமுறைப்படுத்தி, நவீன அறிவியல் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி இயற்கை வேளாண்மை வளர்த்தெடுக்கப்படும்.*

• வேளாண் பொருட்களைப் பாதுகாப்பதற்கான கிடங்குகள் பரவலாக அமைக்கப்படும்.

• நவீன பெரிய அணைக்கட்டு என்பதற்கு மாறாக, சிறிய நீர் தேக்கங்கள் பரவலாக கட்டியமைப்பது, தமிழகத்தில் உருவாக்கப்பட்டுள்ள பாரம்பரிய பாசன முறைகளை நவீன அறிவியல் தொழில்நுட்பத்துடன் இணைத்து மேம்படுத்துதல்.

• காவிரி, பாலாறு...... போன்ற நதிநீர் சிக்கலையும், முல்லை பெரியாறு சிக்கலையும் தீர்ப்பதில் இரு தேசிய இன மக்களுக்கு இடையிலான முரண்பாடுகளைத் தூண்டி அரசியல் லாபம் பெறும் முதலாளித்துவ சதிகளை ஒழித்து, இரு தேசிய இன மக்களையும் ஒருங்கிணைத்து "சர்வதேச ஹெல்சிங்கி ஆற்றுநீர் ஒப்பந்தம்" அடிப்படையில் தீர்ப்பது.

• நதிகளை ஒன்றிணைத்தல் என்பது தோல்வியடைந்த அறிவியல் ஆகும். நதிகளின் போக்கை செயற்கையாக மாற்றுவது நீர் ஆதாரத்தை அழிப்பதற்குத்தான் இட்டு செல்லும்.

• கந்து வட்டி முற்றிலும் ஒழிக்கப்பட்டு, கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு இலகுவாக, மிகக் குறைந்த வட்டியில் கடன் கிடைக்க வழிவகை செய்யப்படும்.

• இந்திய பெருமுதலாளிகள், அந்நிய கார்ப்ரேட் நிறுவனங்களின் முதலாளித்துவ பண்ணைகள், சாதி நிலக்கிழார்களின் பண்ணைகள், தோட்டங்கள் எவ்வித இழப்பீடுமின்றி பறிமுதல் செய்து (இவை சுரண்டல் மற்றும் தனிநபர் லாபத்தை கொண்டுள்ளதால்) கூட்டு பண்ணையாக மாற்றப்படும்.

• மூலதன - சாதி நிலக்கிழார்களின் நிலங்கள், கோவில் மற்றும் மடம், அரசு நிலங்களை பறிமுதல் செய்து, "உழபவனுக்கே நிலம் சொந்தம்" "நிலமற்றவனுக்கு நிலம்" என்ற அடிப்படையில் குத்தகை தார்களுக்கும், (பெரும் குத்தகைதாரர், எதிர் குத்தகைதார் தவிர்த்து) நிலமற்ற கூலி எழை உழவர்களுக்கும் நிலம் பகிர்ந்தளிக்கப்படும்.

## தொழில் துறை

• முதலாளித்துவம் என்பதே "உற்பத்தியின் சமூக தன்மைக்கும், உற்பத்தியின் பலன்களை கைப்பற்றி கொள்ளும் தனியார் முதலாளித்துவ வடிவத்திற்கும் இடையே உள்ள முரண்பாடேயாகும்" என்ற அடிப் படையை உணர்ந்து, உற்பத்தி எப்படி சமூக தன்மைக்கு மாறியுள்ளதோ,

அதுபோல் உற்பத்தியின் பலனும் சமூகத் தன்மைக்கு மாற வேண்டியுள்ளது. இதற்கு தடையாக இருப்பது உற்பத்தி சாதனங்கள் தனிநபருக்கு (பெருமுதலாளிகளுக்கு) உடைமையாக இருப்பதே ஆகும். எனவே உற்பத்தியின் சமூக தன்மைக்கேற்ப, உற்பத்தி சாதனங்களும் சமூக உடைமையாக்க வேண்டும்.

• இந்திய பிராந்திய பெருமுதலாளிகளின், ஏகாதிபத்தியங்களின் நிதிமூலதனங்கள் மற்றும் சொத்துக்கள், மூலதன - சாதி- நிலக்கிழார்களின் மூலதனங்களும் இழப்பீடின்றி பறிமுதல் செய்யப்பட்டு சமூக உடைமையாக்கப்படும். தொழிலாளர்களால் தேர்ந்தெடுக்கப்படும் "தொழிலாளர் மன்றத்தின்" மூலம் தொழிற்சாலைகளை நிர்வகித்து உற்பத்தி முறைப் படுத்தப்படும்.

• அதிகார வர்க்க மூலதனத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் பொதுத்துறை, தொழில் நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் சமூக உடைமையாக்கப்படும். அதாவது இதன் வர்க்க தன்மையை மாற்றியமைக்க வேண்டும். அதிகார வர்க்க, முதலாளிகள், கார்ப்பரேட் நிறுவனங்கள், பெரு முதலாளிகள் லாபம் அடைவது முற்றாக ஒழிக்கப்பட்டு, இதன் பலன்கள் அனைத்தும் தொழிலாளர்களுக்கும் தமிழக மக்களுக்கும் முழுமையாக சேரும் வகையில் மாற்றியமைக்கப்படும்.

• தமிழக அரசு, வளரும் இந்திய ஏகாதிபத்தியம், உலக வங்கி மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுடன் போட்டுள்ள அனைத்து வகையான ஒப்பந்தங்களும் எவ்வித நிபந்தனையுமின்றி இரத்து செய்யப்பட வேண்டும். இதனால் ஏற்படும் எதிர்ப்பு மக்கள் பலத்துடன் முறியடிக்கப்படும்.

• எட்டு மணி நேர வேலை கட்டாய நடைமுறையாக்கப்பட்டு, படிப் படியாக 6 மணி நேர வேலையை இலக்காக கொள்வது.

• மக்களின் தேவைக்கேற்ற உற்பத்தி, உற்பத்தியின் தேவைக்கேற்ப உழைப்பு, உழைப்பிற்கேற்ற ஊதியம், சம வேலைக்கு சம ஊதியம், மேலும் அறிவு சார்ந்த உழைப்பிற்கும், உடல் உழைப்பிற்கும் உள்ள ஏற்றத்தாழ்வை நீக்கி சம ஊதியம், ஆணுக்கும், பெண்ணுக்கும் உள்ள ஊதிய ஏற்றத்தாழ்வை ஒழித்தல்.

• நிரந்தர வேலை, தொழிற்சங்க உரிமை, போராடும் உரிமை என தொழிலாளர்களின் அனைத்து உரிமைகளும் உத்தரவாதப்படுத்தப்படும்.

• மண்டல ஏற்றத்தாழ்வுகளைக் கணக்கில் கொண்டு பின்தங்கிய பகுதி களுக்குத் தனிக் கவனம் செலுத்தப்படும்.

## பண்ணைத்துறை

• கால்நடை மற்றும் கோழி, மீன், வளர்ப்பில் உள்ள ஏகபோகங்கள் ஒழிக்கப்படும். மூலதன - சாதி - நிலக்கிழார்கள், பெருமுதலாளிகள், ஏகாதி பத்திய முதலாளிகளின் பண்ணைகள் பறிமுதல் செய்யப்பட்டு கூட்டு பண்ணைகளாக்கப்படும்.

• தேசிய முதலாளிகள், பணக்கார விவசாயிகள், நடுத்தர விவசாயிகளின் தனிபண்ணைகள் நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்படும். ஆடு, மாடுகளை, கோழிகளை வளர்க்கும் சிறு, குறு நடுத்தர மற்றும் கூலி, ஏழை உழவர்களை கூட்டுறவின் கீழ் இணைத்து கூட்டுப் பண்ணை அமைத்து கொள்வதற்கான அனைத்து உதவிகளும் அளிக்கப்படும்.

• அறிவியல் என்ற பெயரில் முதலாளிகளால் லாப நோக்கில் அமைக்கப்பட்ட பண்ணைகள், செயற்கை தீவனங்கள், இரசாயன மருந்துகள் முற்றிலும் தடை செய்யப்படும். இயற்கையுடன் இணைந்த, வேளாண் மையை வளர்க்ககூடிய, இறைச்சி, மீன், பாலை ஆரோக்கிய உணவாக உருவாக்கக்கூடிய கூட்டுப் பண்ணைகள் அமைக்கப்படும்.

• முதலாளித்துவ ஒன்று குவிப்பு அடிப்படையிலான மிகப் பெரிய பண்ணைகளுக்கு பதில், நடுத்தர கூட்டுப் பண்ணைகளும், கூட்டுப் பண்ணைகளை ஒட்டிய சிறு காடு வளர்ப்பும், தோட்ட வளர்ப்பும், மேய்ச்சல் பகுதியும், விவசாயமும், தொழிற்சாலைகளும் “மக்கள் ஆட்சி மன்றத்தின்” கீழ் உள்ள பகுதிகளின் இயற்கை வளத்தை ஒட்டி திட்டமிட்டு வளர்த்தெடுக்கப்படும்.

## வணிகம்

• ரிலையன்ஸ், வால்மார்ட்.... போன்ற பெருமுதலாளிகளின், பன்னாட்டு முதலாளிகளின் சூப்பர் மார்க்கெட்டுகள், மால்கள் அனைத்தும் இழப்பீடின்றி கைப்பற்றப்படும். இவர்களுக்கு சொந்தமான குளிர்பதன கிடங்குகளும் கைப்பற்றப்படும்.

• உழவர்களிடம் இவர்கள் போட்ட ஒப்பந்தங்கள் ரத்து செய்யப்படும். உழவர்களுக்கு இவர்கள் கொடுத்த கடன் மற்றும் முன்பணங்கள் தள்ளுபடி செய்யப்படும். உழவர்களிடம் வஞ்சகமாக இவர்கள் அபகரித்து வைத்துள்ள முதலாளித்துவ பண்ணைகள் பறிமுதல் செய்யப்பட்டு உழவர்களின் கூட்டுப்பண்ணைகளாக மாற்றப்படும்.

• பெருமுதலாளிகளிடம் கைப்பற்றப்பட்ட வணிக வளாகங்கள், கூட்டுறவு பண்டக சாலைகளாக மாற்றப்படும். பொருட்களைப் பாது

காப்பதற்கான குளிர்பதன கிடங்குகள் இக்கூட்டுறவு பண்டக சாலையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படும். சிறு வணிகர்கள் இக்கூட்டுறவு பண்டக சாலைகளில் பணிக்கு அமர்த்தப்படுவார்கள். இடைத்தரகர்கள் முற்றிலும் ஒழிக்கப்படுவர்.

• சிறு வணிகர்களை இணைத்து, சிறு வணிகர்களின் கூட்டுறவு ஏற்படுத்தி அரசின் உதவியுடன் இவர்களுக்கு சுகாதாரமான, நவீன வசதி களைக் கொண்ட, பொருட்களைப் பாதுகாக்கும் குளிர்பதன கிடங்குகளைக் கொண்ட, கூட்டுறவு பண்டக சாலைகள் அமைக்கப்படும்.

• விவசாய பொருட்களைச் சரியான (விவசாயிகள் நிர்ணயித்த) விலைக்கு வாங்கி, பாதுகாத்து விற்பனை செய்வதற்கும், அனைத்து பொருட்களையும் சுகாதாதரமாகவும், நியாயமான விலையிலும் மக்கள் வாங்குவதற்கான ஒரே தீர்வு கூட்டுறவு பண்டக சாலைகள்தான். படிப் படியாக அரசே அனைத்து கூட்டுறவு பண்டக சாலைகளையும் அமைக்கும்.

## கல்வி, மருத்துவம்

• இந்திய பெருமுதலாளிகள், ஏகாதிபத்திய முதலாளிகள், மூலதன - சாதி- நிலக் கிழார்களுக்கு சொந்தமான அனைத்து கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள் அனைத்தும் இழப்பீடின்றி பறிமுதல் செய்யப்பட்டு அரசுடமையாக்கப்படும். மேற்கூறிய கார்ப்பரேட் முதலாளிகள் அல்லா தவர்களின் கல்வி நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகளை அரசு படிப் படியாக கையகப்படுத்தி, அவர்களின் வர்க்கத்தன்மைக்கேற்ப இழப்பீடு வழங்கும்.

• அனைத்து கல்வி சாலைகளும் உறைவிட கல்வி சாலை களாக்கப்படும். ஆரம்ப கல்வி முதல் ஆராய்ச்சி கல்வி வரை அனை வருக்கும் கட்டாயமாகவும், இலவசமாகவும், சனநாயக பூர்வமாகவும், அறிவியல் பூர்வமாகவும், தாய்மொழியிலும், கல்வி அளிக்கப்படும். கல்வி மக்களின் அடிப்படை உரிமையாக்கப்படும். சிறப்பு பிரிவினரான பெண்கள், தலித்துக்கள், மத சிறுபான்மையினர், பழங்குடிகள், மீனவர்களுக்கு இட ஒதுக்கீடு ன்பற்றப்படும். மாற்றுத் திறனாளிகள், மூன்றாம் பாலினத்தவருக்கு நிபந்தனையற்ற முன்னுரிமை அடிப்படையில் விரும்பிய கல்வி அளிக்கப்படும்.

• தரமான மருத்துவம் அனைத்து மக்களுக்கும் இலவசமாகவும், ஏழை பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு (ஒழித்தும்) சிறிதளவுகூட இல்லாமலும் அனைத்து அடிப்படை வசதிகளைக் கொண்டும் அளிக்கப்படும்.

• கல்வி, மருத்துவம் இவ்விரண்டையும் அரசே முழுமையாக ஏற்று நடத்தும். தனியார் நிறுவனங்கள் படிப்படியாக முற்றிலும் நீக்கப்படும்.

## சேவைத்துறை

• ஊக வாணிபம் முற்றிலும் ஒழிக்கப்படும். பெருமுதலாளிடமுள்ள வங்கிகள், போக்குவரத்து, தகவல் தொடர்பு அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடமை யாக்கப்படும்.

• மக்கள் சேவையைப் புறந்தள்ளி லாபம் ஒன்றையே குறிக்கோளாக கொண்டு செயல்படும் முதலாளித்துவ முறை ஒழிக்கப்பட்டு, மக்கள் சேவையை அடிப்படையாக கொண்டு இயங்கும் வகையில் சேவைத்துறை அனைத்தும் மாற்றியமைக்கப்படும்.

## மீனவத்துறை:

• இந்திய பெருமுதலாளிகள் மற்றும் ஏகாதிபத்திய முதலாளிகளின் உடைமையாக உள்ள பகாசுர கம்பெனிகளின் கடல் மீதான ஏகபோகம் ஒழிக்கப்படும். பகாசுர கம்பெனிகளின் நவீன படகுகள், கருவிகள், மீன் ஏற்றுமதி, இறக்குமதி நிறுவனங்கள், மீன் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் என அனைத்து கடல் சார்ந்த நிறுவனங்களும், மீன் பிடி தொழிற் சார்ந்த நிறுவனங்களும் சமூக உடைமையாக்கப்படும். இவை அனைத்தும் மீனவர்களின் கூட்டுறவு அமைப்பு மூலம் இயக்கப்படும்.

• "மீனவர்கள் கூட்டுறவு" நிர்வாகிகள் மீனவர்களால் தேர்வு செய்யப்படுவர். மீனவர்களின் கூட்டுறவுகளில் ஏற்கெனவே இருக்கும் பகாசுர கம்பெனிகள் மற்றும் சிறு முதலாளிகளின் ஆதிக்கம் முற்றிலும் ஒழிக்கப்பட்டு, அனைத்து மீனவ தொழிலாளர்களுக்கான கூட்டுறவாக முறைப்படுத்துதல், புதிதாக உருவாக்குதல் என்பதன் மூலம் மீனவர்களின் வாழ்க்கை திட்டமிட்ட வகையில் வளர்த்தெடுக்கப்படும்.

• மீன்பிடி தொழிலில் உள்ள பின்தங்கிய முறை ஒழிக்கப்படும். நவீன படகுகள், கருவிகளைப் பயன்படுத்தி மீன்பிடி தொழிலை நிரூபிக்கப்பட்ட அறிவியல் அடிப்படையில் படிப்படியாக வளர்த்தல் மூலம் மேம்படுத்தப் படும்.

• விசைபடகுகள், கட்டுமரங்களை வைத்துள்ள மீனவர்களை இணைத்து, 'மீனவர்கள் கூட்டுறவு' உருவாக்கி மீன்பிடி தொழிலை மேம்படுத்தி இவர்களின் வாழ்வாதாரம் உயர்த்தப்படும்.

• கந்துவட்டி கொடுமைகள் ஒழிக்கப்பட்டு மீனவர் கூட்டுறவு வங்கிகள் மூலம் மீனவ தொழிலாளர்களுக்கு எளிமையாக, விரைவாக, மிக குறைந்த வட்டியிலான கடனுதவி கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.

• முதலாளித்துவத்தின் இயற்கையின் மீதான தாக்குதலின் ஒரு பகுதியாக கடல்வள ஆதாரங்கள் மாசுபடுவதும், அழிவதும் தடுத்து நிறுத்தப்பட்டு, கடல் வளங்கள் பாதுகாக்கப்படும். கடல் வள ஆதாரங்கள் வளர்த்தெடுக்கப்படும். கடலின் மீதான மீனவர் உரிமை நிலைநாட்டப்படும்.

• தமிழகத்தில் கடல் எல்லையை ஒட்டி எழும் சிக்கல்கள் இரு நாட்டு மீனவர்களை இணைத்தும், இரு நாட்டு அரசும் சேர்ந்து தீர்க்க வேண்டும். கடல் எல்லை சம்மந்தமான சிக்கல்களுக்கும் நிரந்தர தீர்வு காணப்படும்.

**வனத்துறை:**

• இந்திய பெருமுதலாளிகள், ஏகாதிபத்திய முதலாளிகளின் வனத்தின் மீதான கட்டுப்பாடு முற்றிலும் ஒழிக்கப்பட்டு, வனத்தின் மீதான பழங்குடி மக்களின் உரிமை நிலை நாட்டப்படும்.

• பெரு முதலாளிகளின் ஆக்கிரமிப்புக்குள்ளாக்கப்பட்டுள்ள வனப்பகுதி இழப்பீடின்றி பறிமுதல் செய்யப்பட்டு, அவ்விடங்கள் மீண்டும் வனமாக்கப்பட்டு இயற்கை வளங்கள் பாதுகாக்கப்பட்டு, விரிவுபடுத்தப் படுவதோடு, அவை பழங்குடி மக்களின் உரிமை யாக்கப்படும்.

• பழங்குடிகளுக்கு தனிக்கவனம் செலுத்தப்பட்டு அவர்களின் வாழ்க்கைத்தரம் மேம்படுத்தப்படும். கூட்டுறவுகள் அமைக்கப்படும்.

• பழங்குடி மக்களிடம் உள்ள பின்தங்கிய அரை தொல்குடி உற்பத்தி முறையை ஒழித்து, அறிவியல் அடிப்படையிலான இயற்கை வளங்களை சார்ந்த வேளாண்மை முறையை அடிப்படையாக கொண்ட கூட்டுப் பண்ணைகள் அமைக்கப்பட்டு உற்பத்தி பலமடங்கு உயர்த்தப்படும்.

• பெருமுதலாளிகளுக்கு சொந்தமான தேயிலை தோட்டங்கள், மிளகு, ஏலக்காய் தோட்டங்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடமையாக்கப்பட்டு கூட்டுப் பண்ணைகளாக்கப்படும்.

• சிறு முதலாளிகளின் ஒப்புதலுடன் அவர்களின் தோட்டப் பயிர்களுக்கு ஏற்ப பங்குகள் அளிப்பது என்ற அடிப்படையில் தேயிலை தோட்டங்கள், மிளகு, ஏலக்காய், தோட்டங்களை இணைத்து கூட்டு பண்ணையாக்கப்படும்.

• வனப்பகுதியைப் பாதுகாப்பதன் மூலமும், வட்டங்கள் தோறும் சராசரி காடுகள் வளர்ப்பு திட்டத்தின் மூலமும் இயற்கை வளத்தை விரிவுபடுத்தி சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும்.

• பழங்குடி மக்கள் மீதான அனைத்து ஒடுக்குமுறைகளையும் முறியடித்து, பழங்குடி மக்கள் பாதுகாப்புடன், சுதந்திரமாக வாழ்வதற்கான உயர்ந்தபட்ச சனநாயக சூழல் உருவாக்கப்படும்.

## ஒடுக்கப்பட்ட சமூக மக்களுக்கான திட்டம்

**• நம் தமிழ்ச் சமூகத்தில் ஒடுக்கப்பட்ட சமூக மக்களாக பெண்கள், தலித்துகள், மீனவர்கள், மத சிறுபான்மையினர், பழங் குடிகள் உள்ளனர். பெரும் எண்ணிக்கையில் இல்லை யென்றாலும் மாற்றுத் திறனாளிகள், மூன்றாம் பாலினத்தவர், குழந்தைகள், முதியோரும் ஒடுக்கப்பட்ட மக்கள் பிரிவினராகவே உள்ளனர். இவர்களை ஒடுக்குமுறையிலிருந்து மீட்டெடுப்பதற்கான திட்டம் நம்முன் அவசியப்படுகிறது.**

**• ஒடுக்கப்பட்ட சமூகப் பிரிவினர் அனைவருக்கும் இட ஒதுக்கீடு பின்பற்றப்படும். கல்வி, வேலைவாய்ப்பு, அரசியல், அதிகாரம் என அனைத்திலும் உரிய பிரதிநிதித்துவம் அளிக்கப்படும். மாற்றுத் திறனாளிகள், மூன்றாம் பாலினத்தவர் போன்ற சிறிய பிரிவினருக்கு நிபந்தனையற்ற முன்னுரிமை விரும்பிய வாய்ப்புகளில் அளிக்கப்படும். ஒடுக்கப்பட்ட சமூக மக்கள் அனைவரும் அனைத்துத் தளங்களிலும் மற்ற சமூகப் பிரிவினருக்கு இணையாக பங்குபெற சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு, சிறப்பு திட்டங்கள் வகுக்கப்படும்.**

• *மேற்கண்ட அடிப்படையில் ஒவ்வொரு சமூக பிரிவினருக்கான சிறப்பு திட்டங்கள் பின்வருவன.*

• *மீனவர், பழங்குடிகளுக்கான திட்டம் மீனவத்துறை வனத்துறையில் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளதால் அதை மீண்டும் இங்கே குறிப்பிடத் தேவையில்லை.*

### பெண்கள்

• *குடும்ப சுரண்டல், உழைப்பு சுரண்டல் என்ற பெண்கள் மீதான இரட்டை நுகத்தடியை அகற்ற வேண்டும்.*

• *தொழிலாளி வர்க்கமாக, விவசாய கூலியாக., பண்ணை தொழி லாளியாக உள்ள பெண்கள் மீதான உழைப்பு சுரண்டலை முற்றாக ஒழிக்க இந்திய பெரு முதலாளிகள், ஏகாதிபத்திய முதலாளிகள், மூலதன - சாதி - நிலக்கிழார்களின் உற்பத்தி சாதனங்கள் சமூக உடைமையாக்கப் படும். ''தொழிலாளர் மன்றங்களில்'' பெண் தொழிலாளர்களுக்கு தொழிலாளர் எண்ணிக்கைக்கேற்ப பிரதிநிதித்துவம் இருக்கவேண்டும்.*

• *கூலி விவசாயப் பெண்களுக்கு ''நிலமற்றவர்களுக்கு நிலம்'' என்ற அடிப்படையில் நிலம் பகிர்ந்தளிக்கப்படும்.*

• மூத்தோன் வழி ஆணாதிக்கத்தின் முக்கிய அம்சமாக உள்ள பெண்களைக் குடும்ப சிறைக்குள் அடைத்து வைப்பது, பிள்ளை பெற்றுத் தரும் இயந்திரமாக பார்ப்பது, சொத்துரிமையை மறுப்பது, ஆணுக்கு கீழாக வைப்பது, கற்பு என்று தனக்கென எந்த லட்சியமும் இன்றி கணவனுக்காக மட்டுமே வாழ்வது, மறுமணத்தை மறுப்பது போன்ற அனைத்தையும் முற்றாக ஒழிப்பது.

• மேற்கூறிய அனைத்தையும் கட்டிக்காக்க உருவாக்கப் பட்டுள்ள ஆணாதிக்க கருத்தியலை வெளிப்படுத்தும் அனைத்து இலக்கியங்கள், பத்திரிக்கைகள், ஊடகத்தின் அனைத்து பிரிவுகள், மொழி, பேச்சு வழக்கு, சம்பிரதாயங்கள், சட்டங்களை அடியோடு ஒழிக்கப் பண்பாட்டு கலகங்களை அலை, அலையாக முன்னெடுப்பது.

• குடும்ப உழைப்பு சுரண்டலை முற்றாக ஒழித்து, ஆண், பெண் இருவரும் சமமாக இருக்கும் சனநாயக குடும்பங்களை மலரச் செய்வது.

• பெண்களுக்கான சொத்துரிமை பெயரளவில் இருப்பதை மாற்றி கட்டாய நடைமுறையாக்குவது, பெண்களுக்கான சொத்துரிமையை மறுக்கும் உறவுக்காரர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுப்பது, பெண்கள் தங்கள் இணையை சுதந்திரமாக தேர்வு செய்ய தடையாக இருப்பவர்மீது கடும் நடவடிக்கை எடுப்பது, வரதட்சணையை முற்றாக தடை செய்வது.

• ஆணுக்கு சமமாக அனைத்து துறையிலும் பெண்கள் முன்னேறு வதற்கான அனைத்து ஊக்குவிப்பு திட்டங்களும் தீட்டப்பட்டு தீவிரமான நடைமுறையாக்கப்படும்.

இந்தியத் துணைக் கண்டத்தில் மூத்தோன் வழி ஆணாதிக்கத்தைக் கட்டிக் காக்கும் நவீன பிராமணியம், தமிழகத்தில் உள்ள நவீன வெள்ளாளிய கருத்துக்கள், பெண்களை இரண்டாந்தர குடிமக்களாகப் பார்க்கும் எல்லா மதத்திலும் உள்ள மத அடிப்படை வாதத்தையும் பண்பாட்டு புரட்சி மூலம் தூக்கியெறிவது.

## தலித்துகள் :

• விவசாயத்தில் பெரும்பான்மையாக கூலி, ஏழை விவசாயிகளாக உள்ள தலித் மக்களுக்கு "நிலமற்றவர்களுக்கு நிலம்" என்ற அடிப்படையில் மூலதன - சாதி - நிலக்கிழார்கள், கோயில், மடம், அரசு நிலங்கள் மற்றும் தலித்துகளுக்கு உரிமையாக உள்ள ஆதி திராவிடர் நிலங்கள் இழப்பீடின்றி பறிமுதல் செய்து தலித்துகளுக்கு சொந்தமாக்கப் படும்.

• தொழிலாளர் மன்றம், மேல்மட்ட நிர்வாகம் மற்றும் தொழில் சார்ந்த நிர்வாகம், தொழிலாளர்கள் என அனைத்து மட்டத்திலும் தலித்துக்குரிய பிரதிநிதித்துவம் அளிக்கப்படும்.

• சாதி மறுப்பு திருமணம் செய்வது ஊக்குவிக்கப்படும். அக மணமுறையை (ஒரே சாதிக்குள் திருமணம் செய்வது) முற்றிலும் ஒழிப்பதற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும். சாதி கலப்பு திருமணம், சாதி மறுப்பு திருமணம் செய்தவர்களுக்கு சாதியற்றவர்கள் பட்டியல் என்ற அடிப்படையில் தனியாக இட ஒதுக்கீடு அளிக்கப்படும்.

• சாதி - நிலவுடமை உற்பத்திமுறை, பண்பாடு முற்றிலும் ஒழிக்கப் படும்.

• ஊர் தெருவில் நடக்க கூடாது, கோயில்களில் நுழைய கூடாது, சாதி சுடுகாடு, ஊர் தெரு, சேரித் தெரு என பிரித்திருப்பது, கடைகளில் சாதி பெயரில் விளம்பர பலகை வைப்பது, இரட்டை குவளை போன்ற எண்ணற்ற சாதிய விழுமியங்களை முற்றாக ஒழிப்பதற்கான பண்பாட்டு புரட்சியை முன்னெடுப்பது,

• சாதியத்தை கட்டிக்காக்கும் கருத்தியலாக உள்ள நவீன பிராமணியத்தை, நவீன வெள்ளாளியத்தை வீழ்த்தும் கருத்தியல்கள் நூறாயிரமாய் மலர செய்வதற்கான பண்பாட்டு புரட்சியை நடத்துவது.

## மதசிறுபான்மையினர்

• இந்து மதவெறி பாசிசத்திற்கு மூலாதாரமாக இருப்பது குறிப்பிட்ட கட்சி கிடையாது, முதலாளித்துவ சுரண்டலே இந்து மதவெறி பாசிசத்திற்கு அடிப்படையாகும். முதலாளித்துவ சமூகம் இருக்கும் வரை பாசிச அபாயம் தவிர்க்க முடியாத ஒன்றாகும். எனவே மத சிறுபான்மையின மக்களும், உழைக்கும் மக்களும் உடனடியாக கவனம் செலுத்த வேண்டியது. இந்து மதவெறி பாசிசத்திற்கு காரணமான கட்சியைத் தனிமைப்படுத்தி வீழ்த்துவதே என்றாலும், நிரந்தர தீர்வு என்பது முதலாளித்துவ சமூகத்தை முற்றிலும் தூக்கியெறிவதே ஆகும்.

• முதலாளித்துவ சமூகத்தைக் கட்டிக்காக்கும் இந்திய பெரு முதலாளிகளின் அரசியல் அதிகாரத்தை வீழ்த்துவதன் மூலம் மட்டுமே முதலாளித்துவ சமூகத்தை மாற்றியமைக்க முடியும்.

• இந்துமதவெறி அமைப்புகளைத் தடைசெய்வது, மத அடிப்படை வாதத்தை மக்கள் எதிர்ப்பின் மூலம் முறியடிப்பது மதத்தை தனிமனித உரிமையாக மட்டும் அங்கீகரிப்பது.

## மாற்றுத் திறனாளிகள், மூன்றாம் பாலினத்தவர், குழந்தைகள், முதியோர்கள்

*ஒடுக்கப்பட்ட மக்களில் இவர்கள் மிக பெரும் மக்கள் தொகையாக இல்லையென்றாலும் கணிசமாக உள்ள இவர்கள் கடுமையான சமூக ஒடுக்குமுறைக்கு உள்ளாகின்றனர்,*

### மாற்றுத் திறனாளிகள்

- *மாற்று திறனாளிகளின் சிக்கல்களை அறிவியல் அடிப்படையில் ஆய்வது. அவர்கள் விரும்பிய கல்வியைக் கற்கவும், வேலைவாய்ப்புகளை பெறவுமான அனைத்து வசதி வாய்ப்புகளையும் திட்டமிட்ட வகையில் ஏற்படுத்துதல்.*

- *சமூகத்தின் அனைத்து செயல்பாடுகளிலும் மாற்றுத் திறனாளிகள் சிரமமின்றி இயல்பாக வாழ்வதற்கான அனைத்து வசதி வாய்ப்புகளையும் ஏற்படுத்துதல்.*

- *மாற்றுத்திறனாளிகளிடம் உள்ள திறமைகளை விளையாட்டு, கலை, இலக்கியம்... அனைத்தையும் வெளிக்கொண்டு வருவதற்கான தன்னம்பிக்கை, ஊக்குவிப்பு, அதற்கான வசதி வாய்ப்புகளையும் திட்டமிட்டு செயல்படுத்துவது.*

- *மாற்று திறனாளிகள் இயல்பாக அனைத்திலும் பங்கு பெற உதவு வதற்கும், ஊக்கமளிப்பதற்கும் பதில் அவர்களை பரிதாபமாக பார்ப்பது, ஒதுக்கி வைப்பது, சமூகத்தின் அனைத்து செயல்பாடுகளிலும் அவர்களால் திறம்பட பங்கெடுக்க முடியும், அதற்கு தேவை பிரத்தியேகமான சில ஏற்பாடுகளே என்பதை மறுதலிப்பது போன்ற கருத்தியல்களை அடியோடு மாற்றுவதற்கான பண்பாட்டு இயக்கங்களை முன்னெடுப்பது,*

### மூன்றாம் பாலினத்தவர்

- *சமூகத்தில் மூன்றாம் பாலினத்தவரை இயற்கைக்கு அப்பாற்பட்ட மனிதராக பார்ப்பதையும், பாலியல் ரீதியாக மட்டுமே அணுகுவதையும், அருவெறுப்பாக-வேண்டாதவராக-கேலிசித்திரமாக பார்ப்பது, அணுகுவதையும் மாற்றுவதற்கான அனைத்து பண்பாட்டு கருத்தியல்களை கட்டியமைப்பது.*

- *மூன்றாம் பாலினத்தவர் சாதிய ஒடுக்குமுறையை விட மிகமிக மோசமான ஒடுக்கு முறைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். தலித்துகள் மீது மற்ற ஆதிக்க சாதிகள்தான் தீண்டாமையை கடைபிடிக்கின்றனர். ஆனால் மூன்றாம் பாலினத்தவர் தனது தாய், தந்தையாலேயே வெறுத்து*

*ஒதுக்கப்படுவதுடன், உற்றார் உறவினர் மற்றும் மொத்த சமூகத்தாலும் மிக மோசமான தீண்டாமைக்கு உள்ளாகின்றனர். இதை அடியோடு மாற்றியமைப்பது.*

- *மூன்றாம் பாலினத்தவர் சமூகத்தில் இயல்பாக வாழ்வதற்காக சூழலை கட்டியமைப்பது.*

- *மூன்றாம் பாலினத்தவர் கல்வி வேலைவாய்ப்புகளை பெறுவதில் உரிமையற்றவர்களாகவே உள்ளனர். ஒரு சிலர் பெரும் போராட்டங்களுக்கு பிறகு படிப்பதற்கோ, வேலைக்கோ சென்றால் அங்கு கொடுமையான சீண்டல்கள் மற்றும் பாலியல் ஒடுக்குதலுக்கு உள்ளாகின்றனர். இதே கொடுமையை சமூகத்திலும் எதிர்கொள்கின்றனர், இந்நிலையை மாற்றி மூன்றாம் பாலினத்தவர் தாங்கள் விரும்பிய கல்வி, வேலைவாய்ப்பை பெறுவதற்கான அனைத்து வாய்ப்புகளையும் அமைத்துத் தருவது.*

- *சொத்துரிமை மூன்றாம் பாலினத்தவருக்கு கிடைக்க வழிவகை செய்வது. சொத்துரிமையை மறுக்கும் உறவினர் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பது.*

- *மூன்றாம் பாலினத்தவரை பாலியல் தொழிலுக்கு உள்ளாக்குவதை முற்றிலும் ஒழிப்பது. பாலியல் தொழிலைத் தடை செய்வது, பாலியல் தொழிலிலிருந்து விடுவித்து அனைவருக்கும் வேலைவாய்ப்புகளை அமைத்து தருவது.*

- *மூன்றாம் பாலினத்தவர் தாங்கள் விரும்பிய பாலினமாக மாற உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கான மருத்துவ வசதியின்மையால், பல்வேறு இன்னல்கள், கொடுமைகளுக்கும், உயிரிழப்பிற்கும் உள்ளாகின்றனர். இதை மாற்றி இதற்கான மருத்துவ சிகிச்சை இலவசமாகவும், நவீன மருத்துவ வசதிகளுடனும் கிடைக்க வழிவகை செய்வது.*

- *மூன்றாம் பாலினத்தவர் திருமண வாழ்க்கையை சட்டப் பூர்வமாக்குவது.*

- *அனைத்துப் பதிவுகளிலும் பெண், ஆண் என்று இரு பாலினத்தவர் மட்டுமே குறிக்கப்படுவதை மாற்றி அனைத்து பதிவுகளிலும் பெண், ஆண், மூன்றாம் பாலினம் என்று குறிப்பது.*

| பெ | ஆ | மூ |
|---|---|---|
| F | M | T |

## குழந்தைகள், முதியோர்

• *சாதி-நிலவுடமை சமூகத்தின் குடும்ப அமைப்புக்குள் மூத்தோன் வழி ஆணாதிக்கமே நிலவியதால், குடும்ப அமைப்பு என்பது சனநாயகமற்ற மூத்தோன் ஒற்றை அதிகாரத்தின் கீழ் செயல்படும் அமைப்பாக இருந்தது. இத்தகைய குடும்ப அமைப்பில் குழந்தை வளர்ப்பு என்பது அறிவியல் பூர்வமற்று, சனநாயக பூர்வமற்று இருந்தது. தற்போதும் இத்தகைய கருத்தியல் ஆதிக்கத்தில் இருக்கும் பெற்றோர்கள் குழந்தையின் மீது அதிகாரத்தை ஏவுவதன் மூலம் குழந்தைகளைத் தங்கள் கட்டுபாட்டிற்குள் கொண்டுவர முயற்சிக்கின்றனர். நகர்ப்புறத்தில் வாழும் பெற்றோர்களிடமும் இக்கருத்தியியலே ஆதிக்கம் செலுத்துகிறது.*

• *2 வயது குழந்தைகள் கூட பள்ளியில் சேர்க்கப்படுகின்றனர். ஆசிரியர்களும் குழந்தைகள் மீது அதிகாரத்தை ஏவுவதன் மூலம் குழந்தைகளைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவர முயற்சிக்கின்றனர். மொத்தத்தில் குழந்தைகள் பெற்றோர், உறவினர், ஆசிரியர்களின் அடக்குமுறைக்கும், சித்ரவதைக்கும் உள்ளாக்கப்படுகின்றனர்.*

• *குழந்தைகள் மீது அடக்குமுறையை, ஏவுகின்ற பெற்றோர், உறவினர், ஆசிரியர்களைக் கட்டாயம் தண்டனைக்கு உள்ளாக்குவது.*

• *மூத்தோன் வழி ஆணாதிக்க, குறிப்பாக மூத்தோன் ஒற்றை அதிகாரத்தின் கீழ் செயல்படும் குடும்ப அமைப்பு முறையை ஒழித்து சனநாயக குடும்பங்களைக் கட்டியமைக்கும் பண்பாட்டு இயக்கங்களை முன்னெடுப்பது.*

• *குழந்தைகள் வளர்ப்பை அரசே ஏற்று பராமரிக்கும்.*

• *முதியோர்களுக்கான உறைவிடங்களையும் அரசே நிறுவி பராமரிக்கும்.*

• *குழந்தைகள், முதியோர் பராமரிப்பை எவ்வித கட்டணமும் இல்லாமல் இலவசமாக அரசே ஏற்று நடத்தும்.*

## மேலும் சில பொருளியியல் கொள்கைகள்

• *தமிழக அரசு, இந்திய அரசு, உலக வங்கி போன்ற பன்னாட்டு நிறுவனங்களுடன் போட்டுள்ள அனைத்து வகையான ஒப்பந்தங்களும் எவ்வித நிபந்தனையுமின்றி இரத்து செய்யப்படும்.*

• *தமிழ் தேசிய மக்கள் சனநாயக குடியரசின் தேவைகளை கணக்கில் கொண்டு ஏற்றுமதி, இறக்குமதி கொள்கை கடைபிடிக்கப்படும்.*

• *மக்களின் கருத்துற்கிணங்க ஒரே மாதிரியான வரிவிதிப்பு முறை உருவாக்கப்படும்.*

• *அனைவருக்கும் வேலை உத்திரவாதம் அளிக்கப்படும், வேலை அனைவரின் அடிப்படை உரிமையாக்கப்படும்.*

• *வெளித்தேசங்கள் மற்றும் நாடுகளிலுள்ள தமிழ் நாட்டை சேர்ந்தவர்கள் இங்கு தொழில் தொடங்க அனுமதிக்கப்படுவர்.*

• *அனைத்து விதமான பாகுபாடுகளும். அதாவது பாலின, சாதி, மத, இன, பிரதேச பாகுபாடுகளும் ஒழிக்கப்பட்டு அனைத்து மக்களுக்கும் சம உரிமை வழங்கப்படும்.*

## இ. பண்பாட்டு கடமைகள்

***தமிழ்த் தேசிய மக்கள் சனநாயக குடியரசானது சாதி - நிலவுடமை - முதலாளிய பண்பாட்டை ஒழித்து "மக்கள் சனநாயக பண்பாட்டை" படைப்பதையே தனது பண்பாட்டு கடமையாக கொண்டுள்ளது.***

### மக்கள் சனநாயக பண்பாடு

***1. நவீன பிராமணியம், தமிழ் தேசிய பிராமணியமான நவீன வெள்ளாளியம் போன்ற ஆளும் வர்க்கத்தின் பிற்போக்குதனமான கருத்தியல்களுக்கெதிராகவும், தொழிற்சங்க வாதம், சீர்திருத்த வாதம், பொருளாதார வாதம், சட்டவாதத்திற் கெதிராகவும், தலைமை வழிபாட்டிற்கெதிராகவும், பிழைப்புவாதத்திற்கெதி ராகவும், காலனிய, ஏகாதிபத்திய சீரழிவு பண்பாடுகளுக்கெதி ராகவும், தொடர்ந்து மக்கள் சனநாயக பண்பாட்டு இயக்கங்கள் நடைபெற வேண்டும்.***

***2. முதலாளிய தனி உடைமை, தனிநபர் வாத சிந்தனைகளுக்கு மாற்றாக கூட்டு சிந்தனை, கூட்டு செயல்வபாடு, கூட்டு வாழ்க்கை என்ற சிந்தனை போக்கை ஏற்படுத்த வேண்டும். இவை பல பண்பாட்டு புரட்சிகளின் அங்கமாக தொடர்ந்து நடைபெற வேண்டும்.***

***3. சனநாயக பண்பையும், அறிவியல் பூர்வமான கண்ணோட் டத்தையும் வளர்த்தெடுப்பது.***

இவைகளே சுதந்திர தமிழ்த் தேசிய மக்கள் சனநாயக குடியரசின் பண்பாட்டு கொள்கையின் அடிப்படை கூறுகளாகும்.

- நவீன பிராமணியத்தின் இந்து-இந்தியா-இந்தி என்ற கருத்தியலையும், நவீன வெள்ளாளியத்தின் ஆதிக்க சாதி ஆளும் வர்க்க தமிழ் தேச கருத்தையும், மூடநம்பிக்கை, மூத்தோன் ஆணாதிக்கத்தையும், இந்திய இறையாண்மை என்ற கருத்தியலையும் பண்பாட்டு புரட்சியின் மூலம் தகர்த்து தமிழ் தேசிய விடுதலையானது பல லட்சக்கணக்கான மக்கள் பங்கேற்கும் போராட்டத்தின் மூலம் உறுதி செய்யப்படும்.

- பெரு முதலாளிகள், அதிகாரவர்க்க முதலாளிகளிடமிருந்து அனைத்து ஊடகங்களும் இழப்பீடின்றி பறிமுதல் செய்யப்பட்டு சமூக உடைமையாக்கப்படும். அனைத்து ஊடகங்களிலும் உள்ள சாதி நிலவுடமை, ஏகாதிபத்திய சீரழிவு பண்பாடு ஒழிக்கப்பட்டு மக்கள் சனநாயக பண்பாடானது வளர்க்கப்படும். மக்கள் கலை வடிவங்கள், சினிமா, குறும் படம், சின்னத்திரை, நாடகங்கள் என அனைத்திற்கும் புத்துயிர் கொடுத்து புதிய பரிமாணத்தில் வளர்த்தெடுக்கப்படும். அனைத்து கலைஞர்களின் வாழ் வாதார சிக்கல் தீர்க்கப்படும். சினிமா, சின்னத்திரையில் நடிகர்களுக்கும், மற்ற உழைப்பாளிகளுக்கும் உள்ள ஏற்ற, தாழ்வு ஒழிக்கப்படும்.

- முதலாளித்துவ சமூகத்தை தூக்கியெறிவதன் மூலம் இந்து மதவெறி பாசிசத்திற்கும் முடிவுக் கட்டப்படும். மத அடிப்படை வாதங்கள் மக்கள் எழுச்சியின் மூலம் முறியடிக்கப்படும். மதமானது தனி மனித உரிமை என்ற அடிப்படையில் மட்டுமே அனுமதிக்கப்படும்.

- சாதியம் ஒழித்து-சாதியற்ற சமூகத்தைப் படைப்பது.

- மூத்தோன் வழி ஆணாதிக்கத்தை ஒழித்து-பெண், ஆண் சமத்துவ சமூகம் படைப்பது.

- முதலாளித்துவ உற்பத்தி நிலவக்கூடிய நகர்ப்புற பகுதிகளில் உள்ள சாதி - நிலவுடமையின் பிற்போக்கு அம்சங்களை பண்பாட்டு புரட்சியின் மூலம் தூக்கியெறிவது.

- தலைவிதி, முன் ஜென்ம பாவ, புண்ணியம், கடவுள் நம்பிக்கை, மூடத்தனமான சடங்குகள், சம்பிரதாயங்கள் மற்றும் சாதியத்தை, மூத்தோன் வழி ஆணாதிக்கத்தை, பொய்யான இந்திய தேசியத்தை, “இந்திய இறையாண்மை” என்ற கருத்தியலை, மூடநம்பிக்கை அடிப்படையிலான சிந்தனா முறையை, நவீன பிராமணியம், நவீன வெள்ளாளியத்தை உயர்த்திப் பிடிக்கும் இலக்கியங்களை, சினிமா, சின்னத்திரை, நாட்டுபுற பாடல்கள், ஊடகங்கள், மக்களின் பேச்சுமொழி என அனைத்தையும் புரட்டிப் போடும்

பண்பாட்டு புரட்சியை முன்னெடுப்பது. மாற்றாக அறிவியல் பூர்வமான, சனநாயக பூர்வமான சிந்தனா முறையை வளர்ப்பது.

• மக்கள் தங்கள் மீது நம்பிக்கையற்று, எத்தகைய விமர்சனத்தையும் அனுமதிக்காத, சனநாயகமற்ற, சர்வதிகாரிகளை தலைவர்களாக பூஜிப்பதை விட்டு.

மக்கள் தங்களை விடுவிக்க தாங்கள் அமைப்பாய் திரள வேண்டியதன் அவசியத்தை உணர வைப்பது, மக்கள்தான் வரலாற்றை படைக்கின்றார்கள் என்ற வரலாற்று உண்மையை நிறுவுவதன் மூலம் தலைவர்களை வழிபாட்டுக்குறியவர்களாய் கண்மூடித்தனமாய் நம்புவதை தவிர்த்து. தலைமையை தட்டி கேட்கவும், சனநாயகமற்ற, சர்வாதிகார தலைமைகளை தூக்கியெறியவும் மக்களுக்கு பயிற்றுவிப்பது.

• மக்கள் தங்களுக்கான தலைவர்களை, தங்களுக்கான உறுதிமிக்க வர்க்க போராட்டத்தின் மூலமே உருவாக்க முடியும்.

• கொள்கை அடிப்படையில் இல்லாமல் தனிநபர் வழிபாடு அடிப் படையில் கட்சியில் இணைவதை மாற்ற வேண்டும், பிழைப்பு வாத தலைவர்களை, பிழைப்புவாத கும்பல்களை உருவாக்கும் தலைமைகளை தூக்கியெறியவேண்டும்,

• மக்கள் சனநாயக குடியரசு கட்சியானது தமிழ் தேசிய மக்கள் சனநாயக குடியரசுக்காக முன்வைத்துள்ள அரசியல், பொருளாதர, பண்பாட்டு கடமைகளை அரசியல் அதிகாரத்தின் மூலம் நிறைவேற்ற முயலும் அதே வேலை, பரந்துப்பட்ட மக்கள் மத்தியில் தொடர்ந்த பண்பாட்டு புரட்சியை வெற்றிகரமாக மேற்கொள்வதன் மூலமே மேற்கூறிய கடமைகளை முழுமையாக நிறைவேற்ற முடியும் என்பதில் உறுதி பூண்டுள்ளது.

• சுதந்திர தமிழ்த் தேசிய மக்கள் சனநாயக குடியரசின் அரசியல் அதிகாரத்தின் ஒவ்வொரு அலகையும் மக்கள் கண்காணிக்கவும், தவறு செய்யும் அதிகாரிகளை தட்டி கேட்கவும், தேவைபட்டால் மக்கள் திரள் போராட்டங்களை முன்னெடுக்கவுமான முன்முயற்சியை கட்டியமைப் பதற்கு மக்கள் சனநாயக குடியரசு கட்சியானது தொடர்ந்து முயற்சிக்கும்.

• மக்கள் சனநாயக குடியரசு கட்சியையும், அது கட்டியமைக்கும் பல்வேறு மக்கள் திரள் அமைப்புகளையும், தமிழ் தேசிய விடுதலைக்கான ஐக்கிய முன்னணியையும் பரந்துபட்ட மக்கள் கண்காணிக்கவும், கட்சி தவறு செய்யும் பட்சத்தில் மக்கள் துணிவுடன் விமர்சிக்கவும் பயிற்றுவிப்பது.

# கருத்தியல் தளத்தில்

• சாதி - நிலவுடமை, முதலாளித்துவ சமூகத்தை கட்டிகாக்கும், ஆளும் வர்க்க கருத்தியிலான நவீன பிராமணியம் மற்றும் சீர்திருத்த வாதத்தையும், தமிழக ஆதிக்க சக்திகளின் கருத்தியிலான நவீன வெள்ளாளிய கருத்தியலையும் நாம் முதன்மையான இலக்காக கொண்டு வீழ்த்த வேண்டும்.

• இந்திய துணை கண்ட அளவிலான மக்கள் விடுதலை, தமிழ் தேசிய விடுதலையை முன்வைக்கும் கட்சிகள், இயக்கங்கள் மத்தியில் திருத்தல் வாதமும்., சீர்திருத்த வாதமும் தீவிர தாக்கத்தை கொண்டுள்ளன. சீர்திருத்த வாதம் இக்கட்சிகள் மத்தியில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இது சமூகங்களின் வளர்ச்சி போக்கை காண்பதிலும், மக்களை அணி திரட்டுவதன் வடிவிலும், நடைமுறை உத்திகளிலும் தீவிர ஆதிக்கத்தை செலுத்துகின்றன. அறிவு மறுப்பியல் (அனுபவவாதம்) அடிப்படையாகவும், வரட்டு கோட்பாட்டுவாதமும் (Dogmatism) இணைந்து பெரும்பாலான தவறுகளை தோற்றுவிக்கின்றன. இக் கருத்தியல்களை முறியடிக்க நாம் இக்கட்சி களுடன் ஒற்றுமை - பேராட்டம் - ஒற்றுமை என்ற அடிப்படையில் திட்ட வட்டமான கருத்தியல் போராட்டத்தை நடத்த வேண்டும்.

• பெரியாரும், அம்பேத்காரும் கருத்தியல் தளத்தில் ஆளும் வர்க்க கருத்தியலான பிராமணியத்தின் மீது மிகச் சரியாகவே தாக்குதல் தொடுத்தனர். அதே வேலை அரசியல், பொருளாதார தளத்தில் இவர்களின் பங்கை நாம் விமர்சனத்துடன் நோக்க வேண்டும். இவர்களின் கருத்தை நாம் முன்கொண்டு செல்லும் அதே சமயம், ஒடுக்கப்பட்ட மக்களின் நம்பிக்கைக்கு உரியவர்களாக இவர்களின் கருத்து இருக்கின்றது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இக்கருத்தியலைக் காட்டி உருவான அரசியல் தரகர்களையும், பெரு முதலாளிகளையும் எவ்வித தயவு தாட்சண்யமும் இன்றி தாக்குதல் தொடுக்க வேண்டும். இத்தலைமைகளின் சந்தர்ப்பவாதம் மற்றும் பிழைப்புவாதத்தை அம்பலப்படுத்த வேண்டும்.

• உலகமயமாக்கல் சூழலை ஒட்டி பெருமளவில் உருவாகியுள்ள நடுத்தர வர்க்க பின்னணியைக் கொண்ட குட்டி முதலாளித்துவ சக்திகள் தமிழ்த் தேச விடுதலை, மக்கள் விடுதலை பற்றி அக்கறையற்றவர்களாகவே உள்ளனர். நாலு பேர் சேர்ந்தாலே தன் தலைமையில் புதிய கட்சியை உருவாக்கித் தன்னை முன்னிலைப்படுத்தும் குறுநில மன்னர் (பாளையக்காரர்களாகவும்) போக்கையும், மக்கள் நலனை முன்னிறுத்தாமல் தனது நலனை முன்னிறுத்தும் இவர்களின் தான்தோன்றித் தனத்தையும்,

சாதிய இனக்குழு வாதத்தையும், குட்டி முதலாளிய அமைப்புகளின் தலைமையை அம்பலப்படுத்தி தனிமைப்படுத்துவதன் மூலம் அதன் அணிகளை ஒற்றுமை - போராட்டம் - ஒற்றுமை என்ற அடிப்படையில் ஐக்கியபடுத்திட வேண்டும்.

## ஓட்டும், வேட்டும் ஆயுதமல்ல, மக்களே ஆயுதம்!

ம.ச.கு. கட்சி போராட்ட வடிவங்களைப் பொருத்தவரை அனைத்து வகையான வடிவங்களையும் மேற்கொள்ளும். நாம் எடுக்கும் வடிவங்களில் மக்கள் பங்கேற்க தயாராக இருக்க வேண்டும் என்பதே முன்நிபந்தனையாகும்.

தேர்தலைப் பொருத்தவரை தேர்தல் பங்கேற்புவாதம் (இந்திய கம்யூனிஸ்டுகட்சி, மார்க்சிஸ்டு கட்சி) புறக்கணிப்பு வாதம் (மாவோயிஸ்டுக் கட்சி) இரண்டையும் ம.ச.கு. கட்சி நிராகரிக்கிறது. இருசாராருமே தேர்தல் வடிவத்தை புரட்சியின் பாதையாக (மூல உத்தியாக) உயர்த்தி பார்க்கும் கண்ணோட்டத்திலேயே இத்தவறுகளை செய்கின்றனர்.

ம.ச.கு.கட்சி குறிப்பிட்ட தேர்தலை ஒட்டியே தனது உத்திகளை வகுத்துக் கொள்ளும் அன்றைய அரசியல் சூழல், மக்களின் தயார்நிலை, கட்சியின் பலம் இவைகளை ஒட்டியே தீர்மானிக்கும்.

மற்றபடி, ம.ச.கு, கட்சி சட்டமன்ற, நாடாளுமன்றங்களை அம்பலப்படுத்துதல், பரப்புரை, போராட்டம் என்ற வடிவங்களில் பயன்படுத்தும் கண்ணோட்டத்தையும் கொண்டிருக்கிறது.

## அயலக கொள்கை

• இந்திய ஒன்றிய அரசின் அனைத்து மக்கள் விரோத ஒப்பந்தங்களை இரத்து செய்வது

• இந்திய பெரு முதலாளிகளின் நலன் சார்ந்து தீர்மானிக்கப்பட்ட அயலுறவு கொள்கைகள் அனைத்தையும் மாற்றி, நேருவின் அய்ந்து நெறி கொள்கையை (பஞ்சசீலம்) அனைத்துலக உறவுகளில் கையாள்வது

அ) நாடுகளின் சுயாட்சி உரிமையையும், பிரதேச ஒருமைப் பாட்டையும் மதித்தல்.

ஆ) ஆக்கிரமிப்பை எதிர்த்தல்

*இ) நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடாது இருத்தல்.*

*ஈ) சமத்துவ அடிப்படையில் பரஸ்பர நலன்களை அமைத்தல்*

*உ) சமாதான சகவாழ்வை கடைப்பிடித்தல்*

• *உலகில் நடக்கும் ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டங்களுக்கு ஆதரவு அளித்தல்.*

# கூட்டகப் பொதுத் திட்டம்

• *இந்திய பிராந்திய பெருமுதலாளிகள் - இவர்களின் கூட்டாளிகளான ஏகாதிபத்திய முதலாளிகள், மூலதன - சாதி - நிலக்கிழார்கள், அதிகார வர்க்க முதலாளிகள் தங்களின் அரசியல் அதிகாரத்தின் மூலம் இந்திய துணைக் கண்டத்தில் உள்ள அனைத்து மொழி வழி தேசிய இனங்கள், பழங்குடி தேசங்களை இந்திய ஒன்றிய அரசின் சிறையில் அடைத்து வைத்துள்ளனர். எனவே, இந்திய துணைக் கண்டத்தில் உள்ள மொழிவழி தேசிய இனங்கள், பழங்குடி தேசங்கள் இந்திய ஒன்றிய அரசை வீழ்த்தாமல் விடுதலை பெற முடியாது.*

***இத்தகைய நிலையில் பொது எதிரியை வீழ்த்த இந்தியத் துணை கண்டத்தில் உள்ள அனைத்து உழைக்கும் மக்கள் விடுதலைக்கான, தேசிய விடுதலைக்கான கட்சிககளையும் கீழ்கண்ட பொது திட்டத்தின்கீழ் ஐக்கியப்படுத்த வேண்டும்.***

## கூட்டக பொது திட்டம்

***1. இந்தியாவில் உள்ள இதர மொழி வழி தேசிய இனங்கள், மற்றும் பழங்குடி தேசங்களுடன் இணைந்து இந்திய ஒன்றிய அரசை வீழ்த்தி, தமிழ் தேசிய விடுதலையை உறுதிப்படுத்துவது.***

***2. தேசங்களுக்கிடையிலான (தமிழ்த் தேசம் உட்பட) எல்லை சிக்கலானது வரலாற்றின் அடிப்படையிலும், மக்களின் விருப்பங்களை கணக்கில் கொண்டும் பல்வேறு தேச மக்களிடையே முரண்பாட்டைத் தவிர்த்து இணக்கமான முறையில் தீர்ப்பது.***

***3. விடுதலை பெற்ற தேசங்களின் மக்கள் சனநாயக மற்றும் சோசலிச குடியரசுகள் விருப்பத்துடன் கூட்டரசில் இணைவது (அ) தனியே பிரிந்து போவது என்பதை மக்களின் பொது வாக்கெடுப்பு மூலம் தீர்மானித்துக் கூட்டரசை உருவாக்குவது.***

***4. வரலாற்றில் அதிகபட்ச தேசிய உரிமைகளை நடைமுறை படுத்திய சோவியத்தின் (முன்னால்) அனுபவத்திலிருந்து, அதன் சரி, தவறுகளிலிருந்து பெறப்பட்ட படிப்பினைகளை கணக்கில் கொண்டு கூட்டரசின் அரசியல் சாசனம், அதன் அதிகார எல்லை பற்றிய வரைவு அறிக்கை தயார் செய்து கூட்டரசில் இணைந்துள்ள அனைத்து சனநாயக, சோசலிச குடியரசுகளின் மக்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்தி இறுதி செய்வது.***

***5. அனைத்து சனநாயக, சோசலிச குடியரசுகளின் கூட்டரசை தெற்காசியா அளவில் உருவாக்குவதை நோக்கமாக கொண்டு செயல்படுவது. இத்தகைய நோக்கத்தின் அடிப்படையில் தெற்காசிய அளவில் ஐக்கிய முன்னணியைக் கட்டியமைப்பதன் மூலம் வளரும் இந்திய ஏகாதிபத்தியத்தின் தெற்காசிய அளவிலான அனைத்து வேர்க் கால்களையும் வெட்டி எறிவது.***

⋆⋆⋆

**தொடர்புக்கு :**

**துரைசிங்கவேல்,**
*தலைவர்,*
*மக்கள் சனநாயக குடியரசு கட்சி*
*9003490422*

**பழனி,**
*பொதுச் செயலாளர்,*
*மக்கள் சனநாயக குடியரசு கட்சி*
*9176264717*

**முகிலன்,**
*பொருளாளர்,*
*மக்கள் சனநாயக குடியரசு கட்சி*
*8190818041*